Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
டிச.17-23,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU S… …IL WEEKLY முரசு 132



## காதல் உலகில் கண்ணீர்த் துளிகள்

## போர் முனையில் திருப்பம் வருமா பொதுத்தேர்தல்?



## செயல் இழக்கும் கண்ணி வெடிகள்

நவீன போர் நுட்பம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## ஆறுதல் மட்டும் போதாது

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யாழ் நகர் படையினரின்
கட்டுப்பாட்டில் வந்தபின்னர்
ஜனாதிபதி
ஆற்றிய உரை
அனைவராலும் பாராட்டப்படுகிறது.

தெற்கில் வெற்றிக்களிப்பில்
விஷமிகள் சிலர்-
கைவரிசை காட்டலாம்
என்று நினைத்ததும்
நடக்கவில்லை என்பது
ஆறுதலான விஷயம்.

வடக்கு- கிழக்கில்
வாழும் மக்களைப் பொறுத்தளவில்
நிரந்தர நிம்மதிக்கான
எதிர்பார்ப்பே நிறைந்திருக்கிறது.

இதுவரையில்லாத வகையில்
பெரும் துன்பங்களை
தோளில் சுமந்துகொண்டிருக்கும்
மக்கள் எதிர்பார்ப்பது
வெறுமனே நிவாரணம் மட்டுமல்ல,
நியாயமான
அரசியல் தீர்வொன்றை
அரசு முன்வைக்க வேண்டும்
என்பதே மக்களின்
அடிப்படையான எதிர்பார்ப்பு!

யாருக்கும் நோகாத
முறையில்-வகையில்
ஜனாதிபதி பேசியிருக்கிறார்.
வரவேற்கக்கூடிய பேச்சு!

ஆனால்-
மரணப் படுக்கையில் உள்ள
நோயாளிக்கு
ஆறுதல் மட்டும் மருந்தாகாது.
தேவையான சிகிச்சையும்
உடனடி அவசியம்.

தெருவில் நிற்கும் மக்களுக்கு
தேறுதல் சொல்வது
மட்டும் தீர்வாகாது.
அவர்கள் திரும்பிச் சென்று
வாழக் கூடிய
வழிவகைகளும் முக்கியம்.

வடபுலப் போரில்
பெற்றுள்ள பலன்களை
அடுத்த தேர்தல் வெற்றிக்கான
வாக்குகளாக மாற்றிக் கொள்ளவும்
அரசாங்கம்
விரும்புவது இயற்கைதான்.

எந்தவொரு கட்சியும்
அப்படித்தான் நடந்துகொள்ளும்.
எந்தவொரு அரசியல் கட்சியும்
அதிகாரத்திற்கு வரவிரும்புவதும்
அதிகாரத்தில் நீடிக்க நினைப்பதும்
புதிருமல்ல. புதுமையுமல்ல.

சாதாரணமாக ஒரு தெருவை
போடவைத்துவிட்டே
அதனை தெருத் தெருவாக
சொல்லிக் கொள்ளும்
அரசியல் வாதிகளும் உண்டு.

எனவே-அரசாங்கம்
யாழ் நகர் சென்றுவிட்டு
நாவடங்கி இருக்க வேண்டும்
என்று எதிர்பார்ப்பது தப்பு!

ஆனால்- அரசுக்கு
பொறுப்புள்ள ஒரு பணி
இருக்கிறது என்பது உண்மை.

தற்போது தனக்கு
கிடைத்துள்ள வெற்றி வாய்ப்பை
தீராத இனப் பிரச்சனையின்
தீர்வுக்காக பயன்படுத்த வேண்டும்.

நாளைய தலைமுறைக்கும் நலம்
தரும் பொறுப்பு அது.
அதைச் செய்ய
ஜனாதிபதிக்கு
நல்லதொரு வாய்ப்பு
இன்று வசப்பட்டுள்ளது.

வடபுலப் போரில்
இன்று பெற்றுள்ள வெற்றி
நாட்டில் நிச்சயமற்ற தன்மை
நீடிக்கும் வரை நிரந்தரமானதல்ல.

அந்த நிச்சயத்தன்மையை
ஏற்படுத்தக் கூடியது
நியாயமான
அரசியல் தீர்வு மட்டுமே!
அதுவே நிரந்தர வெற்றி!

தாமதம் இல்லாமல்
அதனைச் செய்தால்
அந்த வெற்றி விழாவை
கொண்டாட வருமாறு
வடக்கு-கிழக்கு மக்களே
ஜனாதிபதிக்கு
அழைப்பு விடுத்து வரவேற்பார்கள்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## நித்தியமானதில் சார்ந்திருங்கள்

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடன் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை" (மத்தேயு 6:19,20) என்பது இயேசு பிரான் மொழிந்த வார்த்தைகள்.

அன்பு வாசகர்களே! உலகத்திலே எமது யாத்திரையை கூடார வாசிகளைப் போல் கொண்டு செல்ல நாம் பழக வேண்டும். "நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது" (பிலிப்பியர் 3:20) தினமும் இறைவன் எமக்கு ஈயும் நன்மைகளை நன்றியோடு ஏற்று, அவற்றை அவர் நாமம் மகிமைப்படும்படி வாழப் பிரயோசனப் படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், உலகப் பிரகாரமான யாவுமே அத்தியமானவை என்பதை நினைவில் நிறுத்தி அவற்றில் அதிகமாக சார்ந்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

"காணப்படுபவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (கொரிந்தியர் 5:18) ஆண்டவரை மாத்திரமே முடிவு பரியந்தம் முழுமையாக சார்ந்திருக்க முடியும். அவர் அருள் நித்தியமானது. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3:16)

செ.கீதாஞ்சலி, கொழும்பு.06

## அருள் மறைக்கு அல்லாஹ்விடமே கூலி

ஒருவர் குர்ஆனைக் கொண்டு மனிதர்களிடம் வாங்கிச் சாப்பிடுகின்ற எண்ணத்தில் அதனை ஓதினால் கியாமத்து நாளில் அவருடைய முகத்தில் சதையில்லாது வெறும் எலும்பாக வருவார் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

ஒரு சமயம் ஹஜ்ரத் உபை இப்னுகஅப் (ரலி) அவர்கள் அண்ணல் அவர்களிடம் வந்து "நான் ஒரு மனிதருக்கு ஒரு சூராவைக் கற்றுக் கொடுத்தேன். அதற்கு அவர் ஒரு குளிசையை அன்பளிப்பாக எனக்குக் கொடுத்தார்" என்றார்கள்.

இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் "அப்படியாயின் நீர் நரகத்தில் இருந்து ஒரு குளிசையை வாங்கிவிட்டீர். இதன் மூலம் நரகத்தின் ஒரு நெருப்புத் துண்டை உம்முடைய தோளில் தொங்க விட்டுக் கொண்டீர்" என்று கூறினார்.

யாராவது ஒருவர் குர்ஆனை ஓதிய பின் ஏதேனும் கேட்க வேண்டுமானால் அவை அல்லாஹ்விடமே கேட்கப்பட வேண்டும். இது அவனுடைய அருள் மறையே. மாறாக மனிதர்களிடம் இதற்காக எதனையும் எதிர்பார்க்கக் கூடாது.

எம்.சி.கலீல், கல்முனை.05.

## கவிதைப்போட்டி இல-129

### பரிசுக்குரிய கவிதை

### எவர் வருவார்?

பாடுபட்டு சேர்த்து வைத்த
பொருளழிக்கப் போருண்டு- இந்த
வாடிவிட்ட பயிருக்கு
வார்க்க நீர் யாருண்டு?

ச.மகாலிங்கம், வெலிமடை.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**என் அழுதாய்??**

பாலுக்கா நீயழுதாய்...?
பாலுக்கோ நானழுதேன்!
போரென்று யாரோ அழ...
போனதெல்லாம் எம் செல்வம்- இன்று
போக்கிடமின்றி நாம்
போவதுதான் எங்கு கண்ணே??

சிவலிங்கம் சஞ்சீவன், குருக்கள்மடம்.

**வாழ்க்கை**

'ஆடு அடங்கும்
வாழ்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா'-
அது கூடவா? இல்லை
எமக்கு.....?

பிலிப் சேர்ச்சில். வத்தளை.

**?**

அகதி அந்தஸ்துக் கூட
மறுக்கப்பட்டவர்களே....!
உங்கள்
முகங்களில் தெரிவது
விடியலின் கீற்றா....!
சோகத்தின் ஊற்றா.....?

சுபாவரன், கண்டி.

**நீ உறங்கு**

செந்தூரப் பூவே செந்தமிழர்தேனே
சாய்ந்தாடிக் கண்ணுறங்கு
கடுந்தூரப் பயணம் செய்திங்குவந்தோம்
காலெல்லாம் களைத்துப்
படுந்துன்பங்காண ஏனிங்கு பிறந்தாய்
பாழாகிப் போனது வீடு
விடுந்தூரக் கணைகள் கொன்றன ஊரை
விமலனே கைமீது நீயுறங்கு

ம.துஷ்யந்தன், மட்டக்களப்பு.

**உறங்கு கண்ணே!**

உடுதுணியுடனே
அகதிகளாய்
ஓடிவந்தோம்,
உயிர்காக்க.....!
உண்பதற்கும்
ஏதுமில்லை,
உறங்குகண்ணா
நீ கொஞ்சம்,
உணவுக்கப்பல்,...!
வரும் வரையும்.

ஆரையம்பதி-இதயம்.

**அவலம்**

இருநேரக்கஞ்சி மகன்
எழுந்திருக்க முடியவில்லை
என்னுடலில் பாலுமில்லை
கண்மணியே நித்தரை செய்!


சி.விவேகானந்தன், மட்டக்களப்பு.

**தாயின் தாலாட்டு**

அகதி முகாம்
உன் வீடாம்!
அதில் கண்ணுறங்க
ஷெல் சத்தமாம்!

ஆர்.சிவராஜ், கொட்டகந்த.

## கவிதைப் போட்டி இல-132



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.12.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 132
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

**தூக்கமா? துக்கமா?**

"மடிச்சுமை நீயடா
மனச்சுமை போரடா
ஏக்கமான எதிர்காலம்
துக்கமாகி தூக்கமாகுதடா."

செல்வி.த.மஞ்சுளா, பூண்டுலோயா.

**இன்றைய தாய்!**

ஈன்ற பொழுதில்
பெரிதுவந்த தன் மகனை
ஏனடா
போர் நடக்கும்
இப்புவியில் வந்துதித்தாய்?
எனக் கேட்கும்
இன்றைய தாய்...!

எப்.லெனாட்குமார், ஹப்புத்தளையூர்.

**யுத்த வாழ்விது**

எட்டுத் திக்கிலும்
அகதிகள் சூழ,
எட்டி உதைத்தது
பட்டினிச் சாவு....!
தூக்கமும் இங்கு
சொந்தமின்றி
தொடருது இந்த
யுத்த வாழ்வு.....!

தெ.லோஜனா, கொழும்பு.04.

## வாசகர் சாலை

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

ஏ.கன்சியா,நாத்தாண்டியா.
சுசி.வவுனியா
என்.ரி.அமினுடீன், அக்கரைப்பற்று.06
எம்.மகேந்திரன், இந்தகல மேற்பிரிவு.
சிவா நடராசா, சிவபுரி - திருமலை.
எம்.ஏ.எம்.நிஸாம், கிண்ணியா.
வை.கௌரி, கொழும்பு-13.
தி.அபயசேகரன், நமுனுகுல.
கி.புஸ்பராஜ், இறக்குவானை.
எம்.எஸ்.ரம்ஸியா, பதுளை.
செல்வி. நுஸ்ரத் ஜஹான் ஹனீபா, மாத்தளை.
ஏ.ஆர்.பாசீமா பானு, சிறாஜ் நகர்.
எஸ்.சந்தானம், குருநாகல்.
எம்.எல்.எம்.சரீப்தீன், அட்டாளைச்சேனை.
எம்.வி.பவ்மி, கிண்ணியா.04.
வாஹிட் ஏ.குத்தூஸ்,
செல்வி கே.காசினி, மட்டக்களப்பு.
ரா.சுமதி ஆர்.சுபங்கி, நிந்தவூர்-06
நிக்கவெல பாஸீல், ஹொரவபொத்தானை.
ஏ.ஆர்.முபாரக், கிண்ணியா அரை ஏக்கர்.
ஆர்.சர்மிளா. செல்வி.சந்திரகலா, உடப்புஸல்லாவ.
பி.எம்.ஏ.ரகுமான், கஹடகஸ்திகிரிய.
ஆர்.வசந்த குமார், சுவிற்ஸர்லாந்து.
ஏ.முகமட், சவுதிஅரேபியா.
சி.தேவராணி, துபாய்
திருமதி.எஸ். சுந்தரம், பதுளை.
சோ.அமுதமாலன், மட்டக்களப்பு.
கந்தையா செல்வராணி, அவிசாவளை.
மரீனா நியாஸ், பூரணவத்த, கண்டி.
பஸ்மியா அனஸ்,மக்கொன.

அரசியல் கட்டுரைகளில் தவறுகளை துணிச்சலோடு தொட்டுக்காட்டும் முரசுக்கு முதலில் ஒரு பெரிய சபாஷ். என்றாலும், எதிரிகள் ஜாக்கிரதை. (உண்மையைச் சொன்னால் யாருக்கும் பிடிக்காது)

மா. துரைசிங்கம், அக்கரைப்பற்று.

□□

இராஜதந்திரியாருக்கு பாராட்டுக்கள். முரசின் அரசியல் களத்தில் நாரதரும்- தந்திரியும் புகுந்து விளையாட அனுமதித்த ஆசிரியருக்கு நன்றி.

வி.புஸ்பராஜா, கொழும்பு.6.

□□

மனித வெடிகுண்டு கார்லோஸ்-ஒரு கலக்கல்லோஸ். கார்லோஸுக்கு மெருகூட்டும் ரசிகனுக்கு ஒரு கைகுலுக்கல்.

ஏ.தேவிகா, புத்தளம்.

□□

நம்நாட்டு கிரிக்கெட் நடசத்திரம் மஹானாமாவையும் மறவாமைக்கு நன்றிகள். ரசிகன், இராஜகுமாரன், சிந்தியா அனைவருக்கும் பாராட்டுக்கள்.

ஸாதாத் கடாபி, நிக்கவெவ.

□□

'ஆரம்பிக்கப்படவேண்டிய போர்' என்ற தலைப்பில்-தலையங்கத்தில் ஆரம்பித்த போர் சிறப்பாக இருந்தது.

சுபாவரன், கண்டி.

□□

பட்டுக்கோட்டை பிரபாகரின் 'விலை உயர்ந்த குற்றம்' தொய்வில்லாத விறு-விறு ரகம்.

சி. உமா, நீர்கொழும்பு.

இராமாயணத்தை சுவை குன்றாமல் தொகுத்து திரட்டித் தரும் இராஜகுமாரனுக்கு புகழ் என்னும் மகுடம் சூட்டிவிடு முரசே.

எம்.பரமேஸ்வரி, செங்கலடி.





பட்டுக்கோட்டை(ப்) பிரபாகர் வெளுத்துவாங்குகிறார். தொடர் சூப்பர். அடுத்த பகுதி எப்போதுவரும் என்று எதிர்பார்க்க வைக்கிறார் பிரபாகர். முற்றுப் பெற்று விடுமோ என்று பயமாக உள்ளது. தொடர்ந்து வெளுத்து வாங்குங்கள் சார்.

சண்முகம் மனோகரன், கல்கந்தை எஸ்டேட்-அப்புத்தளை.

□□

நீ வழங்கும் தேன்கிண்ணத்தை சுவைப்பதில் ஒரு தனி இன்பம்தான். மேலும் இராமாயணத் தொடர் சூப்பராக தொடர்கிறது. உன் சேவை தொடர்ந்து எம் தேவைகளை பூர்த்தி செய்யட்டுமே!

கஹவத்தை எம். சிவகுமார்-காலி.

□□

இப்போது குளிர் எட்டிப் பார்க்கும் காலம் தான். ஆஸ்துமா பற்றிய குறிப்புக்கள் தந்த ஹலோ டாக்டரை பாராட்டுகிறேன்.

கே.சிவசாமி, அவிசாவளை.

□□

50 வாரங்களைத் தாண்டி வெற்றி நடை போடும் 'தாய்' பிரமாதப்படுத்துகிறார். நான் நினைக்கிறேன்- வயதாக வயதாக சிலருக்கு இளமை திரும்புவது போல- வாரமாக, வாரமாக 'தாய்' நாவலில் பொருட் சுவை ஏறுகிறது.

சோ.ஞானேந்திரன், கொழும்பு.13

□□

அதிரடி அய்யாத்துரையாரை வயதான தோற்றத்தில் முரசு காட்டியிருந்தாலும், அதிரடி அதிரடி தான்.

ஷியானி நளீர், அக்குறணை.

□□

அப்துல் ரகுமானின் ஆக்கங்கள் பிரமிப்புத் தருகின்றன. தொடர்ந்து தருக.

வடிவேல் சுரேஸ்கண்ணா, மட்டக்களப்பு.

□□

தேன் கிண்ணம் தரும் கவிதைகள் அனைத்தும் அருமை. தேர்வுகள் நன்று.

என்.சுரேந்தர்,கண்டி.

# "பத்தாயிரம் பேர் உடனே தேவை"

# வடபுலப் போர் குறித்து புலிகள் தெரிவிப்பு

## யாழ் நகருக்குள் புலிகளது பதுங்கு நிலைகள்

**யாழ் நகரை மீண்டும் கைப்பற்ற குறைந்தது பத்தாயிரம் பேராவது தேவை என்று புலிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். இயக்கத்தில் சேருவதற்கு இளைஞர்களும், பெண்களும் பெருமளவில் முன்வராமல் இருந்ததும் இன்றைய பின்னடைவுக்கு முக்கிய காரணம் என்றும் புலிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.**

### வெளியேற்றம்

யாழ்-குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் வெளியேறவேண்டும் என்று புலிகள் கோரியுள்ளதை இலண்டனில் உள்ள புலிகளது சர்வதேச செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

படையினரிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்கவே அவ்வாறு கோரியுள்ளதாகவும், தினமும் கிளாலிக் கடல் ஏரி வழியாக பொதுமக்கள் வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் இலண்டனில் உள்ள புலிகளது சர்வதேச செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சியில் இருந்து கிடைத்துள்ள தகவல்களின் படி, அங்கிருந்து வெளியேறுவதற்கு ஒரு பகுதி மக்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

கிளிநொச்சியிலும், வன்னிப் பகுதியிலும் இட நெருக்கடி ஏற்பட்டு விடும், நீண்டகாலம் அகதிகளாக இருக்க வேண்டி ஏற்படும் என்று கருதியே அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று கூறப்படுகிறது.

எனினும் கிளாலி கடல் ஏரி வழியாக தினமும் பெரும் தொகையான மக்கள் கிளிநொச்சி நோக்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

புலிகள் அமைப்பினரின் இலவசப் படகுச் சேவை மூலமே அவர்கள் கிளிநொச்சிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

### உணவு நிலை

நவம்பர் முதல் இன்றுவரை 641 லொறிகளில் வவுனியாவில் இருந்து அரசாங்கத்தால் உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதனால் கிளிநொச்சியில் தங்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைத்து வருகின்றன. மருந்துப் பொருட்களுக்கே பற்றாக்குறை நிலவுகிறது. யாழ்குடாநாட்டிலிருந்து 239000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அடுத்த கட்ட உணவுப் பொருட்களையும் தாமதமில்லாமல் அரசு அனுப்பிவைத்தால் தான் உணவு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்துள்ள மக்கள் மத்தியில் இயக்க உறுப்பினர்களை திரட்டும் பிரசாரத்தை புலிகள் அமைப்பினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

"யாழ்-நகரை மீண்டும் கைப்பற்றும் நடவடிக்கைக்கு பத்தாயிரம் பேராவது தேவை. இயக்கத்தில் சேருமாறு விடுத்த அழைப்புக்களை செவிமடுத்து பெருமளவில் அணி திரண்டிருந்தால் தற்போதைய நிலை ஏற்பட்டிருக்காது.

படையினரின் நடவடிக்கைகள் மேலும் தொடரப் போகின்றன. அவற்றைத் தடுக்க ஆட்பலம் தேவை" என்று புலிகள் கூறி வருகின்றனர்.

தினமும் இயக்கத்தில் சேருவோர் எண்ணிக்கை குறித்து 'புலிகளின் குரல்' வானொலியில் அறிவிக்கப்படுகிறது.

### உள்ளே புலிகள்

யாழ்-நகர் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னரும் புலிகள் அங்கு நிலை கொண்டுள்ளனர்.

குறிப்பாக வலிகாமம் பகுதியில் புலிகள் நிலைகொண்டுள்ளனர். யாழ் நகர் முற்றுகைக்கு உள்ளாகியிருப்பதால் வலிகாமம் பகுதியில் உள்ள புலிகளது அணிகள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுவது கடினமாக இருக்கும். ஆனால் பரந்த நிலப் பரப்பில் படையினர் பாரிய தேடுதல்களை நடத்துவதும் கடினம் என்பதால் புலிகளது அணிகள் உள்ளேயே நடமாடித்திரிய முடிகிறது.

யாழ்ப்பாணத்திற்குள் உடனடியாக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தும் திட்டம் புலிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தொல்லை கொடுக்கும் சிறு தாக்குதல்களில் முதல் கட்டமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதே புலிகள் அமைப்பினரின் நோக்கம் என்று தெரியவருகிறது.

வடபகுதிக்கு வெளியே பாரிய தாக்குதல்களில் ஈடுபடுவதில் புலிகள் கவனம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

---

# "போர் நிறுத்தத்திற்கு புலிகளை இணங்கவையுங்கள்"

## தமிழ் கட்சிகளின் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை ஒன்பது தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் சமீபத்தில் சந்தித்திருந்தனர்.

போர் நிறுத்தம் செய்வதற்கு அரசும், புலிகளும் முன்வர வேண்டும் என்று தமிழ் கட்சிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

"புலிகள் அமைப்பினரை போர் நிறுத்தத்திற்கு இணங்கச் செய்துவிட்டு வாருங்கள்." என்று கூறிய ஜனாதிபதி, புலிகள் ஆயுதங்களை கைவிடுமாறு தமிழ் கட்சிகள் வலியுறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அதற்கு பதிலேதும் சொல்லவில்லை.

அமைதியாக்க் கேட்டுக் கொண்டிருந்தனர்.

வவுனியா ஊடாக வடபகுதிக்கு ஒன்பது உணவு லொறிகள் மட்டுமே இம்மாதத்தில் சென்றுள்ளன என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலதிபர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதியிடம் கூறினார். அப்போது குறுக்கிட்ட புளொட் அமைப்பின் பிரதிநிதி திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி. "அது தவறான தகவல்-130 லொறிகளில் வட பகுதிக்கு உணவுப் பொருட்கள் சென்றுள்ளன, என்று உண்மை நிலமையை தெளிவுபடுத்தினார். ஜனாதிபதியும் திரு.த. சித்தார்த்தன் கூறிய தகவல்தான் சரி என்று தெரிவித்து, வடபகுதிக்கு உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்ட பட்டியலை காண்பித்தார்.

இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

"யாழ் நகரைக் கைப்பற்றி கொடி நாட்டுவதால் தமிழ் மக்களது கௌரவம் பாதிக்கப்படுகிறது" என்று திரு.மு. சிவசிதம்பரம் கூறினார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதி கொழும்பில் குண்டுகள் வெடிக்க வைக்கப்படுவது, அப்பாவி சிங்கள மக்களை புலிகள் கொலை செய்வது போன்ற நடவடிக்கைகள் சிங்கள மக்கள் மனதையும் புண்படுத்தும் அல்லவா?" என்று கேள்வி எழும்பினார். தமிழ் கட்சிப் பிரதிநிதிகள் அதனை ஆமோதித்தனர்.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைக்குப் பதிலாக தன்னால் முன்வைக்கப்பட்ட மாற்று யோசனையை புலிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனை நடைமுறைப்படுத்தலாமே என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். அதற்கு ஜனாதிபதி பதிலேதும் தெரிவிக்கவில்லை.

வடபகுதியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு புலிகள் அமைப்பினரின் பொறுப்பில் விடவேண்டும் என்பதும் அமைச்சர் தொண்டமானின் மாற்று யோசனையில் அடங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் அந்த யோசனை தொடர்பாக புலிகள் அமைப்பினர் இதுவரை கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

## பாரிய தாக்குதலுக்கு முன் போர் நிறுத்தமில்லை

"யாழ்ப்பாணத்தில் படையினர் நிலை கொண்டுள்ளவரை போர் நிறுத்தத்திற்கோ, பேச்சுவார்த்தைக்கோ தயாரில்லை" என்று புலிகள் அமைப்பின் பிரமுகர்கள் வடக்கில் தெரிவித்துள்ளனர்.

படையினர் யாழ் நகரைக் கைப்பற்றியுள்ள நிலையில் போர் நிறுத்தம் செய்ய முன்வருவது தமது இராணுவ பலம் குறித்து குறைத்து மதிப்பிட வழி வகுக்கும் என்பதே புலிகளது எண்ணமாக இருக்கிறது.

வடக்கிலோ, அல்லது கிழக்கிலோ பாரிய நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுவிட்டு அதன்பின்னரே போர் நிறுத்தம் பற்றி புலிகள் அமைப்பினர் முடிவு செய்யக்கூடிய நிலையில் இருப்பதாக அரசியல் விமர்சகர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் இராணுவ சமபல நிலையை தமது தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் நிலை நிறுத்திவிட்டு, அதன்பின்னர் பேரம் பேசக் கூடிய ஒரு நிலையில்தான் புலிகளால் பேச்சுவார்த்தை முயற்சிகளில் பங்கெடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் புலிகள் அமைப்பினர் மேற்கொண்டுவரும் பாரிய தாக்குதல் முயற்சிகளும், வடக்கில் புலிகள் அமைப்பினர் தெரிவித்துவரும் கருத்துக்களும் அதனை மெய்ப்பிப்பதாகவே உள்ளன.

---

## 'அபே கட்டி இன்னவாத' என்று கேட்டுவிட்டு சுட்டனர்

### புதுக்குடியிருப்பு சம்பவத்தில் காயமடைந்த மாணவி சாட்சியம்

(காத்தான்குடி நிருபர்)

"கல்முனையிலிருந்து வந்த எமது பஸ்ஸை கிரான்குளத்தில் வைத்து மறித்த, விஷேட அதிரடிப்படையினரைப் போல் சீருடை தரித்திருந்த, ஆயுதம் ஏந்தியவர்கள் "அபே கட்டி இன்னவாத" (எங்களுடைய ஆட்கள் இருக்கிறார்களா?) எனக் கேட்டனர். அப்போது எமது பஸ்ஸிலிருந்த 4 விஷேட அதிரடிப்படை வீரர்களும் "இன்னவா இன்னவா" (இருக்கிறார்கள், இருக்கிறார்கள்) என்றனர். அப்போதே ஆயுத மனிதர்கள் சர மாரியாகச் சுட்டனர். சற்று நேரத்தில் படையினர் இறந்து வீழ்ந்தனர். பொது மக்களும் இறந்தனர். எனக்குத் தோளிலும், கால்களிலும் சூடுகள் பட்டன". இவ்வாறு கடந்த 5ம் திகதி இடம்பெற்ற புதுக்குடியிருப்பு சம்பவங்களின் போது கொல்லப்பட்ட பொது மக்களின் மரண விசாரணையில் சாட்சியமளித்த மாணவியான கணபதிப் பிள்ளை மோகனா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் திரு.கே.தங்கவடிவேல் முன்னிலையில் நடைபெற்ற மேற்படி மரண விசாரணியில் தொடர்ந்து கூறிய மாணவி:

"தினமும் நான் கல்முனைக்கு கம்பியூட்டர் வகுப்பிற்குச் செல்வேன். அன்றைய தினம் கல்முனை சென்று திரும்பும் போது, இடையில் வைத்து 4 அதிரடிப்படையினர் ஏறினர். பஸ்வந்து கொண்டிருந்தபோது கிரான் குளத்தில் வைத்து அதிரடிப்படையினர்போல ஆடை அணிந்திருந்தவர்களே, நிறுத்தி மேற்படி விசாரித்துவிட்டு கண்டபடி சுட்டனர். அவர்களது துப்பாக்கிப் பிரயோகத்தினால் பஸ்ஸில் வந்த ஏனைய பயணிகளும் சூடுபட்டு என் மீது விழுந்தனர்.

எனக்கும் தோளிலும், காலிலும் சூடு விழுந்தது. பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்," என்றார். சாட்சியங்களை காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அபயகோன், எம்.எஸ்.ஏ.றஹீம் ஆகியோர் நெறிப்படுத்தினர். மாவட்ட பதில் நீதவான் திரு.கே.தங்கவடிவேல் துப்பாக்கிச்சூட்டினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

## தவறுதல் என்று சந்தேகம்

(ஏறாவூர் நிருபர்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வந்து கொண்டிருந்த மட்டு மாவட்ட எம்.பி அலி ஸாஹிர் மௌலானா, மற்றும் கொழும்பு மாவட்ட எம்.பி டொக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரின் வாகனம் மட்டக்களப்பு சந்தி வெளியில் துப்பாக்கிச் சூட்டுக்கும், கிரெனைட் வீச்சுக்கும் இலக்கானது. இச் சம்பவம் கடந்த 09.12.95 அன்று மாலை 5.15 மணியளவில் இடம் பெற்றது. இதனால் அந்த வேனில் வந்த மற்றும் இருவர் காயங்களுக்குள்ளாகி மட்டு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். வாகனத்தின் நான்கு டயர்களும் சுடப்பட்டு கண்ணாடிகளும் நொருங்கி பெரும் சேதமாகின. எனினும் எம்பிக்கள் இருவரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்கள்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற தமிழ்-முஸ்லிம் மக்கள் பெரும் கவலையடைந்தனர். எனினும் எம்பிக்கள் துப்பாக்கிச்சூட்டிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பியதையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இச் சம்பவம் புலிகளால் மேற் கொள்ளப்பட்டதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கிறார்கள். எனினும் இது தவறுதலாக இடம் பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## மட்டு நகரில் குண்டு லொறிப் பீதி

## பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரில் குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனத்தில் புலிகள் தாக்குதல் நடாத்தலாமென்று இரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து பாதுகாப்பு நடவடிக்கை கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையம், பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம், சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை என்பவற்றிற்கு முன்பாக உள்ள திருமலை வீதி, பார்வீதி, பயனியர் வீதி என்பனவற்றில் வாகனங்களில் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் கல்முனையில் இருந்துவரும் வாகனங்கள் அரசடிச் சந்தியில் தடுத்து நிறுத்தப்பட்டு தாமரைக் கேணி வீதி, ஸ்ரேசன் வீதி, அருணகிரி ஒழுங்கை, லொயிட்ஸ் அவனியூ ஊடாக நகருக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

ஏறாவூரில் இருந்து வரும் வாகனங்கள் ஸ்ரேசன் வீதி சந்தியில் தடுக்கப்பட்டு நகருக்கு திசை திருப்பப்படுகின்றன. கடந்த செவ்வாய் முதல் இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை சோதனைச் சாவடிகளிலும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 6.12.95ல் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று ஆங்கில மொழியிலான குடியிருப்போர் விபரங்களைத் திரட்டும் படிவங்களை விநியோகித்துள்ளனர். அப்படிவங்களில் குடியிருப்போர் விபரங்களை தெளிவாகக் குறிப்பிட்டு வீட்டு வாசலில் லெமனேட் செய்து தொங்க விடும்படி அறிவித்துள்ளனர்.

கடந்த 5.12.95 மாலை வம்மியடியில் வைத்து புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் என். சிறிசங்கர் சில மணி நேரத்தின் பின் விடுவிக்கப்பட்டார். ஆனால் பிரதேச செயலகத்திற்குரிய பிக்கப் வாகனத்தை புலிகள் தடுத்து வைத்துள்ளனர். இதேவேளை கடந்த மாதம் 6ம் திகதி புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சந்தானம் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

---

## மட்டக்களப்பில் மனித உரிமை நிகழ்ச்சிகள்!

வருடந்தோறும் வரும் டிசம்பர் 10 ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மட்டு மாவட்டமெங்கும் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மூன்று சமூகங்களையும் சேர்ந்த சமாதானத்திற்கான மக்கள் பணிக்குவொன்றின் மூலம் இந்நிகழ்ச்சிகள் மட்டு நகரிலும் மாவட்டத்தின் சிலதமிழ் முஸ்லிம் பகுதிகளிலும் நடந்தேறின. வன் முறையால் பலவகைப் பாதிப்பிற்குள்ளான மக்களும் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர். மட்டு நகர் ஊடாக அகல்விளக்குகளுடனும், மனித உரிமைகள் பற்றி எழுதப்பட்ட அட்டைகளுடனும், வெள்ளையுடையுடன் தமிழ்-முஸ்லிம்-சிங்கள் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் ஊர்வலம் வந்ததை அவதானிக்க முடிந்தது. மனித உரிமைகள் குறித்த துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கிழக்கில் நடாத்தப்பட்ட, மூன்று சமூகங்களும் பங்கு பற்றிய முதலாவது நிகழ்ச்சி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

---

## சடலங்களை மீட்டது யார்?

கிழக்கு மாகாணத்தில் புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் மீது புலிகள் அமைப்பினர் நடத்திய தாக்குதலின் போதும், அதன் பின்னரும் நடைபெற்ற சம்பவங்களில் பலியான பொதுமக்களின் உடல்களை மீட்டெடுப்பதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரே (S.L.R.C) முன்னின்று செயற்பட்டனர்.

அரச அதிகாரிகளோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட பா.உக்களோ எந்த முயற்சியும் செய்யவில்லை.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்ட பா.உ ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் சடலங்களை தனது முயற்சியால் மீட்டெடுத்ததாக கூறியிருந்தார். அவரது பேட்டி சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் (I.C.R.C) பலியான மக்களது உடல்களைப் பெற்று உரியவர்களிடம் ஒப்படைப்பதில் சிரத்தை காட்டவில்லை என்றும் குறை கூறப்படுகிறது.

---

## தமிழ் குடும்பங்கள் வெளியேற உத்தரவு

திருக்கோணமலையில் லிங்கநகர் பகுதியில் மீளக் குடியேறியுள்ள தமிழ் குடும்பங்களை வெளியேறுமாறு கூறப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினர் பயிற்சி பெறுவதற்கு காணி தேவைப்படுவதாகக் கூறியே வெளியேற்ற உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 200 குடும்பங்கள் லிங்கநகர் பகுதியில் மீளக் குடியேறியுள்ளனர். மூன்று நாட்களுக்குள் அக் குடும்பங்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி, பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஆகியோரது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். தமிழ் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையை உடன் தடுத்து நிறுத்துமாறு அவர் கோரியுள்ளார்.

---

## தளபாடங்கள் கூரைகள் மாயம்

யாழ்-பல்கலைக் கழகத்தில் படையினர் நிலை கொள்ளக்கூடும் என்று கருதி பல்கலைக்கழக மருத்துவ பீடக் கட்டிடம் புலிகள் அமைப்பினரால் குண்டுவைத்து முற்றாக தகர்க்கப்பட்டது.

யாழ்-பல்கலைக் கழகத்தின் தளபாடங்கள் மற்றும் கூரைகள் நூலகப்புத்தகங்கள் அகற்றப்பட்டு புலிகள் அமைப்பினரால் எடுத்து செல்லப்பட்டுவிட்டன. அதன் பின்னரே செயலகம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

யாழ் நகரில் இருந்த பிரபல கடைகளில் இருந்த தளபாடங்கள் மற்றும் பொருட்களும் புலிகள் அமைப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டன. படையினரின் கரங்களில் அவை சிக்கக்கூடாது என்று கூறப்பட்டது.

# பருவ மழை இல்லாததால் பயிர்கள் நாசம்!

## வறிய மக்களுக்கு மற்றொரு சோதனை!


கிழக்கு மாகாணத்தில் இம்முறை வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுப் பருவ மழை பெய்யாததால் வான் மழையை நம்பிச் செய்யப்பட்ட சேனைப் பயிர்ச் செய்கையும், சிறுதானியப் பயிர்ச் செய்கையும், நெற் செய்கையும் பாதிக்கப் பட்டுள்ளது. வழக்கமாக செப்டம்பர் மாத இறுதியில் ஆரம்பிக்க வேண்டிய பருவ மழை இம்முறை காலம் பிந்தி யுள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 964.5 மில்லிமீற்றர் மழை பெய்தது. இம்முறை 222.7 மில்லிமீற்றர் மழையே பெய்துள்ளதாக மட்டக்களப்பு வளி மண்டலவியல் திணைக் களம் கூறுகிறது. இன்னமும் வடகீழ்பருவ மழை இங்கு பெய்யவில்லை என்று கூறப் படுகிறது.

பயிர்ச் செய்கைக் காலத்தின்போது எரி பொருள் குதங்கள் தாக்கப்பட்டதால் மட்டக் களப்பில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இதுவும் விவசாயிகளுக்குப் பெரும் நெருக்கடியாக இருந்தது.

உணவுப் பொருள் தாராளமாக எடுத்துச் செல்வதில் சிக்கல் உள்ள பகுதி மக்கள் தமது கையையும், மண்ணையும், வானத்தை யும் நம்பிப் பயிர் செய்தனர். இவர்களை இம்முறை வானமும் கைவிரித்து விட்டது போல் தெரிகிறது, என்று ஏழை விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

## காட்டூண் மூலை




நன்றி . ஐலண்ட்

## திருத்த வேலையில் மோசடி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1994ம் ஆண்டு சிறிய குளங்கள் திருத்துவதற்காக கெயர் தாபனத்திலிருந்து பெறப்பட்ட 11 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட் டிருப்பதாக தெரியவருகின்றது. கெயர் தலைமையக கணக்காய்வு பிரிவு இந்த மோசடியைக் கண்டு பிடித்திருக்கிறது.

கமநல சேவைகள் திணைக்களம் தனது சொந்த நிதியிலிருந்து திருத்திய 11 குளங்களை கெயர் நிதியிலிருந்து திருத்தியதாக கணக்குக் காட்டியே இந்த மோசடி நடைபெற்றிருக்கிறது.

மட்டக்களப்பு கமநல சேவைகள் திணைக்களத்திற்கு கடந்த வருட இறுதியில் புதிய உதவி ஆணையாளரே உள்ளார்.

வழமையாக கெயர் தாபனம் குளங்களை திருத்த இத்திணைக்களத்திற்கு நிதியை வழங்கியே திருத்த வேலைகள் மேற் கொள்ளப்படும். ஆனால் 1993ம் ஆண்டு இது தொடர்பான வேலைகள் மேற்கொள்ளப் பட்டது பற்றி எந்தவித ஆவணங்களும் கமநல சேவைகள் திணைக்களத்தில் இல்லை யென அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஏ.கே. பத்மநாதன் இந்த மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

## சுவிஸில் நிதி திரட்டல்

சுவிற்ஸர்லாந்தின் தலை நகரான சூரிச் சில் நவம்பா 26ம் திகதி புலிகள் இயக்கத் தினரால் மாவீரர் தினம் கொண்டாடப்பட்டது.

பகிரங்கமாக நிகழ்ச்சி மேடையருகே உறுப்பினர்கள் நிதி சேகரித்தபோத சுமார் 1 இலட்சம் சுவிஸ் ஃபிராங்கும், 2 கிலோ தங்க நகையும் சேகரிக்கப்பட்டன.

மேலும் இம்மாதம் 50 இலட்சம் சுவிஸ்ஃபிராங்குகள் (22 கோடி ரூபாய்கள்) சேகரிக்கப் பட்டதாகவும் புலிகள் உறுப்பினர் களால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

## வெள்ளம் வர முன்னர் வாய்க்கால் அமையுங்கள்

கல்முனைக்குடியில் உள்ள அனேக வீதிகள் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் நீரில் மூழ்கி விடு கின்றன.

இதனால் பொதுமக்கள் போக்கு வரத்திற்கு பெரும் இடைஞ்சல் ஏற்படு வதோடு இப்பாதைகளில் உள்ள குன்று குழிகளில் நீர் நிரம்பி நிற்பதால் இக் காலங்களில் பாதசாரிகள் விபரீதவிளைவு களை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

இதற்கெல்லாம் காரணம்-வீதியோரக் கான்கள் இப்பகுதிகளில் இல்லாமையே. கால்வாய்கள் இருந்தால் கரைபுரண்டு வரும் வெள்ளம் கடலிலோ, வாவியிலோ சங்கமமாக ஏதுவாக இருக்கும்.

மாறாக இப்பகுதியில் மாழைகாலங் களில் மடை திறந்து வரும் வெள்ளம் மக்கள் வாழ் இல்லங்களில் புகுந்து பல வித அனர்த்தங்களை ஏற்படுத்துகிறது.

எனவே எதிர்வரும் பருவகால மழைக்கு முன் கல்முனைக்குடி கரை யோர தாழ்ந்த பிரதேச மக்கள் தாழ்மை யுடன் வேண்டுவதெல்லாம் வீதியோரக் கான்களை விரைவாக அமைக்க வேண்டு மென்பதே. இத்தோடு சம்பந்தப் பட்டவர்கள் இதனைச் சற்று கவனி யுங்கள்.

எம்.சீ. கலீல், கல்முனை-05.

## பல வருடங்களின் பின் அனுமதி!

(ஏறாவூர் நிருபர்)

சர்வதேச "கெயார்" நிறுவனம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக பல வருடங்களின் பின் வாகரைப் பகுதிக்கு 15 அந்தர் மாத்திரம் அமோனியா சல்பேற்றுப் பசளை கொண்டு செல்ல அனுமதி கிடைத்தது. விவசாய விஸ்தரிப் புத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வாகரைப் பகுதியில் தூய விதை நெல் உற்பத்திக்காக 125 விவசாயிகளுக்கு ஊக்கமளித்து உதவி வருகிறது. இவர்களுக்கு மாத்திரமே இந்த உரம் ஒருவருக்கு 5 கிலோ விகிதம் விநியோகிக்கப்பட்டது. இதைத் தவிர 500-750 ஏக்கர் வரையில் அங்கு நெற் செய்கை பண்ணப்படுகிறது. மேலும் 2000 ஏக்கர் காணி செய்கை பண்ணப் படா மலுள்ளது. இப்பகுதிகளில் மீண்டும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமது திணைக்களமும், சர்வதேச கெயார் நிறுவன மும் மிகுந்த பிரயாசை எடுத்து விவசாயி களுக்குப் பயிற்சியையும், விதைப் பொருட் களையும் வழங்கி வருவதாக வாகரைக் கம நலச் சேவை நிலைய பெரும்பாக உத்தி யோகத்தர் திரு.கே.சத்தியமூர்த்தி 'தினமுரசு'க் குத் தெரிவித்தார்.

## குடி நீர் கிடைத்தது

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை பிரதான தபாற் கந்தோர் ஊழியர்கள் சுமார் இருபது வருடங்களின் பின் முதன் முதலாகக் குழாயிலிருந்து குடிநீர் பெற்றுக்கொள் கிறார்கள்.

இந்த அதிசய முன்னேற்றம் அஞ்சல் அத்தியட்சகர் திரு.ஏஸ்.நல்லதம்பியின் முயற்சியால் ஊழியர்களுடைய சிரமதானத் தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தெருக்குழாயில் முட்டி கொண்டு நீர் பிடித்தே அஞ்சலக ஊழியர்கள் அருந்தி வந்தார்கள். முட்டியி லிருந்து நீர் எடுத்து பருகும்போது வெளியி லிருந்து பார்ப்போருக்கு கள் குடிப்பது போலவே தோன்றும். பலரது கிண்டலுக்கு உள்ளான இந்த நிலை மாற்றப்பட்டமை குறித்து ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித் தார்கள்.

நீர் வசதி இன்மையால் ஒழுக்கற்றுக் கிடந்த கழிவறை வசதிக் குறைவுகளும் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

## உள்ளதும் போச்சடா

உவர்மலை (திருகோணமலை) ஆசிரியர் சதுக்கப்பகுதியில் அமைந்துள்ள வீதி ஒன்று கடந்த வருடம் மார்கழி (மழைபெய்து கொண்டு இருக்கும் போது) மாதத்தில் 'இந்தா பிடி அந்தா புடி' என்று திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டு, சடுதியாக நிறுத்தப்பட்டுவிட்டது. அதில் புதுமையாதெனில் தெருவை பள்ளமாக்கி, இரு மருங்கிலும் கருங்கற்களை குவித்து, பாதசாரிகளும், வாகனங்களும், போக முடியாமல் செய்யப்பட்டுள்ளது தான்! தற்போது வேறொன்றும் வேண்டாம்! கற் குவியல்களை அகற்றினால் போதும். 'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி'யுங்கள்.

கனகசபை தேவாடாட்சம்.

## மூன்று முஸ்லிம் பிரதேசங்களும் புறக்கணிப்பு!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற 'ஜெயபூமி' காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கலில் மாவட்டத்தின் மூன்று முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளே இவ்வாறு புறக்கணிக் கப்பட்ட பிரதேசங்களாகும்.

மாவட்டத்திலுள்ள மூன்றே மூன்று முஸ்லிம் பிரிவுகளில் மாத்திரம் இவ்வாறு உறுதிகள் வழங்காதிருப்பது திட்டமிட்ட செயலா எனப் பலர் பேசிக்கொள் கின்றனர். பிரதேச செயலாளர்களால் முழு விபரங்களும் அனுப்பப்பட்டும் பத்திரம் வழங்கப்படாதது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


### தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு நன்கு அனுபவம் வாய்ந்த கணக்கியல் எழுது வினைஞர்கள் தேவை.

பொது அறிவு, தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் அனுபவம் உள்ளோர் விரும்பப்படுவர். தகுந்த ஆவணங் களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா தினமுரசு வாரமலர், த.பெ.இல:1772, கொழும்பு.

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.



### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட் டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்த தினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


## "புறக்கணிப்புக் கிடையாது"

(வாழைச்சேனை நிருபர்)

அண்மையில் பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற ஜெயபூமி காணி உறுதிப் பத்திர விநியோகத்தில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டதாக கூறப்படுவது தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஜனாப் எம்.ஏ.தாஜுதீன் அவர்களைக் கேட்டபோது, தமது பிரதேச செயலகப் பிரிவில் எவ்வித புறக்கணிப்புக்களும் இடம் பெறவில்லை என தம்மால் உறுதியாகக் கூறமுடியும் எனத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில், கோறளை மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே இந்தத் தாமதம் உண்மையில் ஏற்பட்டதாகவும், தற்போது சுமார் (100) பேருக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக வடக்கு-கிழக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக் களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவை ஜனாதிபதியின் ஒப்பத்தைப் பெற்று மீண்டும் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்ததும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், மற்றுமொரு தொகுதி உறுதிப்பத்திரங்களை வடக்கு-கிழக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலக காணிப்பிரிவு மேற்கொள் வதாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கவிஞர் ஊக்குவிப்புத் திட்டம்

இலங்கையிலுள்ள வளர்ந்துவரும் இளம் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 'சிந்தனை வட்டம்' எனும் இலக்கிய அமைப்பு 1989ம் ஆண்டில் புதியமொட்டுகள், அரும்புகள் ஆகிய இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டது.

இந்த வரிசையில் பாலங்கள், சுவடுகள் எனும் தலைப்பில் இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட இவ்வமைப்பு முன்வந்துள்ளது.

பாலங்கள், சுவடுகள், கவிதைத் தொகுதிகள் மூலம் இலங்கையில் வளர்ந்துவரும் இளம் கவிஞர்களுக்கு களம் அமைத்துத் தருவதே அமைப்பின் அடிப்படை நோக்கமாகும்.

இத் தொகுதிகளில் இடம்பெறவுள்ள அனைத்துக் கவிஞர்களினதும் கவிதைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மற்றும் பிரபல்யமிக்க இலங்கை, இந்தியக் கவிஞர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு பிரசுரிக்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு-பி.எம். புன்னியாதீன், சிந்தனை வட்டம், உடத்தலவின்ன மடிகே, கட்டுகாஸ்தோட்டை என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

## முரசுக்காக அலைச்சல்!

நவம்பர் 5-11ம் திகதிக்கான தினமுர சைத் (126) தேடி மட்டக்களப்பு நகர மக்களுக்கு பெரும் அலைச்சலும் அச்சமும் ஏற்பட்டது.

வழக்கமாக வியாழக்கிழமைகளில் தினமுரசைப் பெற்றுக் கொள்ளும் நாம் 126வது முரசை திங்கட்கிழமையே (06.11.95) பெற முடிந்தது. உரிய நேரத்தில் முரசு வராமையால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்படலாயிற்று-இவ் வச்சத்திற்கு காரணம்-மக்கள் மத்தியில் பரவிய வதந்தியே ஆகும். தினமுரசு பத்திரிகை அரசினால் தணிக்கை செய்யப்பட்டு விட்ட தாக ஒரு வதந்தி பரவியது. எனினும் திங்கட்கிழமை பத்திரிகையைக் கண்டதும் ஒரு மகிழ்ச்சி.

எனவே 126 வது தினமுரசு ஏன் உரிய நேரத்தில் வாசகர் கரங் களை வந்து அடையவில்லை என்ப தற்கான காரணத்தை அடுத்த முரசில் வெளியிடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வி. மணிராஜ்-நொச்சிமுனை, மட்டக்களப்பு.

☞போக்குவரத்து சீர்கேடுதான் தாமதம் ஏற்படக் காரணமாகியது. வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற் காக வருந்துகிறோம். நிர்வாகி.


### சித்தர்களின் தெய்வீக மருத்துவம்

(GOVT. APPROVED CHARTY) மட்டக்களப்பு, கல்லடி(வேலூர்) குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு, மகாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி (அக்குப்பங்சர்) டாக்டர்-சக்தியானந்தபாவா மட்டக்களப்பு-மலையாழ (இந்திய) பாரம்பரிய கைகண்ட அனுபோக புராதன (மருந்த, மந்திர, யந்திர, மனோவசிய, ஆகார்ஷண) வைத்திய முறைகளினால் உடல்நோய், மனநோய், தீயசக்திகளினால் ஏற்பட்ட தீவினைகளையும் தீர்த்து துன்பங்கள் அனுகாமல் "காவல்ரட்சைகள், சர்வகாரியசித்தி, தாயத்து, நவக்கிரகதோஷ, சர்வரோக நிவர்த்தியந்திரம், ஜனராஜ வசியயந்திரங்களும்" செய்து கொடுக்கிறார். பிரிந்த குடும்பங்களை உறவாக்க விரும்பிய வாழ்க்கையை அமைத்து இன்பமாக வாழ, (இருவர் பெயர்களும் தேவை) வேறு நன்மையான தனிப்பட்ட மாந்திரீக வசிய விடயங்கள் செய்து கொள்ள வரமுடியாத வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதினால் உங்கள் விருப்பங்களை உடன் நிறோவெற்ற பரிகாரப் பொருட்களை தபாலில் அனுப்பப்படும். விரும்பியனுப்பும் காணிக்கைகளை (மணியோடர்) ஏற்று உடன் கவனிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTERE,
KALLADY, BATTICALOA.

### 'புறூஃப் ரீடர்' தேவை

பதிப்பகம் ஒன்றிற்கு தமிழில் நல்லறிவுள்ள அனுப வமிக்க ஒப்புநோக்காளர் (புறூஃப் ரீடர்) தேவை.
தொடர்பு கொள்ளவும்:
மே/பா. தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:1772. கொழும்பு.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சென்றனர் கண்டனர் வந்தனர்!

நாரதர்

**செ**ன்றனர் - கண்டனர் - வந்தனர், ஆனால் வென்றனரில்லை.

சமீபத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த ஒன்பது தமிழ் கட்சிகளின் நிலையும் அதுதான்.

போர் நிறுத்தம் கேட்டுச் சென்றனர். முடியாது என்றுவிட்டார் ஜனாதிபதி. அப்படியானால் சரி என்றுவிட்டு, "வணக்கம் மீண்டும் சந்திப்போம்" என்று சொல்லிவிட்டு திரும்பியாகிவிட்டது.

சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபோது தமிழ் கட்சிகள் கூடி போர் நிறுத்தம் கேட்கப்போவதாக அறிவித்தன. ஜனாதிபதியைச் சந்திக்கவும் அனுமதி கேட்டனர்.

இராணுவ நடவடிக்கையை வெற்றிகரமாகத் தொடரும் போது தமிழ் கட்சிகளைச் சந்தித்தால் அவர்கள் போர் நிறுத்தம் கேட்கும் செய்தி அபசகுனம் போல இருக்கும். ஆகவே, எல்லாம் முடிந்த பின்னர் சந்தித்துப் பேசலாம் என்று தள்ளிப்போட்டிருந்தார் ஜனாதிபதி.

நியாயமாகப் பார்த்தால் தமிழ் கட்சிகளுக்கு கோபம் வந்திருக்க வேண்டும்.

கோபப்பட்டால் நஷ்டம் தங்களுக்குத்தான் என்று தெரிந்து மௌனமாக இருந்துவிட்டன தமிழ் கட்சிகள்.

இப்போது யாழ் நகர் கைப்பற்றப்பட்ட பின்னர் ஜனாதிபதி சந்தித்திருக்கிறார். ஒரு சம்பிரதாயத்துக்கு கேட்பது போல போர் நிறுத்தம் செய்தால் என்ன? என்று தமிழ் கட்சிகள் கேட்க, "அது முடியாதுங்களே" என்று ஜனாதிபதி கூற, "நாங்கள் கேட்டதும் சரி, நீங்கள் சொல்வதும் சரி" என்றுவிட்டு திரும்பிவந்து பத்திரிகைகளுக்கு நல்ல விரிவாக அறிக்கை கொடுத்தாகிவிட்டது.

யாழ் நகரைக் கைப்பற்றிய பின்னர் ஜனாதிபதி ஒரு செய்தி விடுத்திருந்தார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கையளித்துவிட்டு வந்தால்தான் பேச்சு நடத்தலாம் என்று கூறியிருந்தார்.

போர் தொடரும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

ஆக, போர் நிறுத்தம் செய்ய அரசு இப்போது முன்வரப்போவதில்லை என்பது தெரிந்துவிட்டது.

எனவே-ஜனாதிபதியிடம் போர் நிறுத்தம் கேட்க தயாராகிக்கொண்டிருந்த தமிழ் கட்சிகளுக்கும் அது தெரியும்.

முடியாது என்றுதான் ஜனாதிபதி சொல்லப் போகிறார். அப்படிச் சொன்னால் தமது நிலைப்பாடு எப்படியிருக்க வேண்டும் என்றெல்லாம் அவை யோசிக்கவே இல்லை.

"நாங்கள் போர் நிறுத்தம் கேட்டோம்" என்று செய்தி வந்தாலே போதும். தமிழ் கட்சிகளுக்குத்தான் எத்தனை அக்கறை பாருங்கள் என்று மக்கள் நினைத்துக் கொள்வார்கள். அரசியல் நடத்த அது போதும் என்று ஒரு குட்டிக் கணக்குப் போட்டுக் கொண்டார்கள்.

கோரிக்கைகள் இரண்டு வகைப்படும். ஒன்று: நிறைவேற்றக் கூடிய கோரிக்கைகள். இரண்டு: நிறைவேறாது என்று தெரிந்தும் மக்களைத் திருப்திப்படுத்த முன்வைக்கும் கோரிக்கைகள்.

நிறைவேறக்கூடும் என்று நம்பி முன்வைக்கும் கோரிக்கைகள் சிலவற்றை வெற்றிபெறச் செய்ய வேண்டுமானாலும் இரண்டு அம்சங்கள் தேவை.

ஒன்று: கோரிக்கையை முன்வைப்பவர்களுக்கு அதனை வலியுறுத்தி போராடும் பலம் இருக்க வேண்டும்.

இரண்டு: போராடும் பலம் இல்லாவிட்டாலும் கனிவாகவேனும் சொல்லி நிறைவேற்ற வைக்கும் பக்குவம் இருக்க வேண்டும்.

தமிழ் கட்சிகளிடம் அந்த இரண்டு அம்சமும் கிடையாது.

ஒரு கோரிக்கை முன்வைக்கப்படும் போது, அது மறுக்கப்பட்டால் அடுத்தது என்னவென்று தீர்மானிக்கவே முடியாத நிலையில் இருந்து கொண்டு தமிழ் கட்சிகள் கோரிக்கைளை விட்டுக் கொண்டிருக்கின்றன.

தமது தரப்புக்கு வெற்றி கிடைத்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசு போரை நிறுத்த விரும்பப் போவதில்லை.

போரில் கிடைத்துள்ள வெற்றியை வைத்து தெற்கில் அரசியல் லாபங்களை அறுவடை செய்து கொண்டிருக்கிறது பொது ஜன முன்னணி.

இந்த நேரத்தில் போய் போரை நிறுத்துங்கள் என்று கேட்டால் ஜனாதிபதி எப்படிச் சம்மதிப்பார்?

போரில் வெற்றிபெறும் ஒரு தரப்பு போரை நிறுத்த வேண்டுமானால் கோரிக்கைகள் விடுவதால் அது சாத்தியமாகாது. அந்தத் தரப்புக்கு போரை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால்தான் அது நடக்கும்.

புலிகள் என்றாலும் சரி, அரசு என்றாலும் சரி தமக்கு வெற்றிவாய்ப்பு இருக்கும் போது தாமாகப் போரை நிறுத்தப் போவதில்லை.

எனவே-போரை நிறுத்தக் கோரும் சக்திகள் போரை நடத்த விரும்பும் தரப்பிடம் வெறுமனே கோரிக்கை விடுப்பதால் ஒன்றும் நடக்கப்போவதில்லை.

போரை நிறுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள கட்சிகளில் புளொட், கூட்டணி, இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு பாராளுமன்றத்தில் ஆசனங்கள் இருக்கின்றன.

இக்கட்சிகள் அரசாங்கத்தையும் ஆதரித்துக் கொண்டிருக்கின்றன.

போர் நிறுத்தம் செய்யப்படவில்லையானால் தமது ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்று அக்கட்சிகள் ஜனாதிபதியிடம் கூறியிருந்தால், தமது கோரிக்கைக்காக வாதாடுபவர்களாக அவர்களைக் கணித்திருக்கலாம்.

நிர்ப்பந்தம் ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பையும் தமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்த அக்கட்சிகள் தயாராக இல்லை.

காரணம், அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு அக் கட்சிகளால் அரசியல் நடத்த முடியாது. உண்மை அதுதான்.

போர் நிறுத்தம் கேட்ட கட்சிகளில் ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் வும் அடங்குகின்றன.

'ரெலோ' கிழக்கிலும், வவுனியாவிலும் படையினருடன் இணைந்து செயற்படுகிறது.

மட்டக்களப்பில் படையினரின் செல்லப் பிள்ளைகளாக இருக்கிறார்கள் ரெலோ உறுப்பினர்கள்.

சில மாதங்களின் முன்னர் மன்னாரில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் குடும்பத்தினரை வெட்டிச் சாய்த்து 'வரலாறு' படைத்ததும் ரெலோதான்.

ஆனால், வெளியே பேசும்போது தாங்கள் புலிகளின் நலனில் அக்கறையுள்ளவர்கள் போல காட்டிக்கொள்கிறார்கள்.

கிழக்கில் ரெலோ உறுப்பினர்கள் புலிகளால் கொல்லப்படுவதைக் கூட வெளியே சொல்ல ரெலோ தலைமை தயாராக இல்லை. புலிகளுக்கும் தமக்கும் பிரச்சனை என்று மக்கள் நினைத்தால் ஒரு மதிப்பிருக்காது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயம், படைத்தரப்பிடம் தங்களை புலிகளின் எதிர்ப்பாளர்களாகக் காட்டி, படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வசூல் விடயங்களில் ரெலோ கொடி கட்டிப்பறக்கிறது.

வவுனியாவில் லொறிகளில் ஒரு மூட்டைக்கு இவ்வளவு என்ற கணக்கில் ரெலோ பண வசூல் செய்கிறது. காட்டு மரங்களை வெட்டி வியாபாரம் செய்கிறது.

வவுனியாவுக்கு வரும் தேங்காய்களை வேறு யாரும் வாங்க முடியாது என்று தடை விதித்துவிட்டு தாமே மொத்த வியாபாரிகளாக செயற்படுகிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தன்னை ஒரு பொது ஜன முன்னணி அனுதாபியாகக் காட்டிக் கொண்டு, வேலை வாய்ப்புக்கள், விடமைப்புத் திட்டத்தில் வீடுகள் என்று சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

வேலை தருகிறோம் என்று சொல்லி கிழக்கில் விண்ணப்பப்படிவங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறது ஈ.பி.ஆர்.எப்.எஃப்.

மறுபுறம் கொழும்பிலிருந்து விடும் அறிக்கைகளில், அரசுக்கு குட்டுவதுபோல ஒரு பாசாங்கும் செய்யப்படுகிறது.

இதெல்லாம் தெரிந்தோ என்னவோ ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பை சந்திக்க திகதி கொடுக்கவே நீண்டகாலம் தள்ளிப் போட்டு விட்டார் ஜனாதிபதி.

ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ ஆகிய நான்கு அமைப்புக்களுமே அடிப்படையில் தம்மை புலி எதிர்ப்பாளர்களாக காட்டிக் கொண்டுதான் அரசோடும், படையினரோடும் உறவுகளை வைத்திருக்கின்றன.

எனவே- புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்துவதாக அரசு கூறும்போது, அதனை நிறுத்துங்கள் என்று நேரடியாகப் போய் வலியுறுத்தக் கூடிய நிலையில் அவை இல்லை.

வேண்டுமானால் பத்திரிகைகளில் அறிக்கை விடுத்து மக்களை திருப்திப்படுத்துவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

ஆயுதங்களைப் போட்டுவிட்டு புலிகள் வந்தால்தான் மேற்கொண்டு பேச முடியும் என்று ஜனாதிபதி கூறிய போது ஒன்பது தமிழ் கட்சிகளும் மௌனமாக இருந்து கேட்டுக் கொண்டிருந்ததும் அதனால்தான்.

அமைச்சர் தொண்டமானின் நிலையும் முன்னுக்குப் பின் முரண்பாடாகவே இருக்கிறது.

"போரை யாருடன் நடத்துகிறீர்கள் ஏன் கொடி நாட்டுகிறீர்கள்" என்றெல்லாம் காரசாரமாக அமைச்சர் தொண்டா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

யாழ் நகரைக் கைப்பற்றிய வெற்றிச் செய்தியை அறிவிக்க ஜனாதிபதி ஒரு விழா நடத்தினார். கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் நடந்த அந்த வெற்றி விழாவில் முன்வரிசையில் இருந்தார் அமைச்சர் தொண்டமான்.

யாழ் நகரைக் கைப்பற்றிய செய்தி அடங்கிய பேழையை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியிடம் கையளித்த போது, மண்டபம் அதிர எழுந்த கரவோசைகளோடு அமைச்சர் தொண்டாவின் கரவோசையும் சேர்ந்து கொண்டது.

போரும் வேண்டாம் என்கிறார், வெற்றி விழாவிலும் கலந்து விருந்துண்ணுகிறார் என்பது முரண்பாடான விடயமாக இருக்கிறது.

ஈ.பி.டி.பி.யும் முஸ்லிம் காங்கிரசும் மட்டுமே போர் நிறுத்தக் கோரிக்கை விடுக்கவில்லை.

இந்த இரண்டு கட்சிகளும் செய்வதைத்தான் ஏனைய தமிழ் கட்சிகளும் செய்கின்றன. ஆனால் அவை வெளியே வேறொன்று சொல்லிக் கொண்டிருக்கின்றன என்பதுதான் வித்தியாசம்

புலிகள் தவிர, ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை இரண்டுவிதமாக பிரித்துள்ளன.

ஒன்று: பகிரங்க அரசியல்.

இரண்டாவது: திரைமறைவு அரசியல்.

பகிரங்க அரசியலில், பத்திரிகை அறிக்கைகள், கூட்ட உரைகள், பாராளுமன்றப் பேச்சுக்கள் என்பவை அடங்கும்.

மக்களைத் திருப்திப்படுத்த எப்படிப் பேசலாம் என்பதுதான் பகிரங்க அரசியலில் முக்கியம்.

திரைமறைவு அரசியலில், அரசாங்க தரப்பினருடன் உறவு, அந்த உறவு மூலம் பெறப்படும் சலுகைகள், படையினருடன் உறவு, அதன் மூலமான பாதுகாப்பு, தமது பத்திரிகை அறிக்கைகளுக்கு காரணம் சொல்லி தப்பிக்கும் தந்திரங்கள் என்று பல விஷயங்கள் அடங்கும்.

பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு, அவசரகால சட்ட எதிர்ப்பு என்று கூட்டணி செயற்படுவது பகிரங்க அரசியல்.

"அவற்றை எதிர்க்காவிட்டால் வெளியே நமக்குப் பிரச்சனை. பொதுவான விஷயங்களில் அரசை ஆதரித்து வாக்குப் போட்டுக் கொண்டுதானே இருக்கிறோம். ஆதரவை விலக்க மாட்டோம்" என்று அரசத் தலைவர்களுக்கு கூட்டணி சுய விளக்கம் கொடுப்பது திரைமறைவு அரசியல்.

தமிழ் கட்சிகளின் பலம், பலவீனம் என்பவற்றை அரசு நன்றாக புரிந்துவைத்திருப்பதால் அவற்றின் பேச்சுக்களையும் சீரியலாக எடுத்துக் கொள்வதில்லை.

பாராளுமன்றத்தில் பரராஜசிங்கம் கர்ஜித்தால், அவர் பத்திரிகைகளுக்காகப் பேசுகிறார் என்று அரச தரப்புக்கு தெரிந்து விடுகிறது. எனவே பிரச்சனையே இல்லை.


தமிழ் கட்சிகள் தங்களையும் குழப்பிக் கொண்டு, மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கின்றன. குறைந்த பட்சம் தாம் எங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்பதையாவது சொல்லக்கூட அவை தயங்குகின்றன.

எல்லாம் சரி, போர் நிறுத்தக் கோரிக்கையை ஜனாதிபதி மறுத்துவிட்டார். அதனைக் கூட அக் கட்சிகள் நேரடியாகச் சொல்லாமல் சுற்றிவளைத்துத்தான் பத்திரிகைகளுக்கு சொல்லியிருந்தன.

"புலிகளைக் கொண்டுவாருங்கள், அதன் பின்னர் பார்க்கலாம்" என்றுவிட்டார் ஜனாதிபதி. தமிழ் கட்சி பிரதிநிதிகள் தமது முயற்சிகளில் சற்றும் மனம் தளராது எப்போது பிரபாகரனை சந்திக்கப் போகிறார்கள்?

இரு தரப்பிடமும்தான் யுத்த நிறுத்தம் கேட்கிறோம் என்று திரு. சிவசிதம்பரம் அவர்கள் ஜனாதிபதியிடம் கூறினாராம். அப்படியானால் மறு தரப்பிடம் எப்போது செல்லப் போகிறார்கள்.?

நாரதர் சொல்கிறேன்-கேட்டுக் கொள்ளுங்கள்- குறித்து வையுங்கள்: ஜனாதிபதி போட்ட போடில் போர் நிறுத்தக் கோரிக்கையைப் பற்றியே இனிமேல் சில தமிழ் கட்சிகள் மீண்டும் பேசப் போவதேயில்லை.



'ஐலண்ட்' வெளியிட்ட கார்ட்டூன்

## வருமா பொதுத் தேர்தல்?

**போ**ர் வெற்றிச் செய்தியால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அரசு முன்வரலாம் என்று ஒரு செய்தி பரவிக் கொண்டிருக்கிறது.

பொதுத் தேர்தல் தற்போதைய நிலையில் நடைபெற்றால் ஜனாதிபதி சந்திரிக்காவின் பக்கம் அலைவீசும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், நினைத்தவுடன் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க இயலாது.

குறைந்தது மூன்று மாத கால அவகாசம் என்றாலும் தேவைப்படும்.

அந்தக் கால அவகாசத்தில் தற்போதுள்ள நிலவரம் இப்படியே இருக்குமா-இல்லையா? என்பதை அரசு மட்டும் தீர்மானிக்கப் போவதில்லை. புலிகளின் நடவடிக்கைகளும் அதனை தீர்மானிக்கும் பங்கு வகிக்கப் போகின்றன.

அதுதவிர, யாழ் நகர் கைப்பற்றப் பட்டது மூலம், புலிகளது பலம் முறித்துப் போடப் பட்டுவிட்டதாக அரசாங்கம் தப்புக் கணக்குப் போடப் போவதில்லை.

வடபுல வெற்றி தொடர்பாக தெற்கில் எவ்வாறு கூறப்பட்டாலும் கூட, உண்மையான வெற்றிக்கு இன்னமும் நிண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அரச மேல் மட்டம் உணராமலில்லை.

'அடிபட்ட புலிதான் ஆபத்தானது' என்பதும் அரசாங்கத்திற்கு தெரியும். எனவே தெற்கில் தேர்தல் பிரசாரங்களை சுதந்திரமாக நடத்தக் கூடிய சூழல் தற்போதைக்கு ஏற்படப் போவதில்லை.

அதுதவிர, தேர்தல் பணிகளுக்கு பொலிசாரும், பாதுகாப்பு படையினரும் பெருமளவில் தேவைப்படுவார்கள்.

வடபுலப் போரில் பெற்றுள்ள வெற்றியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். கிழக்கில் பாதுகாப்பு நிலை மோசமாகாமல் பார்க்கவும் வேண்டும். தலைநகரில் எந்த நேரமும் பாதுகாப்பு உஷார் நிலை இருக்க வேண்டும். இதற்கெல்லாம் போக, தேர்தல் பணிகளுக்கும் பயன்படுத்துவதானால் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை ஒரு பிரச்சனையாக இருக்கும்.

எங்கு தளர்த்தினாலும் பாதுகாப்பு நிலவரம் பாதகமாகிவிடும் என்றளவில்தான் படைத்தரப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் தேர்தல் பரபரப்புக்களால் படைத் தரப்பின் கவனத்தை சிதறடிக்க அரசு விரும்பாது.

எனவே- உடனடியாக ஒரு பொதுத் தேர்தல் வருமென்பது அரசின் சக்திக்கு மீறிய கணிப்பாகவே இருக்கும்.

புலிகள் வடபுலப் போரில் பின்னடைவைச் சந்தித்திருக்கலாம். ஆனால் பதுங்கிப் பாயும் பலத்தை தக்கவைத்திருக்கிறார்கள். அந்தப் பலம் உள்ளவரை தனது வெற்றிகளுக்கு நீண்டகால உத்தரவாதம் வழங்க அரசால் முடியாது.

அவ்வாறான நிலையில் தமது வெற்றிக்கு குறைந்தபட்சம் உத்தரவாதத்தை என்றாலும் உறுதி செய்து கொள்ளாமல் அரசு தேர்தல் களத்தை திறக்கப்போவதில்லை.

## அதிரடி அய்யாத்துரை



**எ**ல்லாம் சரிபாருங்கோ, சண்டையை நிற்பாட்டுங்கோ எண்டு கேட்ட தமிழ் கட்சிகள், சண்டை தொடர்ந்து நடந்து கைப்பற்றப்படும் பகுதிகளுக்கு போக ரெடியாய் இருக்கிற விஷயம் தெரியுமோ? "சண்டை வேண்டாம் எண்டும் சொல்லுவினம். பிடிச்சுக் கொடுத்தா அங்கை போக நான் முந்தி, நீ முந்தி எண்டு நிப்பினம்" எண்டு பச்சை உடை அதிகாரி சொன்னவர். சண்டை வேண்டாம் எண்டு சொல்லுறதும் ஒரு அரசியல்தான் எண்டு பாவம் அவருக்கு தெரியாதாக்கும்!

**வ**டக்கு-கிழக்கில் முன்பு ஒரு காலத்திலை தர்பார் நடத்திய கட்சிக்காரர் பாடுதான் திண்டாட்டமாய் இருக்குது. அதிகாரத் தரப்பு தங்கள் பையிலை எண்டு வெளிநாடுகளிலை பிரசாரம் செய்யினம். உள்நாட்டிலை, தங்களுக்கு அதிகாரத் தரப்பை பிடிக்காத மாதிரி பிரசாரம் செய்யினம். இரண்டுமே பொய்யாகிக் கொண்டிருக்கு. பலமுறை கேட்டும் சந்திப்புக்கு திகதி கிடைக்கேல்லையாம். அதுதான் பல கட்சிகளோடு ஒரு கட்சியாகப் போக வேண்டி வந்ததாம்.

**கூ**ட்டான கட்சித் தலைவர் 'பச்சை உடைக்காரர் பக்குவமாய் நடக்கினம்' எண்டு இங்கிலீசிலை பேட்டி கொடுக்கிறார். பிறகு சண்டையாலை நெஞ்சு பொறுக்குதில்லை, சாப்பிடவும் மனம் வரேல்லை எண்டமாதிரி தமிழில் அறிக்கைகள் தூள் பறக்குது. முந்தியும் உப்பிடித்தானுங்கோ; தமிழில் உள்ள பெயர் தமிழரசுக் கட்சி, இங்கிலீசில் சொல்லுற பெயர் சமஷ்டிக் கட்சி. இதுதான் இரு மொழிக் கொள்கையோ?

**ஐ**.நா.சபை வரப்போகுது-ஒண்டும் கவலைப்படவேண்டாம் எண்டு ரெண்டு எழுத்தார்களின் ஆதரவாளர்கள் சிலர் சொல்லுகினமாம். சனம் கேட்கிற கேள்விகளில் இருந்து தப்ப பல்வேறு தகவல்களை மனம்போனபடி எடுத்துவிடுகினமாம். இதெல்லாம் ரெண்டு எழுத்தாருக்கு தெரியுமோ தெரியாது!

**ரெ**ண்டு எழுத்தார் சிலருக்கும் சிங்களம் நல்லாப் பேச வரும் எண்டு தெரிஞ்சதாலை சிங்கள ஆட்களுக்கும் தொல்லை வந்து போட்டுது. குறிப்பாக தலைநகரிலை சிங்களம் பேசினாலும் அடையாள அட்டையையும் வாங்கி நல்ல கவனமாய் ஆராயப்படுகிறதாம். அது மட்டுமில்லைப்பாருங்கோ, நல்ல சுத்தமாய் சிங்களம் பேசுற தமிழ் ஆட்களிலும் ஒரு சின்ன சந்தேகம் வந்து நல்லாய் தடவுறதாகவும் கேள்வி.

**இ**டைக்கால நிர்வாகம் வந்தால் ஏற்றுக் கொள்ளுறதிலை பிரச்சனையில்லை; ஜனநாயக் கட்சிக்காரருக்கு கூட இடம் கிடைக்கும் எண்டுதான் பிரச்சனை எண்டு சொன்னாராம் தங்கமானவர். அதிகாரமுள்ள ஒருவருக்கு அவர் சொன்ன இரகசியம் அது. அப்படியெண்டால் கொள்கை நிலைப்பாடு எண்டு சொன்னதெல்லாம் என்னாச்சு? அது பேப்பர் ஸ்டேட்மண்ட்தானே-கூடக் கிடைக்குமெண்டால் எதுக்கும் தயார்தான்!

**க**ம்பன் புகழ் பரப்பும் அமைப்பு உறுப்பினர்கள் ஏதோ வம்பிலை சிக்கிப்போட்டினம் எண்டு பரபரப்பாய் செய்தி வந்ததல்லோ! விசாரித்துப் போட்டு விடப்பட்டவையாம். கம்பன் புகழ் பாடுறதையெல்லாம் நிறுத்திக் கொள்ளச் சொல்லி ரெண்டு எழுத்தார் சொன்னதாலை யாழிலும் கொஞ்சக் காலம் கப்சிப்பாகத்தான் இருக்க வேண்டி இருந்ததாம். அங்கை பிரச்சனை எண்டு இங்கை வந்தால், இங்கையும் பிரச்சனையாகக் கிடக்கு எண்டு நொந்து போயிருப்பினம்.

**எ**ங்கடை யாழ்ப்பாண குடிமக்களில் சிலருக்கு சில பழக்கங்கள் சுட்டுப் போட்டாலும் போகாது பாருங்கோ. அகதி முகாமில் இருந்துகொண்டும் தங்கள் குடிப்பெருமை என்ன, வெளிநாட்டிலை இருக்கிற உறவினர் தொகை என்ன, "இந்த முகாமிலை இருக்கவோ பிறந்தனாங்கள்" எண்டு தங்கள் புகழைப் பற்றி புள்ளிவிபரம் காட்டிக் கொண்டு இருக்கினமாம்.

**ப**ரீட்சை இல்லையென்று ரோட்டிலை கிரிக்கெட்டும், ஃபுட்போலும் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளையளுக்கு கொஞ்சம் வருத்தம்தான். 16 வயதுக்குட்பட்டவர்களிடம் இப்ப கருத்துக் கணிப்பு நடத்தினால் அதிகாரத் தரப்பாருக்கு எதிராகத்தான் முடிவு இருக்கும். திடிரென்று பரீட்சை அறிவிப்பு வந்ததல்லோ, அதைப்பற்றித்தான் சொன்னனான்.

**க**விஞர் அர்வூத் எழுதிய கவிதையில் ஒரு துளி: (இதிலிருந்து உங்களுக்கு என்ன புரிகிறது?) யோசியுங்கோ!

"கலைந்த குழல் அசைய
அவள் வந்தாள்.....
எனக்கொரு ரகசியம் புரிந்தது,
ஒளியைவிட
நிழலுக்கு அழகு அதிகம்"

# 57

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## வவுனியாவில் பிரச்சனை

1985 அக்டோபர் மாதம் புலிகள் அமைப்புக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை நான்கு இயக்க கூட்டமைப்புக்குள் விரிசலை ஏற்படுத்தியது.

அந்தப் பிரச்சனை ஏற்படக் காரணமாக இருந்தது வவுனியாவில் இடம் பெற்ற ஒரு சம்பவம்.

வவுனியா 2ம் கட்டையில் 'உதய அரிசி ஆலை' யில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்

# "யுத்த நிறுத்தம் ஒரு நாடகம்" 'ஸன்டே' இதழுக்கு பிரபா பேட்டி

உறுப்பினர் ஒருவருக்கும் ஆலையின் உரிமையாளர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. பிரச்சனை கை கலப்பு நடக்குமளவுக்குச் சென்றுவிட்டது.

'உதய அரிசி ஆலை' உரிமையாளர்களுக்கு புலிகள் அமைப்பினரோடு தொடர்பிருந்தது. அந்தத் துணிச்சலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினரை தாக்குமளவுக்கு சென்றனர்.

தமது உறுப்பினரோடு ஏற்பட்ட பிரச்சனை பற்றி கேட்பதற்காக உதய அரிசி ஆலைக்கு ஒரு ஜீப் வண்டியில் சென்றார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள்.

அவர்கள் வருவார்கள் என்று தெரிந்து காடையர்கள் சிலரை உதவிக்கு அழைத்து வைத்திருந்தனர் ஆலை உரிமை யாளர்கள்.

உதய அரிசி ஆலையின் மகன் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தில் இராணுவப் பயிற்சி எடுத்தவர். பின்னர் இயக்கத்தின் அனுமதியில்லாமல் வீட்டுக்குச் சென்று தலமறைவாக இருந்தார்.

ஜீப்பில் சென்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் இறங்கியபோது அரிசி ஆலைக்காரர்கள் முந்திக் கொண்டார்கள்.

ஜீப்பை சுற்றிவளைத்து தடிகளாலும், இரும்புக்கம்பிகளாலும் தாக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஜீப் நொருங்கிப் போனது. ஈ.பி.ஆர். எல்.எஃப் உறுப்பினர்களுக்கு காயம். தாக்குதல் நடத்திய கோஷ்டியில் முன்னணியில் நின்றவர் ஆலை உரிமையாளரின் மகன். ஈ.பி.ஆர்.எல்.எஃப் கொடுத்த பயிற்சியை திருப்பிக் கொடுத்து விட்டார்.

### மாத்தையாவின் கசப்பு

வவுனியாவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் இராணுவத் தளபதியாக இருந்தவர் றேகன்.

1984ம் ஆண்டு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (பி.எஃப்.எல்.பி) யிடம் பயற்சி பெற்றவர்களில் ஒருவர் றேகன்.

1985 முதல் வவுனியா ஈ.பி.ஆர். எல்.எஃப் இராணுவதளபதியாக பொறுப்பேற்றார். சொந்தப் பெயர் நல்லதம்பி இன்பராசா.

வன்னிப் பிராந்தியத்திற்கான புலிகளது தளபதியாக அப்போதிருந்தவர் மாத்தையா. வவுனியாவுக்கு பொறுப்பாக இருந்த றேகன் மீது மாத்தையாவுக்கு புகைச்சல்.

பாலஸ்தீன பயிற்சி பெற்றவர் என்று றேகனுக்கு மதிப்பிருப்பதை மாத்தையாவால் சகிக்க முடியவில்லை.

றேகனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்த மாத்தையாவுக்கு உதய அரிசி ஆலை பிரச்சனை ஒரு வாய்ப்பாகக் கிடைத்தது.

அதனால் பிரச்சனையை பெரிது படுத்த பின்னணியில் நின்று தூண்டி விட்டார்கள் புலிகள் அமைப்பினர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் மில் உரிமையாளர்களால் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்று ஒரு மாதத்தின் பின்னர், உதய அரிசி ஆலைக்கு ஆயுதபாணிகளாகச் சென்றார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள்.

அவர்கள் அங்கு வரப்போகும் செய்தி எப்படியோ ஆலை உரிமையாளர்களுக்குத் தெரிந்துவிட்டது. புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு செய்தி சொல்லி அனுப்பினார்கள். ஆயுதங்களோடு இரண்டு பேரை அனுப்பிவைத்தார் மாத்தையா.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் அரிசி ஆலையின் முன்பாக சென்று இறங்கியபோது, அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஈ.பி. ஆர்.எல்.எஃப் உறுப்பினர்களும் திருப்பிச் சுட்டார்கள்.

சண்டை முடிந்தபோது அரிசி ஆலை உரிமையாளர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர் ஒருவரும் பலியானார்.

### கிட்டு–மாத்தையா

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் பிரதம தளபதி டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

யாழ் மாவட்ட புலிகளின் தளபதி கிட்டுவையும், யாழ் மாவட்ட புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபனையும் சந்தித்து வவுனியா பிரச்சனை பற்றிப் பேசினார் டக்ளஸ் தேவானந்தா.

அந்த காலகட்டத்தில் மாத்தையாவுக்கும் கிட்டுவுக்கும் இடையே பனிப் போர் நடந்துகொண்டிருந்தது.

கிட்டுவைவிட மாத்தையா இயக்கத்தில் மூத்தவர். ஆனாலும் கிட்டு மளமளவென்று பிரபலம் பெற்றுவிட்டார்.

கிட்டு தலைமைதாங்கி நடத்திய தாக்குதல்கள் வெற்றியாக முடிந்தமையால் புலிகள் இயக்கத்திற்குள்ளும் கிட்டுவுக்கு தனிச் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியிருந்தது.

இந்திய அரசு வழங்கும் ஆயுதங்களை பிரபாகரன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பார்.

அவற்றில் தரமான ஆயுதங்களையும், யாழ்ப்பாணத்திற்கு என்று கூடிய எண்ணிக்கையிலும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, மீதியை ஏனைய பிராந்தியங்களுக்கு கிட்டு பகிர்ந்து கொடுத்துவிடுவார். அதனால் ஏனைய பிராந்தியங்களுக்கு போதிய ஆயுதங்கள் கிடைப்பதில்லை என்று மாத்தையா அணியினர் சொல்லிக் கொண்டிருந்தனர்.

யாழ்-பிராந்தியம் பூரண கட்டுப்பாட்டில் இருந்தமையால் ஏனைய பிராந்தியங்களைவிட

**அரசியல் தொடர்**

**அற்புதன் ~எழுதுவது**

அதிக நிதி திரட்டக்கூடிய வசதி கிட்டுவுக்கு இருந்தது.

நிதியில் ஒரு பகுதியைக் கேட்டுப் பார்த்தார் மாத்தையா. கிட்டு கொடுப்பதாக இல்லை. உடனே காரியத்தில் இறங்கினார் மாத்தையா.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று பொருட்களோடு திரும்பும் யாழ்ப்பாண வர்த்தகர்களது லொறிகள் வன்னிப் பகுதியில் வைத்து மாத்தையா அணியினரால் தடுக்கப்பட்டன.

பணம் தந்தால்தான் லொறிகள் மேற்கொண்டு செல்ல முடியும் என்று கூறி விட்டார்கள்.

"நாங்கள் யாழ்ப்பாணத்தில் உங்கள் இயக்கத்திற்கு நிதி கொடுத்திருக்கிறோம்" என்று லொறி உரிமையாளர்கள் சொல்லுவார்கள்.

"அதைக் கிட்டரிடம் பேசிக் கொள்ளுங்கள். இது வன்னிப் பகுதி. பணம் தராவிட்டால் லொறியை விடமாட்டோம்" என்று சொல்லி விடுவார்கள் மாத்தையா அணியினர்.

ஒரே இயக்கத்திடம் இரண்டு பகுதிகளில் பணம் கொடுக்க வேண்டிய நிலமை லொறி உரிமையாளர்களுக்கு.

இவ்வாறு யாழ்ப்பாண பிராந்திய, வன்னிப் பிராந்திய புலிகளின் அணிகளுக்கிடையே திரைமறைவுப் பூசல்கள் நடந்து கொண்டிருந்தன.

இந்த நேரத்தில்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கும், புலிகள் அமைப்புக்கும் வன்னிப் பகுதியில் மோதல் வெடிக்கத் தொடங்கியிருந்தது.

### பிரபாவின் உத்தரவு

வன்னிப் பிரச்சனை பற்றி டக்ளஸ் தேவானந்தா கூறிய போது "வன்னிப் பிரச்சனையை தலைவர்தான் தீர்க்க முடியும். நாம் சொன்னால் அங்கு கேட்கமாட்டார்கள். இந்தப் பிரச்சனையை சென்னையில் பேசித் தீர்ப்பதுதான் நல்லது." என்று சொல்லி விட்டார் கிட்டு.

இது தொடர்பாக சென்னையில் இருந்த பத்மநாபாவுக்கு அறிவித்தார் டக்ளஸ் தேவானந்தா.

இதற்கிடையே, வவுனியாவில் நடந்த பிரச்சனையை வவுனியாவிலேயே தீர்த்துக் கொள்ளலாம். இன்னும், சந்தித்துப் பேச்சு நடத்தலாம் என்றும் மாத்தையாவிடமிருந்து றேகனுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

பேச்சு நடத்துவதற்காக றேகன் உட்பட 16 ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் மாத்தையாவைச் சந்திக்கச் சென்றார்கள்.

பேச்சு நடத்தச் சென்ற உறுப்பினர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

16 பேரும் மாத்தையா அணியினரால் சுற்றிவளைக்கப்பட்டனர். ஆயுதங்கள் பறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இச் செய்தி உடனடியாக சென்னைக்கு அறிவிக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப் செயலாளர் நாயகம் பத்மநாபா அதனை உடனடியாக பிரபாகரனுக்கு தெரிவித்திருந்தார்.

"ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிய பிரபா 16 பேரையும் உடனடியாக விடுவிக்குமாறு மாத்தையாவுக்கு தகவல் அனுப்பினார்.

பிரபாவின் செய்தி கிடைத்ததும் மாத்தையா தனது உறுப்பினர்களுக்கு சொன்னது இது; "றேகனை தட்டிவிடுங்கள். ஏனையோரை விடுதலை செய்துவிடுங்கள்."

றேகன் சுட்டுக்கொல்லப்பட்டார். இது நடந்தது 23.11.85இல். இச் செய்தி சென்னையிலிருந்த பிரபாகரனுக்கும் அதிர்ச்சிதான்.

### அதிருப்திகள்

யாழ்-பிராந்திய புலிகள் அமைப்பு இராணுவத்தளபதி கிட்டு, திலீபன் ஆகியோரும் மாத்தையாவின் நடவடிக்கையையிட்டு அதிருப்தி கொள்ளவே செய்தனர்.

அப்போது கிட்டுவுக்கும், டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் யாழ்ப்பாண பிராந்தியத்தில் நல்லுறவு நிலவியது. ஏனைய இயக்கங்களைவிட புலிகளும், ஈ.பி.ஆர்.எல். எஃப்பும் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் நல்ல நெருக்கமாக இருந்தன.

அதனைப் பயன்படுத்தி பிரச்சனையை நெளிவு சுழிவாக கையாண்டிருந்தால் முரண்பாடு முற்றாமல் தடுத்திருக்கலாம்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்குள் காணப்பட்ட பூசல் காரணமாக பிரச்சனையை கையாள்வதில் நிதானமின்மை வெளிப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பின் பிரசாரப் பணிகளில் வரதராஜப்பெருமாளுக்கு இடம் கொடுக்க ஆரம்பித்தார் பத்மநாபா.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பின் அது வரை கால 'பிரசார வேலைகளை ரமேஷ், டேவிற்சன் ஆகியோர்தான் இந்தியாவில் முன்னெடுத்து வந்தனர்.

அவர்கள் இருவரும் பத்மநாபவின் தலைமைத்துவம் தொடர்பாக விமர்சனம்



எழுப்பிய உறுப்பினர்களோடு இணைந்து நின்றமையால், மெல்ல மெல்ல அவர்களை முக்கியத்துவம் குறைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் இருந்து இரகசிய வானொலி நிலையம் ஒன்றை ஆரம்பித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அது தொடர்பாக இந்திய பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எஃப் கமிட்டிக்குக் கூட விளக்கம் கொடுக்கப்படவில்லை.

வரதராஜப் பெருமாள் அப்போது இந்திய பிராந்தியக் கமிட்டி உறுப்பினராக இருந்தார். அவருக்கு பொறுப்பாளராக இருந்தவர் டேவிற்சன்.

டேவிற்சனுக்குத் தெரியாமல் வரதராஜப் பெருமாளுக்கு இரகசிய வானொலி பிரசாரப் பொறுப்பை வழங்கினார் பத்மநாபா.

### பாசிசக்காளி

றேகன் கொல்லப்பட்ட செய்தி அறிந்தவுடன் வரதராஜப் பெருமாள் தனது பிரசார திறமையைக் காட்ட நினைத்தார்.

பாசிசக் காளி என்றொரு கவிதையை எழுதி யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பியிருந்தார்கள். அக்கவிதையை எழுதியவர் சம-கண்ணன். அவர் யாழ்பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்.

பாசிசப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர் றேகனுக்கு வீரவணக்கம் என்னும் முன்னுரையோடு, அந்தக் கவிதையை தனது குரலில் வாசித்தார் வரதராஜப் பெருமாள்.

முதன் முதலில் புலிகள் அமைப்பினரை பாசிசப் புலிகள் என்று தமிழ் அமைப்பொன்று அழைக்கத் தொடங்கியது அன்றுதான்.

வானொலியைக் கேட்ட ஈ.பி.ஆர். எப்.எஃப் இந்தியப் பிராந்தியக் கமிட்டி உறுப்பிர்களுக்கு அதிர்ச்சி.

புலிகள் பாசிஸ்டுக்கள் என்ற முடிவுக்கு நாம் வந்தால், அவர்களோடு நான்கு இயக்க கூட்டமைப்பில் இருக்க முடியாது.

பாசிஸ்டுக்களோடு ஐக்கிய முன்னணியில் இணைந்து செயற்படுவது என்பது கேலிக்குரிய அரசியல் தந்திரமாகிவிடும்.

றேகன் கொல்லப்பட்டது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய நடவடிக்கை. ஆனால், அந்த நடவடிக்கைக்காக ஒட்டு மொத்தமாகவே புலிகளை பாசிஸ்டுக்கள் என்று குற்றம் காட்டலாமா? ஆம், எனில் புலிகள் எதிர்க்கப்படவேண்டியவர்கள் என்று அர்த்தமாகிறது.

பின்னர் எப்படி கூட்டமைப்பில் புலிகள் இருக்க முடியும்.

புலிகளை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்ற வேண்டும். அல்லது நாம் வெளியேற வேண்டும். என்று இந்திய பிராந்தியக் கமிட்டியினர் வாதிட்டனர்.

பத்மநாபாவால் பதில் சொல்ல முடியவில்லை.

### விரிசல்

அதேவேளையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் வானொலியில் தம்மை பாசிஸ்டுக்கள் என்று

# பிரபாவின் உத்தரவும் மாத்தையாவின் மீறலும்

கூறப்பட்டதை செவிமடுத்திருந்தார் பிரபாகரன்.

தமது வானொலியில் பாசிஸ்டுக்கள் என்று அறிவித்துவிட்டு, கூட்டமைப்புக் கூட்டத்தில் வைத்து வன்னிப் பிரச்சனையை கிளப்பியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

"றேகன் கொள்ளையடிக்கப் போனார். அதனால்தான் மரணதண்டனை வழங்கப் பட்டது" என்று சொல்லிவிட்டார் பிரபாகரன்.

அத்தோடு ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கும், புலிகளுக்கும் கூட்டமைப்பில் இருந்த நெருக்கம் விரிசலானது.

அந்த விரிசலை பயன்படுத்த தொடங்கினார் ஈரோஸ் பாலகுமார்.

புலிகள் அமைப்பை கூட்டமைப்புக்குள் கொண்டுவருவதற்கே அதிக விருப்பம் இல்லாமலிருந்தவர் பாலகுமார்.

புலிகளுக்கு, ஈ.பி.ஆர்.எல்.எஃப்'பும் நெருக்கமாக இருப்பதாகக் கூறி, ரெலோ சிறீசபாரத்தினத்தை கைக்குள் போட்டுக் கொண்டு, புளொட் அமைப்பை கூட்டமைப்புக்குள் கொண்டுவர திட்டமிட்டவர் பாலகுமார்.

புளொட்டையும் கூட்டமைப்புக்குள் கொண்டுவந்தால், புலிகளும், ஈ.பி.ஆர்.எப். எஃப் பும் அடக்கிவைக்கப்படலாம் என்று தந்திரக் கணக்குப் போட்டிருந்தவர் பாலகுமார்.

றேகனின் பிரச்சனையும், ஈ.பி.ஆர். எல்.எஃப் அதனை கையாண்ட முறையும் இப்போது ஈரோசுக்கு வாய்ப்பாகிவிட்டது.

இரு அமைப்புக்களையும் சமரசம் செய்து, கூட்டமைப்பிற்குள் தொடர்ந்து வைத்திருக்கும் நடுநிலையாளர் பாத்திரத்தை பாலகுமார் தனது கையில் எடுத்துக் கொண்டார்.

மெல்ல, மெல்ல புலிகள் அமைப்போடு நெருங்கத் தொடங்கியது ஈரோஸ். பின் நாட்களில் ஈரோசுக்கும், புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கத்திற்கும், தற்போது பாலகுமார் புலிகளின் பிரமுகராக மாறியிருப்பதற்கும் 'றேகன்' பிரச்சனைதான் பிள்ளையார் சுழிபோட்டது.

'பாசிசக்காளி' என்னும் கவிதையை எழுதியவர் சம-கண்ணன் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா.

அவர் இப்போது வெளிநாட்டில் இருக்கிறார். புலிகள் அமைப்பினரின் போராட்டம் நியாயமானது என்று பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்.

சென்னையில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கியிருந்தபோதும், யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கும், புலிகள்



அமைப்புக்கும் இடையே நல்லுறவு நிலவியது.

டக்ளஸ் தேவானந்தா, கிட்டு ஆகியோரின் அணுகுமுறையே பிரச்சனைகள் ஏற்படாமல் உறவு தொடரக் காரணமாக இருந்தது.

### தாக்குதல்

9.10.95 அன்று அதிகாலை வவுனியா பொலிஸ் நிலையம் தாக்குதலுக்கு உள்ளானது.

பொலிஸ் நிலையத்திறகு அருகில் இருந்த மின்மாற்றி முதலில் தகர்க்கப் பட்டது.

பொலிஸ் நிலையம் இருளில் மூழ்கியது. கைக்குண்டுகள், ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர்கள் மூலம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் தொடர்ந்தது.

பொலிஸார் பின்வாங்கிச் சென்று விட்டதால் பலத்த உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

கான்ஸ்டபிள் தோமஸ் (வயது 40) என்பவர் பலியானார். சிலர் காயமடைந்தனர். பொலிஸ் நிலையக் கட்டிடங்கள் சேதமடைந்தன.

தாக்குதல் ஒரு மணி நேரம் நீடித்தது.

இத்தாக்குதல் நடவடிக்கை ரெலோ இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டது.

### யுத்த நிறுத்தம்

இந்தியாவில் கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸன்டே' ஆங்கில வார இதழுக்கு பிரபா அளித்த பேட்டியில் இருந்து ஒரு பகுதி.

**"கேள்வி-** யுத்த நிறுத்தம் குறித்து உங்கள் தளபதிகளின் அபிப்பிராயம் என்ன?"

**பிரபா- யுத்த நிறுத்தம் என்பது ஒரு கேலிக்கூத்து. இதனுள் மறைந்துகொண்டு இலங்கை இராணுவம் எமது மக்களுக்கு எதிராக வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடுகிறது.**

**இன்றைய சூழ்நிலையில் நான் நிதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது. யுத்த நிறுத்தமென்பது ஒரு கேலிக்கூத்து என்பதை எனது தளபதிகள் நன்கறிவர்.**

**கேள்வி:** திரு.பாலசிங்கத்தின் நாடு கடத்தலின் பின்னர் தலைமறைவான நீங்கள் மீண்டும் வெளிவந்தது ஏன்?"

**பிரபா: பல காரணங்கள் உண்டு. நான் தலைமறைவாக இருந்தமையால் எமக்கு எதிரான தீயசக்திகள் எம்மை ஆபத்தான பயங்கரவாதிகள் என்றும், பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள் என்றும் சித்தரித்துக் காட்ட முற்பட்டன. சில பத்திரிகைகளும் வதந்திகளைக் கிளப்பின. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களை (தர்மலிங்கம், ஆலால சுந்தரம்) கொலை செய்த பழியையும் எம் மீது சுமத்தினார்கள்."**

பிரபா கூறியது போல, தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரை புலிகள் கொலை செய்ததாக ரெலோவும் நாசூக்காகக் கூறிவந்தது. தம்மீது சந்தேகம் விழாமலிருக்க ரெலோ செய்த தந்திரம் அது.

தர்மரையும், ஆலாலையும் 'ரெலோ' இயக்கமே கொலை செய்தது என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

*(தொடர்ந்து வரும்)*

## அலசுவது - இராஜதந்திரி

# புலிக்கொடி! சிங்கக்கொடி! நந்திக்கொடி!

# யாழிசையால் தோன்றிய யாழ்ப்பாணம்!

யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை மீண்டும் பறக்கவிட்டதை ஆட்சியாளர்கள் பெருமைக்குரிய தொன்றாகக் கருதி, ஜனாதிபதி செயலகத்தில் ஒருஅரச வைபவத்தையே நடத்தியிருந்தார்கள்.


யாழ்ப்பாண நகர் இன்று படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. ஆனால் யாழ்குடாநாட்டின் பெரும் பகுதி இன்னும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை என்று படையினர் தெரிவித்துள்ளார்கள்.

யாழ் குடாநாட்டின் பெரும்பகுதி மட்டுமல்ல, வவுனியாவுக்கு வடக்கேயுள்ள நிலப்பகுதியின் பெரும் பாகம் தொடர்ந்து எல்.ரி.ரி.ஈயினரது கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

அத்துடன் எல்.ரி.ரி.ஈயின் முக்கியஸ்தர்கள் பலரும் தற்போது வன்னிப் பகுதிக்கே வந்துள்ளனரெனவும் வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர கிழக்கு மாகாணத்திலும் எல்.ரி.ரி.ஈயினரது நடவடிக்கைகள் தொடருவதையும் கடந்தவாரம் கிழக்கில் புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப் படை முகாம் தாக்கப்பட்ட சம்பவம் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணக் கோட்டையை அடுத்துள்ள முற்றவெளி மைதானம் யாழ் குடாநாட்டவரைப் பொறுத்தவரை





முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும்.

கோட்டையைச் சூழவிருக்கும் முற்றவெளி மைதானம் 1990ம் ஆண்டுக்கு முன்னர் ஒரு போர்க்களமாகவே இருந்துவந்தது.

அப்போது யாழ் கோட்டைக்குள்ளிருந்த இலங்கை ஆயுதப்படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதும், அதற்குப் பதிலடியாக எல்.ரி.ரி.ஈயினர் தாக்குதல்களை மேற்கொள்வதும் நாளாந்த நிகழ்வாகவே அப்போது இருந்துவந்தன.

இத்தகைய மோதல் நிலை எல்.ரி.ரி.ஈயினருக்கும், அன்றைய ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ஆயுதப்படையினருக்குமிடையே 1990ம் ஆண்டில் உச்சநிலையை அடைந்திருந்தது.



> ‟ஆட்சியாளர்கள் தமது ஆளுமையை வெளிப் படுத்த சிங்கக் கொடியை யாழ்நகரில் ஏற்றியுள்ளார்கள்.”
>
> ‟எல்.ரி.ரி.ஈயினரும் வடக்கே தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் புலிக் கொடியையே பறக்கவிட்டுள்ளார்கள்.”

இதனையடுத்து அன்று எல்.ரி.ரி.ஈயினரது கையோங்கிய நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்தும் ஆயுதப்படையினர் புறமுதுகு காட்டவேண்டியதாயிற்று.

எல்.ரி.ரி.ஈயினரது கடுந்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாக கோட்டைக்குள்ளிருந்த ஆயுதப் படையினர் கோட்டையை அடுத்திருந்த பண்ணைக்கடல் மார்க்கமாக பின்வாங்கியிருந்தனர்.

எல்.ரி.ரி.ஈயினரது தாக்குதலை முறியடித்து முன்னேறுவதை விடுத்து, அத்தாக்குதலிலிருந்தும் பின்வாங்குவதையே ஒரு முக்கிய நடவடிக்கையாக படையினர் அன்று கருதியிருந்தனர்.

ஆயுதப் படையினரின் அன்றைய வடபகுதி கமாண்டராக இருந்த ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ யாழ்ப்பாணக் கோட்டைக்கப்பால் மண்டைதீவில் நின்று படையினரை பின்வாங்கச் செய்யும் நடவடிக்கைகளை நெறிப்படுத்தியிருந்தார்.

கோட்டைக்குள்ளிருந்து படையினர் முழு அளவில் வாபஸ்பெற்றதும், அன்று 1990ம் ஆண்டில் எல்.ரி.ரி.ஈயினரும் பெரும் குதூகலத்துடனேயே தமது வெற்றியைக் கொண்டாடியிருந்தனர்.

யாழ் கோட்டைக்குள் படையினர் இருந்த கட்டிடங்கள் யாவும் தகர்க்கப்பட்டு, எல்.ரி.ரி.ஈயினர் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தமது கொடியையும் பறக்கவிட்டனர்.

இவ்வெற்றியுடன் எல்.ரி.ரி.ஈயினர் யாழ் குடா நாட்டை முழு அளவில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். கூடவே படிப்படியாக தமது ஆதிக்கத்தையும் அங்கு வலுப்படுத்தினர்.

1990ம் ஆண்டு எல்.ரி.ரி.ஈயினருக்கும், ஆயுதப் படையினருக்குமிடையே ஏற்பட்ட மோதல் கிழக்கிலேயே முதலில் வெடித்திருந்தது.

இதன் பின்னர் திருகோணமலை, மற்றும் வடக்கே மாங்குளம், ஒட்டுசுட்டான், ஆனையிறவு என்று அம்மோதல் விரிவடைய ஆரம்பித்தது.

இம்மோதலின் ஆரம்பக்கட்டம் எல்.ரி.ரி.ஈயினருக்கு பெரு வெற்றியையே கொடுத்திருந்தது. மாங்குளம், ஒட்டுசுட்டான் இராணுவ முகாம்கள், பொலிஸ்நிலையங்கள் என்பன அவர்களிடம் வீழ்ச்சி கண்டன.

இருந்தபோதிலும் யாழ்ப்பாணக் கோட்டையை தம்வசப்படுத்திய பின்னர், ஆனையிறவு இராணுவ முகாமை எல்.ரி.ரி.ஈயினர் கைப்பற்ற எடுத்த முயற்சி, அவர்களுக்கு குறிப்பிடத்தக்க இழப்பைக் கொடுத்திருந்தது.

ஆயுதப்படையினரும் தமது தரப்பில் பெரும் இழப்புகளுடனேயே எல்.ரி.ரி.ஈயினரின் ஆனையிறவுத் தாக்குதலை முறியடித்திருந்தனர்.

எனவே ஐ.தே.க.ஆட்சியில் எல்.ரி.ரி.ஈயினரது கரங்கள் பெருமளவில் பலமடைந்திருந்ததுடன், அவர்கள் எதிர்பார்த்திருந்த நிர்வாக அமைப்பையும் பறைசாற்றுவதாகவே யாழ்குடாநாடு விளங்கியிருந்தது.

ஆனால் தற்போது ஐந்து வருடங்களின் பின்னர் யாழ்ப்பாண நகர் மீண்டும் ஆயுதப்படையினர் வசமாகியுள்ளது. பாதுகாப்பமைச்சர் கேர்ணல் அனுருத்தரத்வத்த முப்படைத்தளபதிகள் சகிதம் யாழ்ப்பாணக் கோட்டையயடுத்த முற்றவெளி மைதானத்தில் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றிவிட்டிருந்தார்.

கையில் வாழுடன் நிற்கும் சிங்கக் கொடி மட்டும் கோட்டை முற்றவெளி மைதானத்தல் பறக்கவிடப்படவில்லை.

மஞ்சள் நிறப் பின்னணியுடன் சாந்தமாக கால்களை மடக்கி அமர்ந்திருக்கும் நந்திக் கொடியும் யாழ்ப்பாணக் கோட்டைக்கருகே பறக்க விடப்பட்டது.

எனவே கடந்த ஐந்து வருடங்களாக புலிக் கொடி பறந்த யாழ் குடாநாட்டில், தற்போது சிங்கக் கொடியும், அதனருகே நந்திக் கொடியும் பறந்த வண்ணமிருக்கின்றன.

'நந்தி' என்பது காளை மாட்டையே குறிக்கும்.

புலி, சிங்கம், நந்தி இம்மூன்றும் மிருகங்களே.

ஒரு காட்டில் புலியும், சிங்கமும் ஒன்றாக வாழலாம். ஏனெனில் இவை இரண்டினதும் குணாம்சங்கள் பல்வேறு விதத்திலும் ஒன்று பட்டதாகவே இருக்கின்றன.

புலியும், சிங்கமும் வேட்டையாடி வாழும் மிருகங்களாகும். எத்தகைய கொடிய பசியிலும் இவை இலை குழையையோ, அல்லது புல்லையோ புசிக்கமாட்டா.

இரத்தம் கசியும் மாமிசத்தையே, அதுவும் ஒரு தாவரபட்சிணியான அப்பாவி மிருகத்தின் மாமிசத்தை கடித்துக் கிழித்துப் புசித்தே புலியும், சிங்கமும் தமது பசியை போக்கிக் கொள்வதுண்டு.

ஆனால் 'நந்தி' என்றழைக்கப்படும் காளை மாடு புல்லையும், இலைகுழையையுமே தின்னும் ஓர் அப்பாவிமிருகமாகும்.

இந்நிலையில் சிங்கமும், புலியும் இருக்குமிடத்தில் ஒரு நந்தியும், அதாவது காளை மாடும் அமைதியாக வாழும் நிலை ஏற்படுவது சாத்தியம்தானோ என்றும் கேட்க வேண்டியுள்ளது.

ஆட்சியாளர்கள் தமது ஆளுமையை வெளிப் படுத்த சிங்கக் கொடியை யாழ்நகரில் ஏற்றியுள்ளார்கள்.

எல்.ரி.ரி.ஈயினரும் வடக்கே தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் புலிக் கொடியையே பறக்கவிட்டுள்ளார்கள்.

இவற்றுக்கு நடுவே யாழ்ப்பாண மாவட்டத்தைக் குறிக்கும் நந்திக் கொடியும் பறக்க ஆரம்பித்திருப்பது, இன்றைய யாழ்ப்பாண நிலவரத்தை தத்ரூபமாகப் பறைசாற்றுவதாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாண மக்களின் இன்றைய நிலையும், கொடியில் காணப்படும் நந்தியின் அப்பாவித்தன்மையைப் புலப்படுத்துவதாகவே இருக்கின்றது.

புலிக் கொடியையும் சிங்கக் கொடியையும் ஏற்றிக் கொடும்போர் நடந்து கொண்டிருக்கும் போர்க்களம் மத்தியில் நந்திக் கொடியைப் பிரதிபலிக்கும் அப்பாவி யாழ்ப்பாணமக்களால் எவ்வகையிலும் அமைதியாகவும் சமாதானத்துடனும் வாழ முடியாது என்பது தெட்டத் தெளிவு.

ஒப்பரேஷன் ரிவிரெசப் படையெடுப்பு ஆரம்பமானதையடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் படும் அவஸ்த்தை அவலம் என்பன நரகலோகக் கதைகளில் வரும் கொடுமைகளை ஒத்தவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவ அழுத்தங்களிலிருந்தும் முழுமையாக விடுபடாதவரை ஆட்சியாளர்கள் எதிர்பார்ப்பது போல யாழ்ப்பாண மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படவே செய்யும்.

தென்னிலங்கையிலிருந்து சதுரங்கத் தட்டில் காய்களை நகர்த்துவது போல ஆட்சியாளர்கள் கருத்துக்களை வெளியிடலாம், ஆனால் நடைமுறையில் யாழ்ப்பாண மக்களின் பாதுகாப்பு, அமைதி என்பன எவ்வகையிலும் தொடர்ந்து கேள்விக் குறியாகவே இருக்கும்.

எல்.ரி.ரி.ஈயினர் யாழ்ப்பாணநகர் படையினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து விடுத்துள்ள அறிக்கைகளில் தாம் தொடர்ந்து போரிடப் போவதாகவும், படையினர் யாழ்ப்பாணத்திலிருந்து விலகாதவரை சமாதான முயற்சிகள் சாத்தியமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே கடந்த 12 வருடங்களாக பல்வேறு வடிவத்திலும், போர்ச்சூழலின் கொடுமைகளைச் சந்தித்த யாழ்குடாநாட்டு மக்கள் தமது பாதுகாப்புக்கு தகுந்த உத்தரவாதம் கிடைக்காதவரை தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதற்க்கு அச்சம் கொள்வார்கள் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதேயாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும், அவரவரது பாட்டிமார், தாய் தந்தையர், ஆசிரியர்கள் ஆகியோர் கூறிய யாழ்ப்பாணம் தோன்றிய கதை நிச்சயம் சிந்தையில் பொறிதட்டவே செய்யும்.

“பாணன் என்று ஓர் அந்தகன் யாழ் வாசிப்பதில் வல்லவன். அவனது யாழிசைக்கு ஓர் அரச உபகாரமாகக் கிடைத்த நிலப்பகுதியே யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றது.” இதுவே யாழ்ப்பாணம் பிறந்த கதை.

ஆனால் இன்றோ.....??

### சென்றவாரத் தவறு

சென்ற வாரம் இராஜதந்திரியின் அலசலில், அமைதியை விரும்பும் வடபகுதி மக்கள் இரு சாராரும் தமது கெடுபிடியைத் தளர்த்தி அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதையே விரும்புகின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார். அச்சுப்பிழை காரணமாக 'அமைதியை விரும்பும் மக்கள்' என்பது 'ஜனாதிபதியை விரும்பும்' என்று தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

—ஆ.ர்.

# சுட்டு வீரு கார்லோஸ்

எழுதுவது 14 ரசிகன்

**மௌ**க்கார் பெல்லை ஃபிரான்ஸ் உளவுத்துறையான **D.S.T** விடுதலை செய்தது ஒரு நாடகம்.

மௌக்கார்பெல்லிடம் இருந்த ஆவணங்கள் அனைத்தும் பிரதியெடுக்கப்பட்ட பின்னர்தான் அவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆவணங்களைப் பற்றி ஏதும் அறியாதது போல நடித்து, மௌக்கார்பெல்லிடம் அவற்றைத் திருப்பிக்கொடுத்து, அவனை விடுதலை செய்து அனுப்பிவிட்டு, நிழலாகத் தொடர்ந்தது **D.S.T**

மௌக்கார்பெல் எங்கு சென்றாலும் **D.S.T** ஒற்றர்கள் தொடர்ந்து சென்றனர்.

டூ ரெளலியர் இல்லத்திற்கு கார்லோஸை சந்திக்க மௌக்கார் பெல் சென்றபோது, பின்னாலேயே சென்று நோட்டமிட்டார்கள் **D.S.T** ஒற்றர்கள்.

டூ ரெளியர் இல்லத் தனியறையில் மௌக்கார்பெல் தனக்கு நேர்ந்த அனுபவத்தை கார்லோஸிடம் விபரிக்கும் போதே, கார்லோஸுக்கு சந்தேகம் வந்து விட்டது.

மௌக்கார் பெல் பின்தொடரப் படலாம், கண்காணிக்கப்படலாம், இனிமேல் இவனோடு தொடர்புகொள்வது ஆபத்து என்று மனதில் குறித்துக் கொண்டான் கார்லோஸ்.

தனது ஆவணங்கள் அடங்கிய கைப்பையை கார்லோஸிடம் கொடுத்து, "இது பத்திரம். இரண்டு நாட்களில் வாங்கிக் கொள்கிறேன்."

கார்லோஸ் அதனை வாங்குவதற்கு யோசித்தான் "இதற்குள் என்னவெல்லாம் இருக்கின்றன?" என்று கேட்டான்.

"மிக முக்கிய இரகசியங்கள்.தளபதி வாடி ஹாட்டாட்டின் உத்தரவுகள்."

இடைமறித்துக் கேட்டான் கார்லோஸ் "அப்படியானால் துபாய் தூதரைக் கடத்தும் திட்டம் பற்றிய குறிப்புக்கள்?"

"அதுவும் இருக்கிறது." என்று மௌக்கார் பெல் சொன்னபோது, பொறிகலங்கியது போல இருந்தது கார்லோஸுக்கு.

இரகசிய ஆவணங்களை கையில் கொண்டுதிரிவது தவறு. தலைமறைவு இரகசிய இயக்க விதிகளுக்கு முற்றிலும் மாறான சமாச்சாரம்.

எனது பொறுப்பாளர் ஒரு மடையன் மாதிரி நடந்து கொண்டிருக்கிறான்.

இப்போது தளபதி வாடி ஹாட்டாட் மீதே கார்லோஸுக்குள் சின்னதாய் ஒரு வெறுப்பு வந்து அமர்ந்தது.

'ஐரோப்பிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இப்படியொரு முட்டாளை எப்படித் தெரிவு செய்தார் தளபதி வாடி ஹாட்டாட்?' என்று நினைத்துக் கொண்டே, மௌக்கார்பெல்லிடமிருந்து கைப்பையைப் பெற்றுக் கொண்டான் கார்லோஸ்.

கைப்பையை பெற்றுக் கொண்டுவிட்டு கார்லோஸ் சொன்னான்; "இனி நீங்கள் இங்கே வரவேண்டாம். தேவையானால் தொலைபேசியில் தகவல் சொல்லுங்கள். நான் வருகிறேன்."

மௌக்கார்பெல் புறப்பட்டான். தெருவில் இறங்கி ஒரு டாக்ஸி பிடித்து ஏறிக் கொண்டான். அந்த டாக்ஸியை பின் தொடர்ந்து பறந்தது **D.S.T** ஒற்றர்களின் நீலநிறக் கார்.

காரில் இருந்து தனது மேலதிகாரியுடன் வாக்கிடோக்கியில் பேசினான் **D.S.T** ஆள்.

"சேர், வரும்போது கைப்பையுடன் வந்த மௌக்கார் பெல், திரும்பிச் செல்லும் போது வெறுங்கையை வீசிக்கொண்டு போகிறார். ஓவர்"

மேலதிகாரியிடமிடமிருந்து பதில் வந்தது; "மௌக்கார் பெல் சென்ற வீட்டிலிருந்து யார் வெளியே போனாலும் நம் வலையிலிருந்து தப்பவிடாமல் கவனியுங்கள். மௌக்கார் பெல்லை தொடருங்கள். ஓவர்."

▭ ▭ ▭

**இ**லண்டனில் துபாய் தூதரை கடத்தி வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்ட பங்களாவில் தனித்திருந்த நடியாவுக்கு கார்லோஸ் மூன்று நாட்களாக தொடர்பு கொள்ளாமலிருந்தது தவிப்பாக இருந்தது.

கார்லோஸின் தகவலுக்காக நடியா காத்திருந்தாள்.

அதே நேரத்தில் ஃபிரான்சிலிருந்து இலண்டனுக்கு தொடர்பு கொண்டான் கார்லோஸ். தொடர்பு கொண்டது போஸ் என்பவனுடன். துபாய் தூதர் கடத்தலுக்கு உதவுவதற்காக இலண்டனில் நியமிக்கப் பட்டவன் போஸ்

போஸுக்கு கார்லோஸ் சொன்னான், "நாங்கள் செய்ய நினைத்த வியாபாரத்தை தற்போதைக்கு ஒத்திவைக்கலாம். பங்களாவையையும் காலி செய்யலாம் என்று நினைக்கிறேன். பின்னர் தொடர்பு கொள்கிறேன்."

* * *

'ஃபிரான்சில் இனி இருப்பது சிக்கல். தப்பிவிடு' என்று கார்லோஸுக்குள் ஒரு குரல் கேட்டது.

'இல்லையில்லை, இனி நீதான் ஐரோப்பிய நடவடிக்கைகளுக்கு தலைவன். தலைவன் களத்தைவிட்டுப் போகலாமா? கூடாது; நில்!' என்றது இன்னொரு குரல்.

இரண்டாவது குரல்தான் கார்லோஸுக்கும் பிடித்திருந்தது.

டூ ரெளலியர் இல்லத்தில் தனியறையில் நான்சியின் அணைப்பில் இருந்தான் கார்லோஸ். அப்போதுதான் குளித்துவிட்டு வந்த சோப் வாசனை மாறாமல் இருந்த நான்சியின் உடலை கண்டும், கேட்டும், உணர்ந்தும் கொண்டிருந்தான் கார்லோஸ்.

அவள் காதுக்குள் கார்லோஸ் சொன்ன ஜோக்குக்காக வெட்கப்பட்டு, கார்லோஸின் நுனிமூக்கில் மெல்லக் கடித்தாள் நான்சி.

"தினமும் மெருகேறுகிறாய் நீ. இயற்கை தானா இதெல்லாம்" என்று கார்லோஸ் தொட்ட இடத்துக்காக மீண்டும் ஒரு தடவை நான்சி வெட்டப்பட்டுக்கொண்டிருக்க, வெளியே பூட்ஸ் சத்தங்கள் கேட்டன.

சட்டென்று நான்சியை தள்ளிவிட்டு கார்லோஸ் எழுந்து சட்டையை மாட்டிக் கொள்ள, நான்சியும் கவுனுக்குள் புகுந்து கொண்டாள்.

கதவைத் திறந்துபார்க்க, வெளியே ஃபிரான்ஸ் பொலிஸ்.

பிரான்ஸ் உளவுத்துறையான **D.S.T** யின் உயரதிகாரி ஹெரான்ஸ் மத்தியில் நிற்க, அவரது இருபுறமும் இன்பெக்டர் ரெஸ்மண்ட்டும், இன்ஸ்பெக்டர் டொனாற்றினியும் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களது தோளுக்கு மேலாக விழிகளை ஏவிய கார்லோஸ் அதிர்ந்து போனான். அங்கே மௌக்கார்பெல் நடுநடுங்கிக் கொண்டு நின்றிருந்தான்.

"பயந்தாங் கொள்ளிப் பயல். காட்டிக் கொடுத்துவிட்டான்" கார்லோஸ் முணுமுணுத்தான்.

"ஹலோ!" என்று கார்லோஸீடம் கை நீட்டினார் அதிகாரி ஹெரான்ஸ்.

கார்லோஸும் கைநீட்டி குலுக்கிக் கொண்டு, இயல்பாக நடந்த கொள்ள நினைத்து, முகத்தில் ஒரு புன்னகையை சூடிக்கொண்டு, ஹோலில் இருந்த சோபாக்களை நோக்கி நடந்து, 'பிளீஸ் சிட்டவுன்' என்றுவிட்டு, அதிகாரி மட்டும் அமர்ந்து கொள்ள, தானும் அமர்ந்து கொண்டு, 'யெஸ்' என்றான் கார்லோஸ்.

"அவரைத் தெரியுமா?" என்று மௌக்கார் பெல்லைக் காட்டிக் கேட்டார் ஹெரான்ஸ்.

கேட்டுவிட்டு தன்னையே கூர்ந்து நோக்கும் ஹெரான்ஸ் மீது பார்வையை விலக்கி விட்டு, மௌக்கார் பெல்லை புதிதாக பார்ப்பது போல பார்த்துக் கொண்டே, அதனையே யோசிக்கக் கிடைத்த கால அவகாசமாகப் பயன்படுத்தினான் கார்லோஸ்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் அவரைத் தெரியாதா உங்களுக்கு? தனது கைப்பையை உங்களிடம் தந்ததாகச் சொலகிறாரே அவர்" என்று சொன்னார் ஹெரான்ஸ். அவர் செய்த தவறு அதுதான்.



அப்படிச் சொல்லியிருக்காவிட்டால் மௌக்கார்பெல்லை தனக்கு தெரியாது என்று கார்லோஸ் மறுத்திருப்பான்.

மறுத்திருந்தால் பிரச்சனை வளர்ந்திருக்கும். கார்லோஸை கைதுசெய்து, வீடு முழுக்க பொலிஸ் துருவியிருக்கும். கார்லோஸ் தட்புவதும் கஸ்டமாக இருந்திருக்கும்.

இப்போது கார்லோஸுக்கு நிலமை புரிந்துவிட்டது. மறைப்பதைவிட, உண்மையைச் சொல்லிவிடுவதுதான் நல்லது.

"யெஸ் இவரைத் தெரியும். ஒரு கைப்பையை என்னிடம் தந்து, பத்திரமாக வைத்திருக்கச் சொல்லியிருந்தார். என்ன பிரச்சனை மிஸ்டர்..."

"ஹெரான்ஸ்!"

"என்ன பிரச்சனை மிஸ்டர் ஹெரான்ஸ்?"

"அந்தப் பையை நாங்கள் பார்வையிட வேண்டும். காட்ட முடியுமா?"

"நிச்சயமாக... நான்சி அந்த அறையில் எனது மேசையில்.. வேண்டாம் நானே வருகிறேன். வன்மினிட் பிளீஸ்" சோபாவில் இருந்து எழுந்துகொண்டு, இன்ஸ்பெக்டர்கள் இருவரிடமும், "நீங்களும் அமரலாமே" என்று புன்னைகத்து, நான்சியிடம் திரும்பி, "நான்சி–பியர் கொடு இவர்களுக்கு" என்றுவிட்டு தனது அறைக்குள் போனான் கார்லோஸ்.

கார்லோஸ் பற்றி **D.S.T** விசாரித்த் போது மௌகார்பெல் உண்மையைச் சொல்லவில்லை. தமது நடவடிக்கைக்கும் அவனுக்கும் தொடர்பில்லை. அவன் ஒரு உல்லாசப் பிரியன். கைப்பையில் என்ன இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. டூரெளலியர் இல்லத்திற்கு சந்தோசத்துக்காக நான் செல்வதுண்டு. அப்போதுதான் கார்லோஸ் அறிமுகமானான்." என்றுதான் மௌக்கார்பெல் சொல்லியிருந்தான்.

மௌக்கார்பெல் பயந்தாங் கொள்ளி, இரகசிய நடவடிக்கைக்கு பொருத்தமில்லாதவன் என்று கார்லோஸ் நினைத்தது தவறில்லையென்றாலும், கார்லோஸை பற்றிய உண்மைகளை ஃபிரான்ஸ் உளவுத்துறையிடம் மௌக்கார்பெல் மறைத்தது பெரிய காரியம். அது காலோஸுக்கு தெரியாது.

ஆனால் அதுதான் இப்போது கார்லோஸின் நடிப்புக்கு கைகொடுத்தது. அவனை ஒரு அப்பாவி என்று நினைத்துக் கொண்டு, நான்சி கொடுத்த பியரையும், கவுணை மீறி வெளிப்பட்ட அவளது திரட்சிகளையும் ரசித்துக் கொண்டிருந்தார் ஹெரான்ஸ்

உள்ளே போன கார்லோஸ் வெளியே வந்தான். ஆனால் கையில் இருந்தது கைப்பையல்ல, கைத்துப்பாக்கி.

கைத்துப்பாக்கியோடு கார்லோஸைக் கண்டதும் ஹெரான்ஸ் சோபாவில் இருந்து சட்டென்று எழுந்து கொள்ள, கார்லோஸ் சுட்டான்.

துல்லியமான குறி. ஹெரான்ஸுன் கழுத்தில் குண்டு பாய்ந்தது.

தாமதிக்கவேயில்லை. அடுத்த சூடு இன்ஸ்பெக்டர் டொனாற்றினியின் மீது விழுந்தது.

அவரது இடது புற நெற்றயில் பாய்ந்தது குண்டு. அதேவேகத்தில் கைத்துப்பாக்கியை திருப்பி இன்ஸ்பெக்டர் ரெய்மண்ட் மீது சுட்டான் கார்லோஸ். மார்பில் தைத்தது குண்டு.

மூவரும் சரிந்தனர். குண்டுகளை விரயமாக்காது குறி தவறாத சூடுகள்.

இப்போது மௌக்கார் பெல்லின் மீது கார்லோஸீன் விழிகள் பாய்ந்து நின்றன.

மௌக்கார்பெல்லுக்கு கார்லோஸுன் பார்வையில் தெரிந்த தீவிரம் நடுக்கத்தை தர, ஒரு மூலையில் ஒடுங்கிக்கொண்டு, குந்தியிருந்து, "சுடாதே, என்னைச் சுடாதே, நான் உன்னை...கா....காட்......" சொல்லி முடிக்க முன்னர் கார்லோஸ் சுட்டுவிட்டான்.

'டூமீல்'

இரண்டாவது தடவையும் சுட்டான், சுடும்போது சொன்னான் கார்லோஸ்:

"துரோகி... நீ துரோகி.."

'டுமீல்'

இரண்டு சூடுகளும் மௌக்கார் பெல்லின் நெற்றியில் பொட்டுவைத்தன.

அவன் மிக நிச்சயமாகச் செத்துப் போனான்.

கார்லோஸ் செய்த முதற் கொலையே– நான்கு கொலைகள்.

உலகையே நடுங்கவைத்த கார்லோஸின் சாகசங்களில் இனித்தான் சூடு பிடிக்கப்போகிறது. **(தொடர்ந்து வரும்)**

10 வித வெடிகுண்டு

# ஹலோ டாக்டர்

## தற்கொலை ஆசையைத் தடுக்கலாமா?

"**வ**ணக்கம் டாக்டர். இன்று என் நண்பர்கள் பலர் கேட்கச் சொன்ன கேள்விகள் கைவசம் தயாராக உள்ளன. நீங்கள் ரெடியா டாக்டர்? பார்க்கவே தெரிகிறது பனிச்சென்று உற்சாகமாக இருக்கிறீர்கள்."

"காலையில் பெய்த பனியில் குளிர்ந்து போய்த்தான் இருக்கிறேன். நீங்கள் நேரடியாகவே கேள்விக்கு வரலாம்."

"சிலருக்கு தூக்கத்தில் பயங்கரமான கனவு ஏற்பட்டு அலறித்துடிக்கிறார்களே. ஏன் டாக்டர்?"

"தூக்கத்தில் மனப்படபடப்பினால் வரும் நோய் இது. படுப்பதற்கு முன் உற்சாகமாக இருக்கவேண்டும். ஓய்வு நல்ல பலனைத் தரும்."

"என் நண்பரின் மகனுக்கு 16 வயது. எதைப் படித்தாலும் உடனே மறந்து விடுகிறான். மூளையில் ஏதாவது பிரச்சனை இருக்குமா?"

"முழுக் கவனத்துடன் படித்தால் பிரச்சனையிராது. பாடங்களை அப்படியே மனப்பாடம் செய்யாமல், முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டு படிக்கச் சொல்லுங்கள்."

"பியர் குடிப்பது நல்லது என்று சொல்வது உண்மையா டாக்டர்?"

"எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளியும் நல்ல கொள்ளி இல்லை. அதுவும் ஒருவகை தீய பழக்கம்தான். நாளடைவில் பிரச்சனைகள் ஆரம்பிக்கும்."

"தற்கொலை செய்து கொள்ளலாமா என்று அடிக்கடி எண்ணங்கள் வருவதாகச் சொல்கிறார்கள் சிலர். எப்படி அவர்களை மீள்விப்பது?"

"அவர்களது நலம் விரும்பும் மற்றவர்களோடு மனம்விட்டுப் பேசவேண்டும். பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையில்லை என்பதை பலரோடு பேசும் போதுதான் அறிய முடிகிறது. ஏனெனில் தன்னைப் போலவே பலரும் பிரச்சனைகளோடு வாழ்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆறுதலும் கிடைக்கும்."

"மனநோயைக் குணப்படுத்த முடியாது என்று கூறுகிறார்களே. உண்மையா டாக்டர்?"

"தவறான கருத்து. எல்லாவித மனநோய்களுக்கும் சிறந்த சிகிச்சை முறைகள் வந்து விட்டன. சிறந்த மனநோய் மருத்துவரை பிடித்தால் போதும்."



"ஏதேனும் அதிர்ச்சியான அல்லது மனவருத்தம் தரக்கூடிய விஷயங்களைக் கேள்விப்பட்ட உடன் சிலர் மயங்கி விழுந்து விடுகிறார்களே, இது ஏன் டாக்டர்?"

"இது ஹிஸ்டீரியா நோய். பிரச்சனைகள் உள்மனதைப் பாதிக்கும்போது, உடலில் சில பிரச்சனைகள், மயங்கி விழுதல் போன்றவை ஏற்படும். 'சைக்கோ தெரபி' மூலம் மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம்."

"தாம்பத்திய உறவில் நாட்டமில்லை என்று என் நண்பன் ஒருவன் புலம்பிக் கொண்டிருக்கிறான் டாக்டர்?"

"இதுவும் ஒரு மனநலம் சம்பந்தப்பட்ட பிரச்சனைதான். மனம் விட்டுப் பேசுதல். சந்தோசமான மனநிலையை ஏற்படுத்தக் கூடிய சூழலை வீட்டில் உருவாக்குதல். ஒருவரை ஒருவர் ஈர்த்துக் கொள்ளுதல் போன்றவை மூலமாக இதனை வெற்றி கொள்ளலாம்."

"ஒருவர் நடத்தையில் மற்றவர் சந்தேகப் படும் குறைபாட்டை எப்படிக் குணப் படுத்தலாம்?"

"'பரானாய்ட்' என்கிற சந்தேகநோய் இது. தாழ்வு மனப்பான்மை காரணமாக இது ஏற்படுகிறது. அடுத்தவர்மீது சந்தேகப் படுவது மட்டுமல்ல, தன்னை யாரும் கவனிப்பதில்லையோ என்று கவலைப்படும் சிலர் கூட, தன்னோடு வேறு சிலரை சம்பந்தப் படுத்தி தாமே கதை கட்டிவிடும் நோய்க்கும் உள்ளாகிறார்கள். இதெல்லாம் தாழ்வு மனப் பான்மையின் வெளிப்பாடுகளாகும். அப்படிப்பட்டவர்களை நல்ல மனநலமருத்துவரிடம் காண்பிப்பது நல்லது."

"முதுமையில் ஏற்படும் மனநோய்கள் எவை?"

"உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் தைரியம் குறைந்து மனக் கவலை ஏற்படலாம். சந்தேகநோய் சிலருக்கு ஏற்படலாம். மற்றும் சிலருக்கு நினைவாற்றலின்மை, உளறுதல் போன்ற மூளைச் செயற்பட்டு குறைநோய் (டிமென்ஷியா) ஏற்படலாம். இவற்றுக்கு மனநலச் சிகிச்சை பலனளிக்கும்."

"ஓ.கே.நன்றி டாக்டர்."

# இந்திய அழகியின் ஹொலிவூட் அனுபவம்

இந்திய அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டு இலண்டன் சென்று, புகழ்பெற்ற மொடல் நடிகையாகி, அதிலிருந்து ஹொலிவூட் நடிகையானவர் பெர்சிஸ்.

'ஸ்டார் ட்ரெக்' என்னும் படத்திற்காக இந்த இந்திய அழகி தனது தலையை மொட்டையடித்துக் கொண்டு நடித்தவர்.

குட்டை முடியுடனும், நவநாகரீக குட்டை உடைகளுடனும் ஹொலிவூட்டில் வலம்வந்த பெர்சிஸ் மீது பல ஹீரோக்கருக்கு ஒரு கண்.

தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை பொட்டென்று கொட்டியிருக்கிறார் பெர்சிஸ். கேளுங்களேன்.

"ஸ்டேசி கீஷ், மைக்ஹாமர், ரிச்சர்ட் ஆண்டர்சன், சில்வஸ்ரர் ஸ்டாலோன் என்று பிரபல நடிகர்களோடு பணியாற்றி இருக்கிறேன்.

சில்வஸ்ரருக்கு எப்போதுமே தன்னைப் பற்றி பெரிய எண்ணம். தான் அழைத்தால் போதும் உடனடியாக எல்லோரும் அவரிடம் ஓடிவிடுவார்கள் என்று நினைப்பு.

ஒரு முறை "ரி.வி யில் குத்துச் சண்டை பார்க்கலாம். என்னுடன் அறைக்கு வா" என்று அழைத்தார்.

"எனக்கு குத்துச் சண்டையிலெல்லாம் விருப்பமில்லை" என்று சொல்லி மறுத்து விட்டேன்.

மற்றொருமுறை படப்பிடிப்பு முடிந்த கையோடு அவரது உதவியாளர்கள் வற்புறுத்தி அவர் அறைக்கு என்னைக் கூட்டிச் சென்றுவிட்டனர்.

அங்கே போனதும் அவரிடம் ஜோசியம் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டேன். அவரது தாயார் ஜோசியத்தில் நம்பிக்கை உள்ளவர். சிறிது நேரம் சென்றபிறகு "இன்று இரவை என்னோடு கழிக்க முடியுமா?" என்று கேட்டார் சில்வஸ்ரர்.

"என்னுடைய சாரதி வெளியே காத்திருக்கிறார். தவிர நாளைக் காலையில் படப்பிடிப்பு இருக்கிறது" என்று நான் சொன்னேன்.

"படப்பிடிப்பு நேரத்தை நான் மாற்றுகிறேன். நீ இரு" என்றார்.

"முடியாது" என்று தீர்மானமாகச் சொன்னேன்.

"அப்படியானால் படத்தில் உனக்கு 'குளோஸ் அப்' காட்சிகள் கிடையாது" என்றார்.


நான் சரேலென்று எழுந்து அவர் அருகில் சென்றேன். அந்த நாலெழுத்துக்



கெட்டவார்த்தையைச் சொல்லி '... THE CLOSE UPS'– என்றேன். கதவை மூடிக் கொண்டு வெளியே வந்துவிட்டேன்.

அதன்பிறகுகூட சில்வஸ்ரர் பல முறை என்னிடம் முயன்றார். நான் இணங்கவே இல்லை.

இப்போதெல்லாம் சில்வஸ்ரரும் நானும் நல்ல நண்பர்கள். சில்வஸ்டரின் குணம் என்னவென்றால், அவர் என்ன விரும்புகிறாரோ அது கிடைத்துவிடுகிறது. அப்படிக் கிடைக்கவில்லையெனில் அதன்மீது அவர் மரியாதை செலுத்த ஆரம்பித்து விடுகிறார்." இதுதான் அழகி பெர்சிஸியின் அதிரடிப் பேட்டி.



# அந்த யானைக்கு நன்றி

மனிதனுக்கு மனிதன் உதவுகிறானோ இல்லையோ, மிருகங்கள் மனிதனுக்கு உதவத்தான் செய்கின்றன. இங்கிலாந்தில் போல்புறாக் என்ற இடத்தில், லொறி ஒன்று சகதியில் சிக்கிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் வண்டியை வெளியே எடுக்க முடியவில்லை. அருகில் இருந்த சேர்க்கஸ் கம்பனியைச் சேர்ந்த இந்திய யானையான மொரீன் ஆட்களுக்குக் கை (கால்?) கொடுக்க முன் வந்தது. மொரீனின் இரு முன்னங்கால்களும், வண்டி மீது பட்டதோ இல்லையோ, இதற்கு மேலும் சகதிக்குள் சிக்கி இருப்பது மரியாதை இல்லை என எண்ணி, 'மட மட' வென வெளிவந்து விட்டது லொறி! கால் கொடுத்த மொரீனுக்கு அன்று 'விசேஷ' கவனிப்பு சாப்பாட்டில்.


# தகவல் பெட்டி

இந்தியாவில் கேரள மாநிலத்தின் தலைநகரம் திருவனந்தபுரம். அங்கேதான் நடந்தது பிரசவ அதிசயங்களில் ஒன்று.

ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகளை வெளியிட்டு சாதனை படைத்துவிட்டார் ரமாதேவி என்னும் தாய்.

வயிற்றில் 5 குழந்தைகள் இருக்கும் விஷயம் 'ஸ்கேன்' எடுத்துப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது. ஒரு குழந்தை மட்டும் இருக்கக் கூடியதாக ஏனைய குழந்தைகளை அழித்துவிடும் வசதிகள் இப்போது இருக்கின்றன. ஆனாலும் அதற்கெல்லாம் செலவு அதிகம். அந்தக் கருவி கேரளாவிலும் இருக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று ஐந்து குழந்தைகளையும் கவனமாக சுமந்து பிரசவித்தார் ரமாதேவி.

## ஆசைக்கு ஐந்து



ரமாதேவி

இரண்டு குழந்தைகளை 1.5 கிலோ எடையிலும், மற்றும் இரு குழந்தைகள் 1.25 கிலோ எடையிலும், 5வது குழந்தை 1 கிலோ எடையிலும் பிறந்தன. பத்திரமாக பராமரித்து வருகிறார்கள் டாக்டர்கள். தாயும், சேய்களும் நலம்.






# நீ சிரித்தால் சிரிப்பழகு

அன்பாக வளர்க்கும் குரங்குக் குட்டியாருக்கு பல்லில் ஒரு கோளாறு. அப்படியே விட்டால் பல் அழகு பழுதாகி விடுமல்லவா. துரித சிகிச்சை நடக்கிறது. மிருகங்களின் பற்களை கவனிக்கவென்றே மேல் நாடுகளில் சிறப்புப் பற் சிகிச்சை நிபுணர்கள் இருக்கிறார்கள். மிருக வளர்ப்பு மேலோங்கிவருவதால் மிருக வைத்தியர்கள் தொகையும் அதிகரித்து வருகிறது. போகிற போக்கில் மனிதருக்கு வைத்தியம் செய்ய டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

# வாய் வரைந்த ஓவியம்



ஜெயின் மிக்கிஷிகி, ஐரோப்பாவைச் சேர்ந்த ஓவியர், இவர் இரண்டு கைகள் இல்லாத நிலையில் கால்கள் மற்றும் வாய் மூலம் ஓவியம் தீட்டுவதில் தலை சிறந்து விளங்குகின்றார்.

சிறுவயதில் மரம் ஏறும் போட்டியொன்றில் நண்பர்களுடன் சேர்ந்து ஏறியதில் மரத்தின் மேலிருந்து வீழ்ந்ததில் தனது இருகைகளையும் இழந்து விட்டார்.

சற்றும் மனம் தளராத ஜெயின் ஏதாவதொரு சாதனை மேற்கொள்ள எண்ணினார். ஓவியராவதே அவரது விருப்பு. அதற்காக கைகள் இல்லாத ஓவியக் கலைஞர்களின் கூட்டமைப்பு நடத்தும் இதழை வாங்கிப் படித்தபின் கடுமையான முயற்சியால் ஓவியம் தீட்டக் கற்றுக் கொண்டுவிட்டார். கால்களினால் வர்ணத்தினைக் குழைத்துக் கொள்வார்.

தற்போது ஐரோப்பாவின் தலைசிறந்த ஓவியர்களுள் இவரும் ஒருவர், 'தன்னம்பிக்கையும், ஓயாத பயிற்சியுமே தனது வெற்றியின் படிக்கட்டுக்கள்' என்கின்றார். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்."



# நவீன போர் நுட்பம்




இப்போதெல்லாம் யுத்தம் நவீனரகப்பட்டுவிட்டது. வெறுமனே சுடத் தெரிந்தால் மட்டும் போதாது. மூளைக்கும் வேலை வந்துவிட்டது.

வளைகுடா யுத்தத்தில் மூளைக்கு வேலை கொடுக்கும் சமாச்சாரங்கள் நிறைய இருந்தன. அதற்காகவே பொறியியலாளர்கள் பலரை களத்தில் இறக்கியது அமெரிக்கா.

ஈராக் அதிபர் சதாம் ஹீசைன் தனது நாட்டு எல்லையில் மிகப் பெரும் அகழிகளை வெட்டி, அதற்குள் எரிபொருட்களை போட்டுவிட்டு அகழிகளை மறைத்து வைத்திருந்தார்.

எதிரிப்படைகளது டாங்கிகள் வரும்போது அந்த அகழிகளுக்குள் விழும். அப்போது அங்குள்ள எரிபொருட்கள் பற்றி எரியும். அவற்றை மீறியும் படைகள் முன்னேறி வரும் போது 10 மீற்றர் இடைவெளிவிட்டு விதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் அவர்களை கவனித்துக் கொள்ளும்.

தரையில் திடலாக இருந்த பகுதிகளின் மறைவில் ஈராக் படைகள் நிலை எடுத்து பதுங்கி இருந்தன. இதெல்லாம் ஈராக் நம்பியிருந்த தந்திரங்கள்.


ஆனால் அமெரிக்காவுக்கு அந்தத் தந்திரங்கள் தெரியாமல் இல்லை.

ஈராக்கின் தந்திரத்தை முறியடிக்க அமெரிக்க பொறியியலாளர்கள் தமது மூளையைக் கசக்கி திட்டம் வகுத்தனர்.

அகழிகளை கடக்கும் போது பிளாஸ்ரிக் மிதவைகள் பயன்படுத்தப்பட்டு அவற்றின் மீது டாங்கிகள் சென்றன. டாங்கி ஒன்றிலிருந்து உருட்டிவிடப்படும் பிளாஸ்ரிக் மிதவைகள் அகழிகளை சமாளித்துக் கொள்ளும்.

கண்ணி வெடிகளை ஒவ்வொன்றாக கண்டறிந்து தாமதித்துக் கொண்டிருந்தால் ஈராக் படைகள் தாக்கத் தொடங்கிவிடும். எனவே, டாங்கி ஒன்றில் இருந்து கண்ணி வெடிகளை செயல் இழக்கச் செய்யும் ரொக்கட்டுக்கள் ஏவப்பட்டன. அந்த ரொக்கட்டுக்கள் ஏற்படுத்திய அதிர்வில் கண்ணி வெடிகள் டப்பு டப்பு என்று வெடித்து முடிந்தன.

இராணுவ புல்டோசர்கள் மூலம் ஈராக் படைகளுக்கு பாதுகாப்பு அரணாக இருந்த மண் திடல்கள் இடித்து தள்ளப்பட்டன. கனரக ஆயுதங்கள், வாகனங்கள், நவீன தொழில் நுட்பம் மூன்றும் கலந்து ஈராக்கை சரணடையச் செய்துவிட்டன.



# நட்சத்திர ஆராய்ச்சி

படத்தில் இருப்பவர் விண்வெளி ஆராய்ச்சியாளர் கொிலூபின்னோ. இவரின் கண்ணில் இருப்பது ஒரு வகையான எலக்ட்ரானிக் சிப் (Chip) ஆகும். இந்த சிப்கள்தான் நட்சத்திர இரகசியங்களை தெரிந்து கொள்ள உதவும் அடிப்படையான அம்சமாகும். ஒரு ரெலஸ்கோப்பில் இப்படிப்பட்ட சிப்கள் இலட்சக்கணக்கில் பொருத்தப்பட்டிருக்கும். நட்சத்திரங்களின் உருவ அமைப்புக்களை இவ்வகை சிப்கள் முதலில் உள்வாங்கிக் கொள்கின்றன. ஆனால் அந்தத் தோற்றங்கள் அவ்வளவு துல்லியமாக இருப்பதில்லை. அதனால் இன்னுமொரு விசேட கருவியின் உதவியுடன் நட்சத்திரங்களின் தோற்றங்களைத் துல்லியப்படுத்திப் பார்க்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள். படத்தில் இடதுபுறம் அக்கருவி காணப்படுகின்றது.

## அரசியல் படிக்கிறார் ரோஜா

அரசியல் விஞ்ஞானம் (பொலிடிகல் சயின்ஸ்) படித்து ஆராய்ச்சி செய்கிறார் ரோஜா. ஆராய்ச்சி செய்யப்போன இடத்தில் மாவட்ட உதவி ஆட்சித் தலைவருடன் காதல் ஏற்படுகிறது. இக் காட்சி இடம் பெறும் திரைப்படம் 'தமிழ் செல்வன்' உதவி ஆட்சித் தலைவர் தமிழ் செல்வனாக நடிக்கிறார் விஜயகாந்த்.

"விஜயகாந்த்துக்குள் இருக்கும் இன்னொரு விஜயகாந்த்தை இந்தப் படத்தில் காட்டப் போகிறேன். ஒரு நேர்மையான அதிகாரிக்கு ஏற்படும் பாதிப்புக்களை சொல்லப் போகிறேன்." என்கிறார் இயக்குநர் பாரதிராஜா.

பாரதிராஜா பற்றி விஜயகாந்த் சொல்வதையும் கேளுங்கள்: "அவரிடம் பணியாற்றுவது சுகமான அனுபவம். சின்னக் காட்சியோ, பெரிய காட்சியோ, அதற்கு என்ன தேவையோ அதை எம்மிடமிருந்து வாங்கிக் கொள்கிறார். திருப்தி அடையும் வரை விடவே மாட்டார்." என்கிறார் விஜயகாந்த்.

விழிகளில் விழுந்து
இதயம் நுழைந்து
உயிரில் கலந்த உறவே

இரவும் பகலும்
உரிமை கொள்ளும்
அந்திப் பொழுதில் வந்துவிடு

அலைகள் உறங்கும்
கரையில் இருப்பேன்
உயிரைத் திருப்பித் தந்துவிடு-
-[illegible]

## ஈடுகொடுக்க வேண்டும்

வினிதா நடிப்பில் மட்டுமல்ல, பேட்டி கொடுப்பதிலும் தாராளமும், துணிச்சலும் உள்ளவர்தான். கவர்ச்சி பற்றி வினிதா சொல்வதைக் கேளுங்கள். "நல்ல பாத்திரங்கள் வந்தால் சந்தோசம்தான். வராவிடில் கவர்ச்சியாக நடிப்பேன். யார் என்னைப் பற்றி எப்படிப் பேசினாலும் கவலைப்படமாட்டேன். கவர்ச்சியாக நடிக்காவிட்டால் பம்பாய் புயல்களுக்கு ஈடு கொடுப்பது எப்படி?இந்த விஷயத்தில் நான் எச்சரிக்கையாக இருக்கிறேன்." எப்படி வினிதாவின் உஷார்.


## சாந்தவியாகும் சங்கவி

பாரதிராஜா இயக்கத்தில் அந்திமந்தாரை படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் சங்கவியை அடையாளமே தெரியாமல் மாற்றிவிட்டார் பாரதிராஜா. சேலை கட்டி, சேலையின் பாரத்தை சுமந்து நடிக்க ரொம்பத்தான் கஷ்டப்படுகிறார் சங்கவி. பத்திரிகையாளர் சுதாங்கனும் படத்தில் நடிக்கிறார். அவரது மனைவியாக நடிக்கிறார் சங்கவி. பாரதிராஜாவின் இயக்கத்தில் நடிப்பதால்தான் சேலைக்குள் புகுந்து கொள்ள உடன்பட்டாரோ என்று கேட்டால், "நோ என் திறமைக்கு தீனி கிடைத்திருக்கிறது" என்கிறார். சங்கவி இப்படியெல்லாம் 'சாந்தவி' ஆனால் ரசிகர்களின் கதி என்ன?

## சோர் சோர்

மணிரத்னம் இயக்கத்தில் பிரசாந்த், ஹீரா, ஆனந்த் ஆகியோர் நடித்த படம் திருடா, திருடா. தமிழில் வந்தபோது ரசிகர்களின் இதயத்தை திருடமுடியாததால் பெரிதாக வசூல் பண்ண முடியவில்லை.

தற்போது இந்தியில் மொழி மாற்றப்பட்டு 'சோர் சோர்' என்ற பெயரில் திரையிடப்படவுள்ளது. இந்தியில் வாய்ப்புத் தேடி தலைகீழாக நின்ற ஹீராவுக்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்பு வந்துவிட்டது. 'சோர் சோர்' நன்றாக ஓடினால், இந்தியில் பிரபலமாக ஒரு வழி கிடைக்குமல்லவா. அதுதான் எதிர்பார்ப்பு.



உதயபிரகாஷ்-திவ்யா
படம்- நினைத்ததை முடிப்பவன்

## முத்த சுவரொட்டி

ஹாலிவுட் படங்கள் தொழில்நுட்பரீதியில்தான் தமிழ் படங்களைவிட உயர்ந்திருக்கின்றன. தமிழ் படவுலகத்தை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது என்று வாதிடுகிறார் கமல்.

தொழில்நுட்பரீதியிலும், நடிப்பிலும் 'குருதிப் புனல்' பலத்த பாராட்டைப் பெற்றிருப்பதால் திருப்தியோடு இருக்கிறார்.

கவுதமியை முத்தமிடும் காட்சியை பிரமாண்டமான சுவரொட்டியாக வெளியிட்டு விளம்பரம் செய்திருக்கிறார் கமல். அதனால் சிலர் முணு முணுத்தாலும் கமல் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கவுதமிகூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. கமலோடு முத்தமிட்டுக் கொண்டிருப்பதே ரசிகர்களிடம் தனக்கு ஒரு மவுசைத் தரும் என்று நினைக்கிறார் கவுதமி. முத்த விஷயத்தில் கமல் ஒன்று கொடுத்தா அது நூறு கொடுத்த மாதிரியோ?!



கமல்

## கலைக்கல்லூரி

புதிய நடிகர் மது கதாநாயகனாக நடிக்க, மோகினி கதாநாயகியாக நடிக்கும் படம் 'கலைக் கல்லூரி' படத்தின் கதையையும் மது எழுதியுள்ளார்

ஜி.சந்திரசேகர் என்பவர் இயக்குகிறார். எல்.ஏ.ராஜகுமார் பாடல்களை எழுத, புதிய இசையமைப்பாளர் ஷெரான் இசையமைக்கிறார். வடிவேலு, விசித்ரா ஆகியோரும் நடிக்கின்றனர்.


## காதோடு சொல்லுகிறோம்

'வி'என்ற எழுத்தில் பெயர் ஆரம்பிக்கும் மூன்றெழுத்து நடிகைக்கு தமிழில் ... மலையாளத்திலும் இப்போது வாய்ப்புக் குவிகிறது. நடிப்பென்று பார்த்தால் ... ஒன்றுமில்லை. அப்படியானால் எப்படி வாய்ப்புகள் குவிகின்றன? வாய்ப்... நல்ல கெட்டித்தனமாம்.

'பா'என்று ஆரம்பிக்கும் பிரிய நடிகைக்கு மலையாளப் படவுலகில் கடும் வரவேற்பாம். தமிழில் இழந்த வா... கொண்டிருக்கிறார். ஹீரோக்களை மட்டும் கைக்குள் போட்டால் போதாது. தயாரிப்பாளர்களையும் க... அனுபவத்தால் உணர்ந்து கொண்டிருக்... ...கை கொடுக்கிறது என்கிறார்கள்.

'க' அழுத்தமாய் முத்தா கொடுத்து த... பொறாமை வரச் செய்துவிட்டா... கொடுப்போம் என்று பல ந... ஆரம்பித்துவிட்டார்கள், புனலாக...

சின்னப் பெண் போல ஒ... கொண்டிருக்கிறார் 'சங்' ... படத்தில் 'சேலை' கட்டும் வி... விஷயமாகச் சொல்லுமளவு... இதுவரை சேலையை அதிக... ரசிக்கப்படுவார்களாக!



ஊர்மிளா

## குஷ்பு...

குஷ்புவை ... செல்லும் தயா... ஒரே ஒரு கேள்வி... சொல்லுங்கள்' ... கதாநாயகன் ... கேட்பதே கிடை... நடிகர் யாரா...

## ரஜினிமீ...

ரஜினிகாந்த் ... மல் மட்டுமே ... சொல்லியிருந்தார் ... சொன்ன கருத்து ... விடுவேனோ என்று ... போல சொல்லிவி... ஆனால் ... கருத்துச் ... அரசி...

# முகப்பில் மனிஷா கொய்ராலா



சங்கீதா
படம்- திலம் பார்க்கும் திலை

## மின்சாரக் கனவு

இந்தியில் இருந்து தமிழ் படவுலகுக்கு இறக்குமதியாகியுள்ள நடிகை கஜோல். 'மின்சாரக் கனவு' படத்தில் பிரபு தேவாவுடனும் அரவிந்தசாமியுடனும் 'டூயட்' பாடிக் கொண்டிருக்கிறார். படப்பிடிப்புக்கள் படு தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன.

பிரபு தேவாவும், அரவிந்தசாமியும் இணைந்து நடிப்பதால் இருவரது ரசிகர்களையும் திருப்திப் படுத்தும் வகையில் காட்சிகள் கட்டுத் தள்ளப்படுகின்றன.

'மின்சாரக் கனவு' ஜெயித்தால் தமிழிலும் கஜோலுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கலாம். இந்திப் படவுலகில் கஜோல் முதலாமிடத்தில் இல்லாவிட்டாலும் முன்னணியில்தான் இருக்கிறார். மின்சாரக் கனவில் கஜோல்தான் மின்சாரம்.

## சத்யராஜின் புதிய படம் — இரு ஜோடிகளோடு சேனாதிபதி

'சின்னத்தம்பி' படத்தை தயாரித்தவர் கேபாலு. அவர்தான் சத்யராஜ் ரசிகர் மன்றத் தலைவர். தற்போது பிரபு நடிக்கும் 'பரம்பரை' படத்தையும், சத்யராஜ் நடிக்கும் 'குங்குமப் பொட்டு கவுண்டர்' படத்தையும் தயாரிக்கத் திட்டமிட்டார். 'பரம்பரை' படப்பிடிப்பு ஆரம்பித்துவிட்டது. குங்குமப்பொட்டு கவுண்டர் கைவிடப்பட்டு விட்டது.

இப்போது சத்யராஜ் நடிக்கும் மற்றொரு படத்திற்குப் பூஜை போட்டுவிட்டார் கேபாலு. 'சேனாதிபதி' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதில் சத்யராஜுக்கு இரு வேடம். ஜோடிகளும் இருவர். ஒருவர் சுகன்யா. இன்னொருவர் சவுந்தர்யா. 'கிழக்குச் சீமையிலே,' 'கருத்தம்மா' ஆகிய படங்களுக்கு கதை வசனம் எழுதிய ரத்னகுமார் கதை, வசனம் எழுதி முதன் முதலாக இயக்கும் படம் 'சேனாதிபதி'.

பாடல்கள் வைரமுத்து. இசை தேவா. ஒளிப்பதிவு, பி.கண்ணன். கவுண்டமணி, விஜயகுமார், மணிவண்ணன், எம்.என் நம்பியார், செந்தில், பொன்னம்பலம், மனோரமா, ஸ்ரீவித்யா ஆகியோர் நடிக்கின்றனர்.



லதா
படம்- இரு வல்லவர்கள்

## தேடிச்செல்லும் வாய்ப்பு

எம்.ஜி.ஆரோடு உலகம் சுற்றும் வாலிபன் உட்பட பல படங்களில் கதாநாயகியாக நடித்த லதாவை ஞாபகம் இருக்கிறதா? எம்.ஜி.ஆரோடு சேர்த்து கிசுகிசுக்கப்பட்டவரல்லவா. தற்போது திரைச் சதை போட்டு ஆளே மாறியிருக்கிறார். ஆனாலும் அழகாக இருக்கிறார். அதனால் புதிய பட வாய்ப்புக்கள் சில அவரைத் தேடிப் போயிருக்கின்றன. அழகு நாயகியாக நடித்துவிட்டு அம்மா, அக்கா வேடங்களில் நடிப்பதா வேண்டாமா என்று தீவிர யோசனையில் இருக்கிறார் லதா. அம்மணி யோசித்து முடிப்பதற்குள் தேடிவந்த வாய்ப்பு தொலைந்து விடப் போகிறது.

## மோகன்லாலின் 70 நாட்கள்

மணிரத்னம் இயக்கும் 'ஆனந்தம்' படத்திற்காக 70 நாட்களை நடிக்க ஒதுக்கியுள்ளார் மோகன்லால். மலையாளத்தில் பிஸியான நடிகரான மோகன்லால் 70 நாட்கள் ஒரு படத்தில் நடிக்க ஒதுக்கியிருப்பது பேராச்சரியம். படப்பிடிப்பு ஏழு மாதங்கள் வரை நடைபெறும். ஏ.ஆர். ரகுமான் 'ஆனந்தம்' படப் பாடல்களுக்கு 'மெட்டு' அமைத்துவிட்டார். மெட்டுக்கள் போட மொரிசியஸ் தீவுக்குப் போயிருந்தார் ஏ.ஆர். ரகுமான். 'ஆனந்தம்' படத்தில் ஐந்து மொழி நடிகர், நடிகைகள் நடிக்கின்றனர்.

## பிரபுவோடும் சேருகிறார் நக்மா

பிரபுவும் நக்மாவும் முதன் முதலில் ஜோடி சேரும் படம் 'பெரிய தம்பி'. குஷ்புவும் பம்பாயிலிருந்து வந்தவர்தான். அவரோடு பிரபு ஜோடி சேர்ந்த 'சின்னத்தம்பி' சூப்பர் ஹிட். இப்போது பம்பாய் இறக்குமதி நக்மாவுடன் பிரபு ஜோடி சேரும் படம் பெரிய தம்பி. அதனால் பெரிய தம்பியும் சூப்பர் ஹிட்டாகும் என்று நம்புகிறார்கள்.

திரைக்கதை இயக்கம் சித்ராலட்சுமணன். இவர் ஏற்கனவே கமல் நடித்த சூரசம்காரம் படத்தை இயக்கியவர்.

சின்னத்தம்பி போலவே பெரியதம்பி படமும் கிராமச் சூழ்நிலையில் படமாகப் போகிறது. சத்யராஜ், பிரபு நடித்த படம் சின்னத்தம்பி, பெரியதம்பி. அந்தப் படப் பெயரை பாதி பாதியாக்கி இரண்டிலும் நாயகனாகிவிட்டார் பிரபு.

## வள்ளல் ரஜினி

ரஜினிகாந்த் அடுத்து நடிக்கப் போகும் படம் பற்றி பலவேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அதில் ஒரு தகவல் இது. ரஜினியின் அடுத்த படத்தின் பெயர் 'வள்ளல்'. இயக்குவது சுரேஷ் கிருஷ்ணா. பிரபல இந்தி நடிகை ஒருவர் ஜோடியாக நடிப்பார். 'பாட்சா' படத்தில் பின்னர் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு ஏற்பட்டிருந்த மனக் கசப்பை நீக்கிவிட்டார் ரஜினி என்கிறது அந்தத் தகவல். ரஜினியே உறுதிப்படுத்தினால்தான் உண்மை உறுதியாகும்.

## மினி சினி

* 'பாட்ஷா', 'முத்து' போன்ற படங்களின் நடன இயக்குநரான தருண்குமார், தற்போது பிரபு-ரோஜா நடித்துவரும் 'பரம்பரை' படத்தில் வில்லனாக நடித்து வருகிறார்.

* மோகன்லால் மலையாளத்தில் நடித்து வெற்றிபெற்ற 'ஸ்படிகம்' தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு 'யுத்தம்' என்ற பெயரில் வரவுள்ளது. விரைவில் 'ஸ்படிகம்' இந்தியில் தயாராகப் போகிறது. இந்தியில் சனில் ஷெட்டி கதாநாயகனாக நடிக்கிறார்.

* கார்த்திக்கிற்கு ஜோடியாக 'நந்தவனத்தேரு' படத்தில் அறிமுகமாகியவர் ஸ்ரீநிதி. 'நந்தவனத்தேரு' படத்திற்குப்பின் தமிழில் படங்கள் இல்லாததால், தெலுங்கில் மேக்னா என்ற பெயருடன் நுழைந்தார். தற்போது இரண்டு தெலுங்குப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் மேக்னா.

* 'எல்லாமே என் ராசாதான்' படத்திற்குப் பின் 'மாணிக்கம்' படத்தில் நடித்து வருகிறார் ராஜ்கிரண். இதனைத் தொடர்ந்து 'கட்டுமரக்காரன்' படத்தைத் தயாரித்த ஏ.ஜி.எஸ். திருவனம் தயாரிக்கும் 'பொன்னு வெளைஞ்ச பூமி' என்ற படத்தில் நடிக்கவுள்ளார்.

* சுரேஷ் கோபியோடு கஸ்தூரி நடித்த மலையாளப்படம் 'ந்தோற்சவம்' 'முத்து மச்சான்' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றுகிறார்கள். கஸ்தூரி சந்தோசத்தில் இருக்கிறார்.

* 'தொட்டாச்சிணுங்கி' படத்துக்கு இசையமைக்க அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருக்கும் ஜெரால்டு-பிலிப் சகோதரர்கள் பிறந்தது சென்னையில்தான். சின்ன வயதிலேயே அவுஸ்ரேலியா போய் விட்டார்கள்.

* ... படத்தில் நடிக்க ஹீரா ஐந்து இலட்சம் கேட்டார். அதனால் அவரை ஓரம் கட்டிவிட்டு ... நடிக்க வைத்திருக்கிறார் ஆர்.கே.செல்வமணி. அனுராதா பம்பாய் இறக்குமதி.

* ... வெளியில் படம் எடுத்தால் சிக்கல் வரும் என்பதால் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படம் ... விட்டது.

* ... படத்தில் ரேவதிக்கு கனமான பாத்திரம் அமையும்படி கதை பின்னப்பட்டுள்ளது. அர்ஜுன் இராஜுவை ...

'மின்சாரக் கனவு' படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதிக் கொண்டிருக்கும் வி.சி.குகநாதன் மற்றொரு பட வேலையையும் பொறுப்பெடுத்துள்ளார்.

## மைனர் மாப்பிள்ளை

... எழுதி இயக்கப் போகும் புதிய படம் மைனர் மாப்பிள்ளை. 'ஆசை' ... கதாநாயகனாக நடிக்கிறார். சுபாஸ்ரீ கதாநாயகியாக நடிக்கிறார். ... இசை, சந்திரபோஸ். செந்தில், வடிவேலு, விசுக், அலங்காதலம் ... நடிக்கின்றனர்.

## பட்டமாட்டார் பவதாரணி

'ராசய்யா' படத்தில் 'மஸ்தானா... மஸ்தானா' பாடலைப் பாடியவர் இளையராஜாவின் மகள் பவதாரணி என்பது தெரிந்த சங்கதி. தனது தந்தை இளையராஜா, மற்றும் தனது சகோதரர்கள் இசை அமைக்கும் படங்கள் தவிர வெளியார் இசையமைப்பில் பாடமாட்டாராம்.



சதாங்கன்-சங்கவி-சந்திரசேகர்
படம்- அந்தி மந்தாரை

# எனக்கு மறைக்கத் தெரியாது

## சில்க்சுமிதா மனம் திறந்து பேட்டி

சிலர் செய்வது போல தில்லு முல்லு திரைமறைவு இரகசியங்கள் எனக்குத் தெரியாது. நான் எதையும் மறைப்பதில்லை. மனதில் உள்ளதை அப்படியே கொட்டிவிடுவேன். பொது வாழ்க்கையில் மேல் மட்டத்தில் இருப்பவர்களைவிட நாம் எவ்வளவோ மேல். கவர்ச்சி நடிகைகள் என்றாலே மோசமானவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். இப்படியெல்லாம் சினிமா சஞ்சிகைகளுக்கு பொரிந்து தள்ளிப் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் சில்க் சுமிதா.

'யுத்தம்' என்று தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ள படத்தில் படு தாராளமாக நடித்திருக்கிறார் சுமிதா. மோகன்லால்தான் கதாநாயகன். சபலிஸ்ட்டான மோகன்லாலுக்கு சபலம் கொடுக்கும் பாத்திரம். வெளுத்து வாங்கியிருக்கிறார் சுமிதா.

தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்தியில் 30 படங்களுக்கு மேல் ஆடிவிட்டார். ஒரு நடனக் காட்சியை எடுத்து முடிக்க தமிழில் என்றால் மூன்று நாட்கள் போதும். அதுவே இந்தியில் என்றால் எட்டு நாட்கள் வேண்டும். அதனால் இந்தியில் ஆடும் ஆர்வம் போய்விட்டது என்கிறார் சுமிதா.

# லேடீஸ் ஸ்பெஷல்

சுய சோதனை

# சகுனம் பார்த்து செயல்படுபவரா நீங்கள்?

**மு**க்கியமான வேலை நிமித்தம் நீங்கள் வெளியே கிளம்பும்போது, கறுப்பு பூனை ஒன்று குறுக்கே ஓடி உங்கள் மனதை தடுமாறச் செய்கிறதா? நீங்கள் எந்த அளவுக்கு மூடநம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள் என்பதை கீழே கொடுக்கப் பட்டுள்ள கேள்விகளுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என பதிலளித்து கணித்துப் பாருங்கள்.

1. என்னிடமுள்ள ஒரு குறிப்பிட்ட உடையை அணிந்து கொள்ளும் போது தான் நினைத்த காரியங்கள் நடக்கின்றன என நம்புகிறேன்.
2. எனக்குப் பிடித்தமான அல்லது என் ராசிக்கு ஏற்ற பரிசுப் பொருள் ஏதேனும் கிடைத்தால் எனக்கு உற்சாகமாக இருக்கும்.
3. பறவைகள் அல்லது சோகமான நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் ஓவியங்கள் என் வீட்டுச் சுவரை அலங்கரிப்பதை நான் விரும்புவதில்லை.
4. புதிதாக பிள்ளை பெற்ற தாய்மார்கள் தங்களுடைய குழந்தையின் தொட்டிலில் திருஷ்டி படாமல் இருப்பதற்காக சிறிய சிவப்பு ரிப்பனை கட்டுவார்கள். இதை நான் நம்புகிறேன்.
5. எதிர்காலத்தில் ஏதாவது பிரச்சனைகள் வரக்கூடும் என்ற பயத்தில், வங்கியில் பணத்தை சேமித்து வைப்பது, இன்ஷுயூரன்ஸ் பொலிசி எடுத்து வைத்துக் கொள்வது நல்லது என்று நம்புகிறேன்.
6. உப்பை கீழே சிந்திவிட்டால், என்னுடைய இடது தோளின் மீது சிறிதளவு உப்பை தெளித்துக் கொள்ளும் வழக்கம் என்னிடம் உள்ளது. இது, உப்பு சிந்திய பாவத்தை போக்கிவிடும் என்று சொல்வதை நம்புகிறேன்.
7. ஏணி ஒன்று சுவரில் சாய்த்து வைக்கப் பட்டிருந்தால் அதன் கீழே உள்ள இடைவெளியில் புகுந்து போகக் கூடாது என்பதால், அதனை சுற்றிக் கொண்டு செல்வேன்.
8. ஏதாவதொரு மரண சம்பவத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, யாராவது தும்மினால் உடனே பேசினவரின் இடது காதைப் பிடித்து இழுக்கும் வழக்கம் உண்டு.
9. 13ம் எண் அபசகுனமானது என்று நம்புகிறேன்.
10. மற்றவர்கள் என்னைப் பார்த்த மாத்திரத்தில், 'என்ன நீ இப்படி இருக்கிறாய்? உடல்நலக் குறைவா?' என்று கேட்டு விட்டால் எனக்கு நடுக்கம் வந்துவிடும்.
11. 'நீ எனக்கு தோழனாக அல்லது தோழியாக இருக்க விரும்பினால் நீ வீட்டினுள் விசில் அடிக்கக் கூடாது. வீட்டிற்குள் குடையை விரித்து வைக்கக் கூடாது,' என்று சொல்வதை நம்புகிறேன்.



### மதிப்பெண்:

**8-11 ஆம்:** மிகுந்த மூட நம்பிக்கை உடையவர்கள் நீங்கள். தொடர்ந்து மூடநம்பிக்கை உடையவர்களாகவே இருப்பீர்கள்.

**4-7 ஆம்:** அதிக மூடநம்பிக்கை இல்லாதவர் என்றோ குறைவான மூடநம்பிக்கை உடையவர் என்றோ எடுத்துக் கொள்ள முடியாது. உங்களுக்கு தேவையென்றால், சுடுகாட்டிற்கு சென்று, ஆவிகளை துரத்தவும் செய்வீர்கள். ஆனால், அதே சமயம், ஒருவர் தும்மினால் உடனே 'தீர்க்காயுசு' என்று உங்களை அறியாமலேயே வாழ்த்துவீர்கள். மற்றவர்களால், உங்களை புரிந்து கொள்ள முடியாது.

**1-3 ஆம்:** நீங்கள் மூடநம்பிக்கை இல்லாதவர்கள். மற்றவர்கள் உங்கள் காதைப் பிடித்து இழுக்கவோ, தோளின் மீது உப்பை தெளிக்கவோ அனுமதிக்க மாட்டீர்கள். அதெல்லாம் அர்த்தமற்றவை என்று நிராகரித்து விடுவீர்கள்.

## குட்டி, குட்டி அழகுக் குறிப்புக்கள்

★ நீண்ட முகமுடைய பெண்கள் கண் இமைகளை நேராகத்தீட்ட வேண்டும். கண்களுக்கு அப்பால் கோடுகளை இழுக்கக் கூடாது. அப்போதுதான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

★ புருவங்களில் போதிய முடி வளரவில்லையே என்று கவலைப்படும் பெண்கள், தினமும் படுக்கப்போகும் போது, புருவங்களுக்குச் சிறிது வாஸ்லினைத் தடவி வந்தால் பலன் இருக்கும்.

★ அடிக்கடி சிலருக்கு தலை முடியில் சிக்கு விழுந்துவிடும். இப்படிப்பட்ட பெண்கள் நல்லெண்ணையைச் சூடாக்கி, தலையில் தேய்த்து நன்றாக ஊறவிட்டு, பின் சாதம் வடித்த கஞ்சியை ஊற்றித் தேய்த்து, கடைசியாக சீயாக்காய் வைத்து முழுகினால் முடியில் சிக்கு விழாது.



★ முகம் அழகாய், வெளுப்பாய் மாற, பசும்பாலைக் கொண்டு அடிக்கடி முகத்தைக் கழுவி வந்தால் கவர்ச்சியாகப் பிரகாசிக்கும்.

★ பேன் தொல்லையால் அடிக்கடி தலையைச் சொறிந்து கொள்கிறீர்களா? துளசியை ஊற வைத்த நீரில் தலையைக் கழுவி வந்தால் பேன் தொல்லை ஒழியும்.

★ தூக்கத்திற்கும் அழகிற்கும் நிறைய சம்பந்தம் உண்டு. அதனால் நன்றாகத் தூங்க வேண்டும். தோடம்பழச்சாற்றுடன் தேன் கலந்து பருகினால் நல்ல உறக்கம் வரும்.

## அழகுக்கு மெருகு



★ பெண்களின் உடல் நிறம் பளிச்சென்றிருக்க தினமும் தக்காளிப்பழம் சாப்பிட வேண்டும். இது சரும சுருக்கத்தைத் தடுக்கும்.

★ அன்றாடம் குளிக்கும் போது, சோறு வடித்த கஞ்சியில் சுத்தமான அரப்புத்தூளைப் போட்டு உடம்புக்குக் குளித்து வந்தால் சருமம் பட்டுப்போல் மென்மையாக இருக்கும்.

★ நாட்டு மருந்துக் கடைகளில் கஸ்தூரி மஞ்சள், நலாங்கிழங்கு, பச்சைப் பயறு சம அளவாக வாங்கி, அரைத்துத் தூளாக்க வேண்டும். இதை உடலில் தேய்த்துக் குளித்து வந்தால் சருமம் பளபளக்கும்.

★ கரட்சாறு, பாலாடை, எலுமிச்சம் பழச்சாறு இவைகளை ஒன்றாகக் கலந்து, முகத்தில் தேய்த்து 15 நிமிடம் கழித்து வெந்நீரில் முகம் கழுவினால் நாளடைவில் நீங்கள் தான் அழகி.

## காதல் உலகில் கண்ணீர் துளிகள்



*மனிதன் வாழ்க்கையில் இன்பத்தையும் சம்பாதிக்கிறான், துன்பத்தையும் சம்பாதிக்கிறான்.*

*இன்பம் பணத்தைப் போன்றது. சம்பாதிக்கும் பணம் போய் விடுவதைப் போலவே இன்பமும் போய்விடுகிறது.*

*துன்பம் அனுபவம் போன்றது. அது மனிதனிடமே தங்கி விடுகிறது.*

*இன்பம் விருந்தாளியைப் போன்றது. சில நாள் இருக்கும்– போய்விடும்.*

*துன்பம் உறவினர்களைப் போன்றது. அது எளிதில் பிரிவதில்லை.*

*துன்பத்தை அனுபவிக்கிறவன், அது நீங்காதா என்று நினைப்பான். அதை நீக்குவதற்கு யாராவது வரமாட்டார்களா என்று ஏங்குவான்.*

*ஆனால், காதல் உலகில மட்டும் துன்பம் கூட விரும்பக்கூடியதாகி விடுகிறது.*

*ஏனென்றால் காதல் உலகம் வினோத உலகம். பைத்தியக்கார உலகம்.*

*கண்ணீரை யார் தான் விரும்புவார்கள்?*

*ஆனால் காதல் உலகில் கண்ணீர்த் துளிகள் நட்சத்திரங்களாகி விடும்.*

*காயங்களை யார் தான் வரவேற்பார்கள்?*

*ஆனால் காதல் உலகில காயங்கள் பூக்களாகி விடுகின்றன.*

*துன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று யார் தான் ஆசைப்படுவார்கள்?*

*ஆனால் காதல் உலகில் துன்பம்கூட சுகமாகி விடுகிறது.*

*காதலுக்காகத் துன்பப்படுகிறோம் என்று நினைக்கும்போது, அதில் ஓர் ஆனந்தம் பிறக்கிறது. பெருமை உணர்வு பிறக்கிறது.*

*காதலுக்காக, காதலால ஏற்படும் துன்பத்தை நாம் சகித்துக் கொள்ளும் போது, அதுவே நம் காதலுக்கு நிரூபணமாகிறது.*

*சோகமே காதலை அலங்கரிக்கிறது.*

*எனவே இந்தச் சோகத்தைக் காதல் உள்ளம் இழக்க விரும்புவதில்லை. தன்னிடம் வைத்துக் கொள்ளவே விரும்புகிறது.*

*இது ஒரு கவிதை–எழுதிய கவிதை– இந்தித் திரைப்பட வானில் பிரகாசமாக ஜொலித்து மறைந்த அபூர்வமான தாரகை மீனாகுமாரி எழுதிய கவிதை.*

*"என சோகத்தை*
*யாரும் நீக்க முயலாதீர்கள்!*
*இது என்னிடமே இருக்கட்டும்;*
*ஏனென்றால் இது என்னுடையது."*

**அப்துல் ரகுமான்**

## ஆணென்ன பெண்ணென்ன....?

**ஆ**ணும், பெண்ணும் சமமெனும் கொள்கை வலிவு பெற்றுக்கொண்டிருந்தாலும், இவ்விருவருக்குமிடையே சில அடிப்படை வேறுபாடுகள் இருந்து வருவது என்னமோ உண்மைதான். ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குத்தான் மன வலிமையும், பொறுமையும் அதிகமாக உள்ளன. ஆனால் உடலளவில் இருவருக்கும் இடையே எவ்வளவு வேறுபாடுகள்?

ஆண்களுக்கு 25 வயது முதற் கொண்டே வழுக்கை ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. பெண்களுக்கு சாதாரணமாக 70வது வயதுவரை வழுக்கைக்கான அறிகுறிகள் தென்படுவதில்லை.

சராசரியான பெண்ணைக் காட்டிலும், ஆண்கள் 30 சதவிகிதம் அதிகபலம் பெற்றுள்ளனர். ஆண்களை ஒப்பிடும் பொழுது பெண்களுக்கு உடல் வலிமை சிறிது குறைவாக உள்ளது.

ஆணின் எடையில் 15 முதல் 18 சதவிகிதம் கொழுப்பு அடங்கியுள்ளது. பெண்ணின் எடையில் 25 முதல் 28 சதவிகித அளவு கொழுப்பு காணப்படுகிறது.



ஆண்களுக்கு ஒரு நிமிடத்தில் 72 தடவைகள் இதயம் துடிக்கிறது. பெண்களுக்கு ஒரு நிமிடத்திற்கு 78 தடவைகள் இதயம் துடிக்கிறது.

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது – சுகந்தினி)

### வெஜிடபிள் சாலட்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கரட் | – 2 |
| வெங்காயம் | – 1 |
| வெள்ளரிப்பிஞ்சு | – 3 |
| எலுமிச்சம்பழச்சாறு | – 3 தேக்கரண்டி |
| தக்காளி | – 2 |
| உப்பு | – அளவாக |
| கொத்தமல்லி இலை | – சிறிதளவு |

**செய்முறை:**

கரட், வெங்காயம், தக்காளி, வெள்ளரிப்பிஞ்சு ஆகியவற்றைப் பொடியாக வெட்டிக் கொள்ளுங்கள். இதில் உப்பு, எலுமிச்சம்பழச்சாறு, கொத்தமல்லி இலை போன்றவற்றைக் கலந்து விடுங்கள். அவ்வளவுதான் சாலட் ரெடி. இப்போது சாப்பிட்டுப் பாருங்கள் இன்னும் சாப்பிட வேண்டும் என்று தோன்றும்.

## கிரிக்கெட் துணுக்ஸ்

★ மௌறிஸ் ரேற் என்ற இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர் ஒரு போதும் 'நோ போல்' போட்டதேயில்லை

★ பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த முஸ்டாக் மொஹமட் தான் 'டெஸ்ட்' கிரிக்கட்டில் செஞ்சரி எடுத்தவர்களில் வயதில் குறைந்தவர். சச்சின் டெண்டுல்கர் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

★ கவாஸ்கர் 'லிட்டில் மாஸ்டர்' என்று அழைக்கப்படுகிறார். ஆனால் ஜாக் ஹொப்ஸ் 'த மாஸ்டர்' என்று அழைக்கப்படுகிறார்.

★ டென்னிஸ் லில்லீ என்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் அலுமினியத்தாலான பேட்டை பயன்படுத்தி வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பினார்.

★ நியூஸிலாந்துவீரர் கிளென் ரேர்னர், 17 நாட்டு அணிகளுடன் விளையாடியிருக்கிறார். இந்த ஆட்டங்களிலெல்லாம் செஞ்சரி அடித்த முதலாவது ஆட்டக்காரர் இவரே!

★ முஸ்டாக் மொஹமட், கிரிக்கெட்டில் பேட்டிங்கில் 'றிவேர்ஸ் ஸ்வீப்'பை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர்.

★ டெரெக் அண்டர்வூட் இடது கை பந்து வீச்சாளர்களில் அதிகமான விக்கெட்டுகளைக் கைப்பற்றியவராவார்.

★ டெஸ்ட் ஆட்டங்களில் முதன் முதலில் தலைக்கவசம் அணிந்து ஆடிய வீரர் கிரஹாம் யல்லப்.

★ பாகிஸ்தான் வீரர் ஸபீர் அப்பாஸ் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் 100 தடவை செஞ்சரி போட்ட ஒரே யொரு ஆட்டக்காரர். இத்தகைய சாதனையினை ஈட்டிய முதலாவது ஆசியநாட்டவரும் இவரே!

★ கத்பேட் கோர்டன் லாவின் என்பது அவருடைய இயற்பெயர். ஆனால் அவன் கோபன் கிரீனிச் என்ற பெயரில் தான் புகழடைந்தார் அவர் மேற்கிந்திய கிரிக்கெட் அணி வீரர்.

## சமையல் அறைச் சமாச்சாரம்

★ தக்காளிப்பழம் அழுகிவிடாமல் இருக்க வேண்டுமானால் உப்புக் கரைக்கப்பட்ட நீரில் போட்டு வைக்க வேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் ஐந்து நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.

★ புதிய உருளைக்கிழங்கு, கரட் முதலியவற்றை முதலில் குளிர்ந்த நீரில் சிறிது நேரம் ஊற வைத்திருந்து பிறகு தோலைச் சுரண்டுங்கள். சுலபமாக தோல் உரியும்.

★ தோல் சீவிய காய்கறிகளை நீரில் அதிக நேரம் வைத்திருக்கக் கூடாது. ஏனெனில் அவற்றில் உள்ள விட்டமின்கள், தாதுப் பொருட்கள் போன்றவை நீரில் இழக்கப்பட்டு விடும்.

★ வாழைக்காயை சமையலுக்குப் பயன்படுத்தும்போது தோலை நீக்கக் கூடாது. வாழைக்காயை நன்கு கழுவிச் சுத்தம் செய்தாலே போதும். வாழைக்காயில் உள்ள வாய்வுக்கு அதன் தோலே மருந்து.

## அசாருதீன்–கவாஸ்கர் சூடான மோதல்

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் கவாஸ்கருக்கும், அசாருதீனுக்கும் இருந்த நெருக்கத்தில் இப்போது விரிசல் வந்திருக்கிறது.

முன்பு அசாரூதீனை எப்படியெல்லாம் கவாஸ்கர் புகழ்ந்தாரோ, அதேயளவு வசையையும் இப்போது திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

"அசாரூதீன் இந்திய கிரிக்கெட் அணி கப்டனாக இருந்தது போதும். இனி டெண்டுல்கர் கப்டனாகலாம்" என்பது தான் கவாஸ்கரின் வாதம்.

"அடுத்த ஓராண்டுக்கு அசாருதீன் கப்டன்" என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சமீபத்தில் அறிவித்தபோது ஆடிப்போனார் கவாஸ்கர். அது மட்டுமல்ல 96ம் ஆண்டுக்குப் பின்னரும் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு அசாருதீன் கப்டனாக இருக்கலாம் என்ற கருத்தும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இருப்பதாக அறிந்தார் கவாஸ்கர். அவ்வளவுதான், அசாருதீனை ஒரு கை பார்த்துவிட கையில் பேனா வுடன் கிளம்பி விட்டார் கவாஸ்கர்.

பல பத்திரிகைகளில் அசாருதீன் மீது விமர்சன அம்புகளைத் தொடுத்தார் கவாஸ்கர். வெறுத்துப் போன அசாருதீனும் திருப்பி யடித்திருக்கிறார்.



"விளையாட்டுப் போட்டியை விமர்சனம் செய்வதை விடுத்து, தனது சொந்த விருப்பு– வெறுப்புக்களை விமர்சனமாக எழுதுகிறார். தனக்கு அதிகாரமில்லாத காரியங்களில் அவர் தலையிடாமல் இருப்பதே நல்லது. விமர்சனம் செய்வதற்கு அவருக்குள்ள உரிமையை சில பத்திரிகைகளில் பலன் பெறும் நோக்கத்திற்காக அடகுவைக்கக் கூடாது." என்று தனது பதிலடியில் எழுதியிருந்தார் அசாருதீன்.

டெண்டுல்கர் மீது தனக்குள்ள பிடிப்பை, அசாருதீன் மீதான வெறுப்பாகக் காட்டுகிறார் கவாஸ்கர் என்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

"இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செல்லப் பிள்ளையாக இருக்கிறார் அசாருதீன். அதனால்தான் அசாருதீன் தவறு செய்தாலும் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை கவலையே படுவதில்லை.

நியூஸிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் நல்ல நிலையில் இருந்த நவஜோத்சிங் சித்துவை தூக்கிவிட்டு வினோத் காம்ளிக்கு இடம் கொடுத்தார் அசாருதீன்." என்றெல்லாம் குற்றச் சாட்டுக்களை அடுக்குகிறார் கவாஸ்கர்.

அசாருதீனின் 50 லட்சம் ரூபா சொகுசுக் கார், ஆடம்பர உடைகள், இந்தி நடிகை சங்கீதா பிஜ்லானியுடன் உள்ள தொடர்பு என்று பல குற்றச் சாட்டுக்கள் பாய்ந்தாலும் அசாருதீனின் கப்டன் பதவிக்கு தற்போதைக்கு ஆபத்தில்லை என்பது மட்டும் உறுதி.

இன்னொரு விஷயம், கவாஸ்கர்தான் டெண்டுல்கருக்காக அசாருதீன் மீது பாய்கிறாரே தவிர, டெண்டுல்கர் அசாருதீன் மீது நட்புப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 17

தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# அஞ்சலி...!

நீ –
திருடிவிட்டு
திட்டிவிட்டுப்போனாய்–
கவலையில்லை!

வானம்
இடித்தாலும்
மேகம் கரைந்தாலும்
பூமிக்கே மழை!

கனவுகள் எரித்து
சாம்பர் அள்ளி
விபூதி பூசி இருக்கலாம்!

ஜீவன்களை
தீர்த்து விட்டு
உணர்வுகள் இறந்த–
பின்பு;
மாலையும் மேளமும்
சமாதிக்கு....?

நாஸ்திகம்
படைத்து பெருமைதேட
நான்
'ஓஷோ' அல்ல!

ஆத்திகம் தேடி
துறந்துவிட
"புத்தனும்" அல்ல!

விக்கித்தாலும்
விண்ணப்பித்தாலும்
நான் இந்த–
ஞானமடத்து ஞானிதான்.!

காற்று ஓய்வு எடுத்து
கனவுகள் வேர்த்து
கற்பனை தீர்ந்து–
இறந்த உயிர்களுக்கு
இந்த–
ஞானமடம் அஞ்சலி
மௌனம் படைக்கும்!

அக்கரைப்பற்று
யெம்.யே. தஸ்ரீப்

# என் நந்தவன இளவரசி

என்
போர்க்களமான
இரவுகளுக்கு
பூக்கள் நிறைந்த
நந்தவன விடியலை
தந்தவளே!

உனக்கு
நன்றி சொல்ல
இந்த
பிரபஞ்சத்தில்
எந்த மொழியிலும்
வார்த்தைகளே
கிடைக்கவில்லை!

உன்
மெலலிதழ்
வரையும்
சித்திரங்களுக்காக
என் முகத்திரைகள்
காத்திருக்கின்றன.

உன்னை
நினைத்துக் கொண்டே
இருப்பதற்காக,
இப்போதெல்லாம்
என்
விழிகள்
உறங்குவதே கிடையாது.

ஹெந்தளை நவா.

# உனக்குத் தெரியுமா?

தோழா,
இந்த
மண்மீது
சிந்திக்
கொண்டிருக்கின்ற
செங்குருதிகளை
ஆவியாக்கிக்
கொண்டு
அந்த
வானம்
நாளை
சிவந்து
கிடக்கப்போகிறது.

வானம்
பொழியும்
அந்த
மழைத்துளிகளில்
எல்லாம்
இரத்தம்
கலந்திருக்கப்
போகிறது!

நானும் நீயும்
நம்மவர்களும்
நம்
கிணற்றிலிருந்து
குருதி
நீர்
குடிக்கப்
போகின்றோம்!

அந்த
நிலவில்கூட
சொட்டுச்
சொட்டாய்
நாளை
இரத்தம்
கசியப்போகிறது!

நதிகளும்
கடல்களும்
நாற்றமடிக்கப்
போகின்றன.

பசுந்தரைகளில்
எல்லாம்
மண்டை ஓடுகளும்
எலும்புக் கூடுகளுமே
முளை விடப்
போகின்றன.

சதைப்
பிண்டங்களும்
ஓடமுடியாமல்
உறைந்துபோன
குருதி
துண்டங்களுமே
நம் நாட்டிற்கு
அழகு சேர்க்க
போகின்றன.

என்ன
சிந்திக்கிறாய்?
வா
அதற்கு முன்னால்
மரணித்துப்போவோம்!

செல்வி. சுப்ரமணியம் வாணீஸ்வரி
அப்பர்-கலஹா

# சிரிப்பரங்கம்

ஒரு விளம்பர வாசகம் இது:
இந்த ஆடை சுருங்கவே சுருங்காது; நீரில் நனையாமல் இருந்தால்!

"நீ குற்றவாளியா அல்லவா?" இது நீதிபதியின் கேள்வி.
"அதைச் சொல்லத்தானே உங்களை நியமித்திருக்கிறார்கள்." இது கூட்டில் நின்றவர் கூறியது.

"ஒரு ஓவியன் முன்பாக பெண்கள் போஸ் கொடுக்கும் நிலை ஏற்பட்டால் அந்த ஓவியன் முதலில் என்ன செய்வான்?"
"வாசற்படியை மறைக்கும் திரையை தொங்கவிடுவான்."

"அரசியல்வாதிகளுக்கு பிடித்த மான கடிகாரம் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது."
"அப்படியா, அது எப்படி இருக்கும்?"
"அது மணி அடிப்பது கைதட்டல் போல ஒலிக்கும்."

**நிருபர்:-** நீங்கள் எப்பொழுது பிறந்தீர்கள் என்பது ஞாபகம் இருக்கிறதா?"
**நடிகை:-** நான் அப்போது மிகவும் சிறியவளாய் இருந்தமையால் நினைவில்லை.

ஒரு மாணவன் தன் தோழனிடம் கூறியது; "நீ வரும்போது நான் படித்துக் கொண்டிருந்தால் என்னை எழுப்பி விடவும்."

"பஸ்சில் இடம் கிடைக்க வேண்டுமானால் எப்படி இருக்க வேண்டும்?"
"ஒட்டுநராக!"



"கடற்கரையில் கடுமையான வெய்யிலாமே?"
"ஆமாம்! ஒருவர் நிழலில் மற்றவர் அமர்ந்திருந்தோம்- 'மாறி மாறி!'"

**அம்மா:-** தம்பி ஏன் அழுகிறான்?
**மகன்:-** மாடியிலிருந்து நடந்து வராமல் கீழே வந்துவிட்டான்.?

"மறக்காமல் இருக்க ஒரு வழி சொல்லுங்களேன்?"
"எதையும் நினைவில் வைத்துக் கொள்ளாதீர்கள்."

அழகு நிலையத்திற்கு சென்ற ஒரு மாது கேட்டாள், "நரைக்கு என்ன வைத்திருக்கிறீர்கள்?" என்று. நிலைய அதிபர் சொன்னது இது; "மிகுந்த மரியாதை!"

"அவன் உலகத்தை சுற்றிப்பார்க்க கப்பலில் வேலைக்குச் சேர்ந்தான். ஆனாலும் பார்க்கமுடியவில்லை"
"ஏன்?"
"வேலை கிடைத்தது நீர்மூழ்கிக் கப்பலில்!"

**ஆசிரியர்:-** பசு பால் தரும்.
**மாணவன்:-** அது தப்பு
**ஆசிரியர்:-** ஏனப்பா..?
**மாணவன்:-** அது தராது, நாம்தான் கறக்கவேண்டும்.

# தேன் கிண்ணம்



"உன்னுடன் பழகி ஒரு வருடமான பின்னரும், முத்தமிட அனுமதி கேட்டார் என்கிறாயே, அவர் நல்ல மனிதர் தான்."
"ஆமாம்! அதற்கு முன்னர் எல்லாம் அவர் அனுமதி கேட்பதேயில்லை."

**அவன் :-** இன்று என்னுடைய குடையை மறந்து வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன்.
**நண்பன்:-** குடையை மறந்தது எப்படி ஞாபகத்திற்கு வந்தது?
**அவன்:-** காலையில் மழை நின்றவுடன் குடையை மடக்குவதற்காக கையை உயர்த்தினேன். அப்பொழுது தான் குடை இல்லாதது தெரிந்தது.

# நிஜம்

மனிதர்களோடு குறைத்து
மலரோடும், நிலவோடும்
அதிகம் பேசினான்.
★★★
கண்கள் சாட்சியாக
உண்மையாக காதலித்தான்.
ஆனாலும்......
அவனது காதல்
நிராகரிக்கப்பட்டது.
★★★
கண்டவர்கள் சொன்னார்கள்;
காதலித்த இடம் பிழையாம்!
★★★
காதலுக்கு கண்ணில்லை
என்பது பொய்யோ?
இல்லையில்லை–
காதலிக்கு கண் இருக்கிறது
என்பது மெய்!!

வசந்த காலத்தின்
ஒரு பொழுதில்
அவனது வாலிபமும்
காதலை
அழைத்து வந்தது.
★★★
அவள்
சிரிக்கும் போது
சிரித்தான்;
சிணுங்கினால் அழுதான்.
★★★
ஆரவாரமில்லாத
அமைதியைத் தேடினான்.
★★★

அ.டக்ளஸ் ஜெயசேகரன்,
வவுனியா.

# கண் பேசுவாள்!

கன்னித் தமிழானாள்!
கலையாத எழிலுடையாள்!
என்னிதயக் கோவிலிலே
எப்போதும் வாழுபவள்!

கூடல்தனில் வளர்ந்தாள்!
குமரிக்கடல் குளித்தாள்!
தேடரிய இலக்கியங்கள்,
தெய்வீக நகைபுனைந்தாள்!

பாவலர்க்குப் பாவடிக்கப்
பண்கொடுக்கும் ஈகைமகள்!
காவலர்கள் மேலென்றும்
கலையாத பற்றுடையாள்!

நாவலர்கள் பாராட்டும்
நல்வியல்பின் அன்னையிவள்!
ஆவல் மிகக் கொண்டென்னை
அரவணைக்கும் காதல் மகள்!

ஏற்றங்கள் வழங்குவதில்
எந்நாளும் முன்னிற்பாள்!
சீற்றங்கள் கொள்பவரின்
சிரம் கொய்யும் அணங்குப் பெண்!

தூற்றுகின்ற பேர்களினைத்
துண்டிக்கும் வெகுளிப் பெண்!
மாற்றமிலா மனத்தோர்க்கு
மணிவிழிகள் போலாவாள்!

அ.கௌரிதாசன்.

# நிம்மதி

புழுதியாய்–
பூகம்பம் தாக்கி
பொடித்துப் போன
பூமியாய்
நொருங்கி சுருங்கிப்
போன
நிம்மதி...

தாக்கப்பட்டவன்
தாக்கியவன் பேதமின்றி
அனைவருமே–
நிர்தாட்சண்யமாய்
நிர்க்கதியாக்கப்பட்ட
பின்பு...

வானமும்
நிறம் மாறி
சிவப்பாக நிலைத்து.....
புறாக்கள் மட்டுமல்ல
பருந்துகளும்
வேட்டையாடப்பட்டு....

கபாலங்களும்
எலும்புகளும்
காலுக்கும் கைக்குமாக
அடிபடவாரம்பித்து...

என்ன இது–
பூலோகமே தானா...
சலனமற்ற ஒரு
சந்தேகம்
இதயம் நெருட...

குரல் கம்மி..கரகரத்து...
உள்ளம் வேகமாய் விம்மி...
வெடித்து விடுமாற்போல்
மீளவும் பம்மி...
மண்டைக்குள் ஏதோ
வண்டாய் பிரமித்து...
வெட்டு வெட்டென்று
உடல் துடித்து...
பின் அமைதியாய்
அடங்கி...

நிச்சலனம்!
இது
நிச்சயமாய்
நிம்மதி!!

மாத்தளை எஸ். எம். -ரியாஸ்.

# ஐக்கியம்

ஒன்றையொன்று
வெவ்வேறு
ஒழுக்குகளில் சுத்தும்
சூரியன்,
சந்திரன்,
பூமி கூட
ஒரு நாள்
நேர்கோட்டில்
வந்து செல்லும்.

இலங்கைவாழ்
மூவின சகோதரர்களே,
உங்களுக்கு
எப்போது
கிரகணம்.

கவியூரன். அக்கரைப்பற்று.

# இந்த வாரம் உங்கள் பலன்

(17.12.95 முதல் 23.12.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | -சூரியன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி. |
| கும்பம் | -சனி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | - இராகு. |

★ சந்திரன்–துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நஷ்டம், மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி - | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் பேறு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி வெற்றி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், உத்தியோக முயற்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பணக் கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், மனப் பயம். | காலை 6 மணி |
| வெள்ளி- | துயரினால் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | இனசன விரோதம், மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | வீண் குறை கேட்டல், பணக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | இனசன நன்மை, மனக் குறை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், வரவு குறைவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் கவலை, தொழில் கஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன் - | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள் , அதிஷ்ட இலக்கம்-4

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | எதிர்பார்த்த நன்மை, துயர் நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | தூரஇடப் பயணம், அலைச்சல். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | இனசன நன்மை, காரிய சித்தி. | காலை 7 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், இனசன நன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், பயனற்ற செயல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், வீண் பிரயாணம். | காலை 7 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | மனக் குறை நீங்கும், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | இனசன நன்மை, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | துயரம் நீங்கும், மன மகிழச்சி. | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | இனசன விரோதம், மறைமுக எதிர்ப்பு. | காலை 8 மணி |
| புதன்- | பலவித பேறு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் உதவி, சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4






## நட்சத்திரம்

சின்ன சின்ன முத்துக்களால்
சிதறிக் கிடக்கும் நட்சத்திரம்
வண்ண வண்ண நிறம் காட்டி
வானில் மின்னும் நட்சத்திரம்.

நீல வானக் கடலிலே
நீந்திக் களிக்கும் நட்சத்திரம்
கோல மயில் போலவே
அழகு கொண்ட நட்சத்திரம்.

அந்தி வானக் கருக்கலில்
அழகாய் மின்னும் நட்சத்திரம்
முந்தி வந்த வானிலே தன்
முகம் காட்டும் நட்சத்திரம்

வட்ட நிலா மங்கையை தினம்
வட்டமிடும் நட்சத்திரம்
கொட்டிக் கிடக்கும் வைரமாய்...
கொஞ்சும் அழகு நட்சத்திரம்.

ஆ.ஆத்மநாதன்.

மண்ணெடுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய் கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# விவேகானந்தரின் விஜயம்

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் வடமாநிலம் ஒன்றிற்கு விஜயம் செய்தார்.

அவரைப் பற்றி அரைகுறையாகத் தெரிந்து வைத்திருந்த ஒரு செல்வந்தன், அவரை அவமானப்படுத்த எண்ணினான்.

அவன் விவேகானந்தரைச் சந்தித்து, தனது வீட்டிற்கு உணவு அருந்த வருமாறு வேண்டி அழைப்பு விடுத்தான்.

அவரும் அவனது அழைப்பை ஏற்று, அவனுடன் அவனது இல்லத்திற்குச் சென்றார்.

அங்கு சென்றதும், அவனது நடவடிக்கைகள் மாறுவதை விவேகானந்தர் உணர்ந்தார். வெளியே கொடுத்த மரியாதையை அவன், வீட்டிற்குள் சிறிது கூட அவருக்குக் கொடுக்கவில்லை. அவரை அமரச் சொல்லவில்லை; உணவிற்கு ஏற்பாடு செய்யவில்லை.

"என்ன விவேகானந்தரே! நீர்தான் மாகானாயிற்றே! நான் உம்மை எத்தனை அவமானப்படுத்தினாலும் அது உம்மைப் பாதிக்காது அல்லவா? நான் உமக்கு உணவளிக்காவிட்டால் கடவுள் உமக்கு வானுலகில் இருந்து உணவை அளிப்பாராமே? அதையும் தான் பார்போம். இன்று உம்மைப் பட்டினி போடுகிறேன். கடவுளிடமிருந்து, அவரது அதீத பக்தராகிய உமக்கு உணவு வருகிறதா என்று பார்ப்போம்," என்று கேலி, பேசிச் சிரித்தான்.

அதைக் கேட்ட விவேகானந்தர், புன் சிரிப்புடன்.....,

"அன்பரே! என்னைப்பற்றி நீர் அளவுக்கு அதிகமாகக் கற்பனைசெய்து கொண்டிருக்கிறீர். நீர் நினைப்பது போல் நான் மகானுமல்ல, கடவுளுக்கு மிக நெருக்கமானவனும் அல்ல. கடவுள் மேல் பக்தி கொண்ட ஒரு சாதாரண மனிதன்தான். ஒரு மனிதனுக்கு உணவு அளிப்பதும், அளிக்காததும் கடவுளின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். இன்று கடவுள் என்னைப் பட்டினி போட விரும்பினால், அவ்விதமே செய்வார். எனக்கு அவர் உணவு கொடுக்க விரும்பினாலும், அதை யாராலும் தடுக்காதபடி கொடுத்தே விடுவார்," என்று அமைதியுடன் சொன்னார்.

அப்போது மூடப்பட்டிருந்த அந்தச் செல்வந்தரின் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். செல்வந்தன் சென்று கதவைத் திறந்தான்.

ஏழ்மையான தோற்றத்தில் இருந்த ஒரு மனிதன் கையில் உணவுப் பொருட்களுடன் நின்று கொண்டிருந்தான்.

"யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? " என்று அவனைப் பார்த்துக்கேட்டான் செல்வந்தன்.

"ஐயா! நான் ஓர் ஏழை விவசாயி. கடவுள் பக்தன். இங்கே ஓர் இறைவனின் அடியார் தங்கியிருப்பதாய் அறிந்து அவரது ஆசி பெற்றுச் செல்லவே வந்தேன்!" என்று சொல்லிவிட்டு, விவேகானந்தரின் அங்க அடையாளங்களை வர்ணித்தான்.

"ஆமாம்! அவர் இங்குதான் தங்கியிருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் செல்வந்தன்.

"ஐயா! நேற்றிரவு நான் கண்ட கனவில் திருவுருவம் தோன்றி உங்கள் வீட்டு அடையாளங்களைச் சொல்லி, இங்கு ஓர்



அடியார் தங்கியிருப்பதாகவும், அவருக்கு உணவு சமைத்துக்கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் என்று எனக்கு உத்தர விட்டார். அந்த அடியாரின் தோற்றத்தையும் கடவுள் என் முன்னே காட்டினார். அவர் கட்டளைப்படியே அடியாருக்கு உணவு சமைத்து எடுத்து வந்திருக்கிறேன். அவருக்கு இதைக் கொடுத்து விட்டு அவரது ஆசியைப் பெற்றுச் செல்லவே வந்தேன்," என்றான் அந்த விவசாயி.

இதுவரை அவர்களது உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த விவேகானந்தர் அங்கே வந்தார்.


அவரைக் கண்ட விவசாயி, "ஆஹா! கடவுள் எனக்குக் காண்பித்த அடியார் இவர்தான்!" என்று கூறிவிட்டுத் தன் கையில் இருந்த உணவுப் பொருட்களைக் காலடியில் வைத்து விட்டு, அப்படியே தரையில் வீழ்ந்து வணங்கினான்.

இந்தக் காட்சியைக் கண்ட செல்வந்தன் அப்படியே நடுநடுங்கி விட்டான். விவேகானந்தர் உண்மையிலேயே மனித உருவில் உள்ள தெய்வம் தான் என்பதைக் கண்ணுக்கு மெய்யாகக் கண்டு வியப்பும், திகைப்பும் அடைந்து, அப்படியே அவர் கால்களில் வீழ்ந்தான்.

"தெய்வாம்சம் பொருந்திய தங்களை அவமரியாதையும், அவமானமும் செய்து விட்டேன். அடியேனை மன்னித் தருளுங்கள்!" என்று அவரது காலைப் பிடித்துக் கொண்டு அழுதான் செல்வந்தன்.

"ஐயா! எழுந்திருங்கள் தங்களின் அவமதிப்பு என்னை ஒன்றும் செய்து விடவில்லை. நான் அதை அவமதிப்பாகவும் நினைக்கவில்லை. நான் ஒரு சாதாரண மனிதன்தான். எனக்கு இவ்வளவு மரியாதை தேவையில்லை. கடவுள் எப்பொழுதும் உங்கள் பக்கம் இருப்பார்!" என்று சாந்தமே உருவாகப் பதிலளித்தார் விவேகானந்தர். அவரது பதில் அந்த ஆணவம் பிடித்து செல்வந்தனை மனிதனாக்கியது. ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.12.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 121
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 118

பரிசுக்குரியவர்:
இஸ்ஸதுல் பர்மிலா
அல் மதீனா வித்தியாலயம், அநுராதபுரம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| க. யோகேஸ்வரன்<br>பது/அப்புத்தளை த.ம.வி. அப்புத்தளை. | சோ. நரேஷ்குமார்<br>உதயபுரம் த.வித். பெரியகல்லாறு-03. |
| என். கஜனன்<br>இராமநாதன் தொடர்மாடி, கொழும்பு-13. | இமானுவேல் குலசிங்கம்<br>திகன ரஜவெல்ல, கண்டி. |
| டி. துஷ்யந்தன்<br>கொழும்பு-15. | ஜெ. கஜபவனி<br>வ/இறம்பைக் குளம் ம.கல்லூரி, வவுனியா. |
| அகல்யா<br>புனித. மரியாள் கல்லூரி, அவிசாவளை. | எம்.எச். ஹபியா<br>புதியகுடியிருப்பு வீதி, புத்தளம். |
| புனிதசாந்தனி<br>கிரான்லி தமிழ் பாடசாலை, அக்கரப்பத்தனை. | எஸ். முரளிதாஸ்<br>இராமகிருஷ்ண மிஷன் வித்/ அக்கரைப்பற்று-07 |

## பாபிலோனின் தொங்குதோட்டம்.

★உலக அதிசயங்களில் ஒன்றான பாபிலோனின் தொங்கு தோட்டம் யாரால் கட்டப்பட்டது?

இரண்டாம் நெபுகாத்நேசர் என்ற பாபிலோன் மன்னனால் கட்டப்பட்டது.

**★ இது எதற்காகக் கட்டப்பட்டது?**

நெபுகாத் நேசரின் மனைவி அமீபா பாரசீகத்தைச் சேர்ந்தவர். அமீபாவுக்கு பாபிலோன் நாட்டைப் பிடிக்கவில்லை. அதனால் அமீபாவைச் சந்தோஷப்படுத்துவதற்காக மன்னன் இதைக் கட்டினான்.

**★ இதன் தோற்றம் எப்படியானது?**

ஒரு பெரிய அரண்மனையின் மாடிப் பகுதியில் 400 அடி சதுரப் பரப்பில் இந்தத் தோட்டம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு மாடியின் மேற்பரப்பிலும் தோட்டங்கள் ஆர்ச் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

**★ இங்கு என்னென்ன மரங்கள் வைக்கப்பட்டன?**

ஒக், பனை, பைன், வில்வமரம், அசோகமரம், தோடம்பழமரம், மாதுளம்பழம் மரம் என பல்வேறு வகையான மரங்கள் வைக்கப்பட்டன.

**★ இந்தத் தோட்டத்திற்குத் தண்ணீர் எப்படிப் பாய்ச்சப்படுகிறன?**

யூப்பிரட்டீஸ் நதியிலிருந்து செடிகள், தாவரங்களுக்குத் தண்ணீர் ஏற்றுவதற்கு வசதியாக பெரிய பெரிய தண்ணீர்த் தொட்டிகள் கட்டி அதிலிருந்து தண்ணீர் வெளியேறவும் மன்னன் நெபுகாத் நேசர் வழி செய்திருந்தான்.

## அபூர்வ சம்பவங்கள்

மதத்துறை வளர்ச்சிக்காகச் சிறப்பாகப் பணியாற்றுபவர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசு டெம்பிள்டன் விருது. அதன் மதிப்பு ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் டொலர். இந்திய முன்னாள் ஜனாதிபதி அமரர் டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார்.

* * *



டாக்டர்.ராதா கிருஷ்ணன்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த தம்பதிகள் பிரிந்து வாழ்ந்தார்கள் என்ற சரித்திரமே இல்லை. 'அத்தனை ஒற்றுமையா?' என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. அங்கு விவாகரத்திற்கு அனுமதி இல்லை. கணவனும், மனைவியும் எலியும், பூனையுமாக இருந்தால் கூட, கடைசி வரை ஒன்றாக வாழ்ந்து தான் தீர வேண்டும்.

* * *

இங்கிலாந்து நாட்டு ராணி எலிசபெத்தின் கணவரான பிலிப்ஸ்இன் பாஸ்போர்ட் எண்-1 ஆகும். நாட்டின் முதல் பிரஜை என்ற அந்தஸ்தும், கௌரவமும் இருப்பதால் இந்த எண் கொடுக்கப்பட்டுள்ளது.

## வாரம் ஒருநாடு

### ஜமெய்க்கா

**தலைநகர்**- ரோம்
**பரப்பளவு**- 3,01,253 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை**- 5.78 கோடி




**மக்கள் தொகை**- 25,13,000
**மொழி**-ஆங்கிலம், ஜமெய்க்கா கிரியோல்
**எழுத்தறிவு**- 98%
**சமயம்**- கிறிஸ்தவம்
**நாணயம்**- ஜமெய்க்கன் டொலர்.
**தனி நபர் வருமானம்**- 1400 டொலர்
**வரலாறு**:-

கொலம்பஸ் 1490 இல் இதைக் கண்டுபிடித்தார். 1665 இல் பிரிட்டன் இதைக் கைப்பற்றும் வரையில், இது ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. 1962இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அறுதிப்பெரும்பான்மை பெறுபவரே பிரதமராகிறார். பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகாராணி, கவனர் ஜெனரலை நியமிக்கிறார்.

பொருளாதாரம் :-

விவசாயம், சுரங்கத் தொழில், சுற்றுலாத்துறை ஆகியன நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு ஆகும். முக்கிய விவசாய உற்பத்தி சீனி, வாழைப்பழம், எலுமிச்சை, தேங்காய் போன்றவையாகும். பாக்சைட், அலுமினா போன்ற வற்றின் உற்பத்தியில் உலகிலேயே இரண்டாவது இடத்தை ஜமெய்க்கா பெற்றுள்ளது. சீமெந்து, புகையிலை, அன்றாட நுகர்பொருள் தொழில்கள் வளர்ந்துள்ளன.

## செய்து பாருங்கள்



### ஸ்பூன் பொம்மை

**தேவையான பொருட்கள்:-**

- ★ ஒரு ஐஸ்கிறீம் கரண்டி
- ★ இரண்டு நிறத்தில் டொபி பேப்பர்
- ★ சிவப்பு, கறுப்பு ஸ்கெட்ச் பேனாக்கள்
- ★ ஒட்டுவதற்குப் பசை.

**செய்முறை :-**

ஐஸ்கிறீம் கரண்டியின் வாய்ப் பகுதியில் தலை முடி, கண், புருவம், மூக்கு இவற்றை கறுப்புப் பேனாவால் வரைந்து விடுங்கள். பின்னர் உதடுகளுக்கு சிவப்புப் பேனாவை எடுத்து வரைந்து கொள்ளுங்கள்.

அடுத்த ஒரு டொபி பேப்பரை எடுத்து புடவைக்கு மடிப்பு வைப்பது போல் அழகாக மடித்து, முகத்திற்குக் கீழே ஒட்டி விடுங்கள். மறுமுனையை அப்படியே மடிப்பு மடிப்பாக பாவாடை போல் எடுத்து விடுங்கள்.

இன்னொரு டொபி பேப்பரை எடுத்து அதே போல் மடித்து ஏற்கனவே ஒட்டியிருந்த டொபி பேப்பரின் மீது ஒட்டி விடுங்கள். இப்போது படத்தில் உள்ளது போல் இரண்டு பக்கமும் மடிப்பு, மடிப்பாக பொம்மைக்குக் கை வைத்தது போல் செய்யுங்கள். இப்போது உங்கள் கையில் பொம்மை.

"அவளுக்கென்ன?"

"அவளுக்கென்ன? ஒன்னுமில்லையே நல்லாத்தான் இருக்கா. ஐம்பத்தி ஒரு கிலோ இருக்கா. ரெண்டு கிலோ குறைக்கச் சொன்னேன்."

"பரத், அவ வெய்ட் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அன்னைக்கு கார்ல நான் வந்துக்கிட்டிருந்தனா, நம்ம ஆபீசுக்கு வர்றதுக்காகப் பாவம் பஸ் ஸ்டாப்ல மாதவி நின்னுட்டிருந்திச்சா, அவ லேட்டா வந்தா நமக்குத்தானே வேலை கெடும்னு லிஃப்ட்

# விலை உயர்ந்த உறவு 14

## பட்டுக்கோட்டை பிரபாகர்

கொடுத்தேன். நான் சீட்ல கையை வச்சிட்டு தாளம் போட்டுக்கிட்டிருந்தனா, பார்க்காம சப்புன்னு உக்காந்துட்டா. நான் ஆன்னு கத்திட்டேன். அம்மா! என்ன வலி! எவ்வளவு கிலோ இருப்பே நீன்னு கேட்டேன். தெரியலை சார்னா. இது கூடத் தெரிஞ்சுக்கலைன்னா எப்படின்னு பக்கத்தில தியேட்டர் வாசல்ல நிறுத்தி உள்ள போய் எடை பார்த்தோம். அவ சீட்ல 'புதிய உறவுகள் ஆரம்பம்'னு வந்திச்சி. என் சீட்ல 'சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்'னு வந்திச்சி. அவ 51 கிலோ, நான் 64 கிலோ. எடை மிஷின் சரியா இருக்கான்னு செக் பண்ண ரெண்டு பேரும் சேந்து நின்னோம். 115 கிலோ கரெக்டா காட்டிச்சி. கூடவே சீட்ல 'குடும்பத்தோடு மிஷினில் ஏறாதீர்கள்'னு வந்திச்சி' என்று அப்பாவித் தனமாக கண்களை உருட்டி, உருட்டி கதை மாதிரி சொன்ன பரத்தின் சட்டையைப் பிடித்தாள் சுசிலா.

"இதான் கடைசி எச்சரிக்கை!"

"இன்னைய தினத்துக்கா?"

"இனிமே மாதவிகிட்ட லூட்டி எதுவும் அடிச்சிங்கன்னா..."

"சுசி, பேரே மாதவின்னு இருக்கிறப்போ மனசு பரபரன்னு ஆகத்தானே செய்யுது. இலக்கிய மேடைகள்ல கூட சிலர் எப்படிச் சொல்வாங்கன்னா, கண்ணகி கோவலனை சரியா கவனிச்சிருந்தா, அவன் ஏன் மாதவிக்கிட்டே போறான்னு கேப்பாங்க. அது மாதிரி...

சுசிலா நெற்றியைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்.

"நீங்க மாறவே போறதில்லை. நான் எதுக்கு வந்தேன்னா... ஹேய்... இது எப்ப வாங்கினிங்க?" என்று வாஷிங் மிஷினைப் பார்த்தாள்.

"நேத்துதான்."

"என்கிட்ட சொல்லவே இல்லையே.."

"சொல்லியிருந்தா, வாங்க வேணாம்; நான் வந்து துவைச்சிப் போடறேன்னு சொல்லி இருப்பியா சுசி?"

"வொய் நாட்? நான் அதுகூடச் செய்ய மாட்டேனா பரத்?"

"பேச்சு மாறக்கூடாது. நிஜமா என் சட்டை துவைச்சிப் போடுவியா?"

"ஷ்யூர்"

"அப்ப பாத்ரூம் போய் துவை. ஏழு சட்டை ஊற வச்சிருக்கேன். இது பக்கத்து வீட்டுக்காரர் மிஷின். இங்கே இறக்கி வச்சிட்டுப் போயிருக்காங்க."

"யு... யு..." என்று அவன் மார்பில் செல்லமாகக் குத்தினாள் சுசிலா.

குத்தின கைகளை அப்படியே பிடித்துக் கொண்டு, இதழ் கடைசியில் புன்முறுவலுடன் அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான் பரத்.

"ம்கூம். பார்வை சரியில்லை."

"எத்தனை நாளாளச்சு!" என்று அவள் கீழுதட்டை இரு விரல்களால் நிமிண்டி, "ஏய் , வர்றியா தெருமுனையில் கோயில் இருக்கு, போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து லவ் பண்ணலாம்?"

"எனக்கு இன்னும் கல்யாண வயசாகலையே பரத்?"

"எப்ப சினிமால சேர்ந்தே?" என்று அவளை தன்பால் இழுத்து அணைத்துக் கொண்டு கழுத்தில் மூச்சு விட்டான்.

தன்னைப் பிடுங்கிக் கொண்டு, "போதும். நான் எதுக்கு வந்தேன்னா, எனக்குக் கார் வேணும்" என்றாள்.

"நோ, நோ. எனக்கு வண்டி தேவைப் படுது" என்றான் அவசரமாக.

"ஏன், எங்க போறீங்க?"

"வடபழனி வரைக்கும் போகணும்."

"நான் தென்பழனி வரைக்கும் போகணும்"

பேச்சுக்கு நடுவே வாசலில் கார் வந்து நிற்பதையும், சால்வை போர்த்தினவரும், முழுக்கை சட்டை இன் செய்திருந்த இளைஞனும் இறங்குவதைக் கவனித்தான் பரத்.

அவர்கள் திறந்திருந்த கதவில் மரியாதைக்காக டொக், டொக்கி விட்டு உள்ளே பிரவேசித்ததும், சுசிலா திரும்பிப் பார்த்தாள். இளைஞனின் பார்வை மோதும் இடத்தைக் கவனித்துக் கைகளைக் குறுக்கில் கட்டிக் கொண்டாள்.

"மிஸ்டர் பரத்ங்கிறது.." என்றார் பெரியவர்.

"நான்தான்.. வாங்க. உக்காருங்க."

நால்வரும் அமர்ந்ததும்...

"உங்க ஆபீஸ் போயிருந்தேன். இன்னைக்கு விடுமுறையை மறந்துட்டேன். விலாசம் விசாரிச்சு வந்தோம். என் பேரு ஜீவானந்தம். பாக்கு தயாரிக்கிறேன். ஜீவா பாக்கு, ஜீவா வாசனை சுண்ணாம்பு, ஜீவா ஸ்பெஷல் புகையிலை... கேள்விப்பட்டிருக்கிங்களா?"

"ஆமாம் சார், சொல்லுங்க"

"சொத்து, சொகத்துக்குக் குறைச்சல் இல்லை. இந்தப் பையன் மணி, என்கிட்டே வேலை பார்க்கறான். நான் தவமிருந்து பெத்த பிள்ளை ஒண்ணே ஒண்ணு. சரவணகுமார்ன்னு.. பேப்பர்ல படிச்சிருப்பிங்களே, ராணி சீதை ஹால்ல நிகழ்ச்சி முடிஞ்சி..."

பரத் ஆர்வமானான்.

"யெஸ், படிச்சேன். பார்ன் ஜீனியஸ்! அந்த நிகழ்ச்சிக்கு எனக்கு டிக்கெட்ஸ் வந்திச்சி. என்னால போக முடியலை. சரி, நீ போனில்லே?"

"ஆமாம், போயிருந்தேன். நிகழ்ச்சி முடிஞ்சி சரவணகுமாருக்கு ஏதோ மயக்கம் வந்துடிச்சின்னு அவசரமா கார்ல ஏத்திக் கொண்டு போனாங்க. மறுநாள் பேப்பர்ல பார்த்தா, கடத்தல்னு போட்டிருந்திச்சி. அப்புறம் நியூஸே இல்லை. என்ன ஆச்சு, இன்னும் உங்க பையன் கிடைக்கலையா?"

"இல்லையேம்மா."


"ஒரு வாரம் இருக்குமே ப்ளாக்மெய்ல் செய்யறாங்களா?"

"நிறைய சமாச்சாரம் நடந்துப் போச்சி சார்"

"பதட்டமில்லாம நிதானமாகச் சொல்லுங்க."

ஜீவானந்தம் தன் பையன் பிறந்து ஒரு வருடத்திலேயே வித்தியாசமான குழந்தையாய் இருந்ததில் ஆரம்பித்தார். கடைசியாக அரை மணிக்கு முன்னால் இன்ஸ்பெக்டர் நியூட்டனிடம் எல்லாம் சொல்லி கேஸட் ஒப்படைத்தது வரை சொல்லி முடித்தார். சுசிலா எழுந்து சென்று டீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள் பரத் கன்னத்தில் கை தாங்கி கேட்டுக் கொண்டான். மணிக்கு எல்லாம் தெரிந்த விசயமென்பதால் சினிமாப் பத்திரிகை எடுத்து நடிகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆக, சரவணகுமார் இன்னும் மெட்ராஸ்லதான் இருக்கான்."



"ஆமாம் சார்."

"இன்னொரு அஞ்சி லட்சத்தை எப்படிக் கொடுக்கறதுன்னு இப்ப அவங்க கிட்டேர்ந்து தகவல் வரணும். நீங்க ஒன்னு செய்ங்க. மறுபடி எந்த ரூபத்திலையாவது அவங்க உங்களைக் கண்டாக்ட் பண்ணும்போது, என் பையன் உங்க கிட்டதான் இருக்கான் கிறதை நான் நம்புற மாதிரி எதாச்சும் செய்ங்க. அதுக்கப்புறம்தான் பணம் தர முடியும்னு கண்டிச்சி சொல்லிடுங்க. பயப்படாம சொல்லுங்க. ஒண்ணும் செஞ்சிட மாட்டாங்க. நான் இந்த கேஸ்ல இன்வெஸ்ட்டிகேட்டிங் ஆஃபீஸரைப் பார்த்து கொஞ்சம் விவரம் தெரிஞ்சிக்கறேன். பேரென்ன சொன்னீங்க?"

"நியூட்டன்."

"இன்ஸ்பெக்டர் ரேங்கா?"

"ஆமாம்."

"நான் பார்த்துக்கறேன். விசாரிச்சுட்டு மேற்கொண்ட என்ன செய்யலாம்னு முடிவு செய்கிறேன். என்னால ஆன முயற்சிகளைச் செய்றேன். சரவணகுமார் போட்டோ கொண்டாந்திருக்கிங்களா?"

"இந்தாங்க."

வாங்கிப்பார்த்து சுசிலாவிடம் தந்தான்.

"நான்தான் நிகழ்ச்சியே பார்த்தேனே. சரியான துறுதுறுப்பு. யப்பா! என்ன டேலண்ட்! ஃபோட்டோகிராஃபிக் மெமரி பரத். அட் எ டைம் டென் ஆக்ஷன்ஸ். என்னமோ வார்த்தை சொன்னாங்களே தசாவதாரம் மாதிரி..."

"தசாவதானம்ங்க" என்றான் மணி.

"அன்னைக்கு நிகழ்ச்சிக்கு நீங்க யாரும் கூடப் போகலையா சார்?"

"இல்லை. அவங்க கார் அனுப்பி கூட்டிப் போனாங்க. கார்ல திருப்பிக் கொண்டாந்து விடறதா சொன்னாங்க. வேற என்ன விபரம் சார் வேணும்?"

"யோசிச்சி வைக்கிறேன். நாளைக்கு ஆஃபிஸ் வர்றிங்களா ஒரு பத்து மணிக்கு?"

"வர்றேன். அப்ப காலைல சந்திக்கலாம்." என்று ஜீவானந்தம் கைகூப்பி எழுந்தார், "பணத்தைப்பத்திக் கவலை இல்லைங்க. இன்னொரு அஞ்சு லட்சம் தரக்கூட நான் தயாருங்க. பையன் வேணும் முழுசா."

"தேவையில்லைங்க. பழைய அஞ்சு லட்சத்தையே திரும்பவாங்க முடியுமான்னு பார்க்கணும். நம்பிக்கையா இருங்க. தளர்ந்திடாதிங்க. சுசி, நம்ம கார்ட் எடுத்துக் கொடு. இதில வீட்டு போன் நம்பரும் இருக்கு. வச்சிக்கங்க. எதாச்சும் தகவல்னா இன்ஸ்பெக்டருக்குச் சொல்லிவிட்டு எங்களுக்கும் தெரிவிச்சிருங்க."

அவர்கள் புறப்பட்டுப் போனதும்,

"என்ன சுசி, என்ன நினைக்கிறே?"

"முழுசா அஞ்சி லட்சத்தைத் தொலைச்சிட்டு, இன்னும் அஞ்சத் தொலைக்கத் தயார்ன்னு சொல்கிறார் பாருங்க. பணம்கிறது டீக்கடை டோக்கன் மாதிரி இவர்களுக்கு. இவர், முதல்லயே நம்மகிட்டே வந்திருக்கலாம்."

"நடந்து முடிஞ்சதை என்னைக்கும் அங்கலாய்க்காதே. அது புலம்பல்! உள்ளதை வச்சி சாதிச்சுக் காட்டு. அது திறமை! முதல்ல உன்கிட்டே வந்திருந்தா என்னென்ன செஞ்சிருப்பியோ அதையே செய்யி."

"இன்ஸ்பெக்டர் நியூட்டனைப் பார்த்துப் பேசினதும் தான் முடிவு செய்யணும் பரத்."

ரிசீவரை எடுத்து அவள் கையில கொடுத்து, "கெட் என் அப்பாயிண்ட்மெண்ட்" என்றான். சுசிலா டயல் செய்ய, எழுந்து நின்று சோம்பல் முறித்தான். பத்திரிகைகளை அடுக்கினான். டேப் ரெக்கார்டர் அருகே சிதறிக் கிடந்த கேஸட்டுக்களை அதனதன் பெட்டியில் போட்டான். டி.வி.போட்டுப் பார்த்தான். ஸ்ரீராமர் ஒரு வார்த்தை பேசுவதற்கு மூணு நிமிஷம் யோசித்துக் கொண்டிருக்க....

"ஈவினிங் நாலு மணிக்கு வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கார் பரத். கார்டன்ல வீடு. ஜெயலலிதா வீடு தாண்டு....."

"ஸோ, நீ இல்ல வடபழனி போற. சரி, சிளம்பு" என்று கார் சாவியை அவள் மேல் எறிய, **'CHILDREN'** மேல் பட்டு, ஆ என்று தடவிக் கொண்டாள்.

"காட்டான்! காட்டான்!" என்று விட்டுப் புறப்பட்டு ஃபியட்டை எடுத்துக் கொண்டு போன பத்தாவது நிமிடம் "மே ஐ கமின் சார்?"

"வா மாதவி! உனக்காகத்தான் காத்திருக்கேன் இருபத்தொம்போது வருஷமா" என்றான் பரத்.

"ரெய்ஸா, சொல். என்ன நடந்தது? யார் உன்னைத் தாக்கினார்கள்...? சரவணகுமார் எங்கே?"

கொஞ்சம் வாயால் சுவாசித்த ரெய்ஸா, கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

என்னால் நம்பவே முடியவில்லை- வெஸ்லி இப்படி நடந்து கொள்வான் என்று."

"காட்! வெஸ்லியா? நம் வெஸ்லியா? ஏன்?"

"இப்போதுதான் ஒரு அரை மணியிருக்கும். திடீரென்று வந்தான். துப்பாக்கி எடுத்துக் காட்டினான். நான் பையனைத் தூக்கிப் போகிறேன் என்றான். ஏதோ விளையாட்டுக்குச் சொல்கிறான் என்று நினைத்தால் நிஜமாகவே தூக்கிக் கொண்டு நடந்தான். நான் அவன் தீர்மானத்தை உணர்ந்து தடுக்க முற்பட்டேன். கீழே தள்ளினான். அறைந்தான். என்னைக் கட்டிப் போட்டான். துப்பாக்கியைத் திருப்பி மண்டையில் அடித்தான். வாயில் துணியை அடைத்து விட்டுப் போயே போய் விட்டான். நான் மயக்கமாகிப் போனேன்."

சொத்தென்று சோபாவில் சோர்வாக விழுந்தார் பார்க்கர் ஸ்மித்.

அவர் தோளைத் தொட்டார் ப்ரூடி ஜேம்ஸ். "யார் வெஸ்லி?"

"என் டிரைவர். எட்டு வருடங்களாக என்னிடம் விஸ்வாசமாக இருந்து வந்த டிரைவர். நோ. அவனா? என்னால் நம்பவே முடியவில்லை. அரை மணி தான் ஆயிற்றாம். மிஸ்டர் ப்ரூடி, கால் தி போலீஸ், டிராஃபிக் டிவிஷனுக்குத் தெரியப் படுத்துங்கள். ரெய்ஸா, அவன் எதில் வந்தான்?"

"தெரியாது"

"பார்க்கர், நாம் போலீசுக்குச் சொல்வது உசிதமில்லை. யார் அந்தப் பையன் என்று கேள்வி வரும். பிரச்னை. நம் நிலை இப்போது திருட்டுப் பணத்தைத் தொலைத்தவன் நிலை. நாமாக ஏதாவது செய்தால்தான் உண்டு. வெஸ்லியின் இருப்பிடம் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியும், பார்க்கர் அவென்யுவில் இருக்கிறது. வீட்டில் ஒரு மனைவியும், ஒரு பையனும் உண்டு. இருங்கள். பேசலாம்."

பார்க்கர் ஸ்மித், "வெஸ்லியா? என் வெஸ்லியா? நம்பவே முடியவில்லையே" என்று புலம்பிக் கொண்டே ஹோலுக்கு வந்து டெலிபோன் எடுத்தார். எதிர் முனையில் பதில் இல்லை. விசாரணையைக் கேட்டார். அந்த எண் ஒரு வாரம் முன்பு கேன்சல் செய்யப்பட்டது என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

"மிகத் திட்டமிட்டுக் காரியம் செய்திருக்கிறான் மிஸ்டர் பார்க்கர். என்ன செய்யலாம் இப்போது?"

பார்க்கர் ஸ்மித் கண் சிவந்தவராக, மிகவும் உடைந்தவராகக் காணப்பட்டார். எழுந்து ப்ரூடி ஜேம்ஸ் கைகளைப் பற்றிக் கொண்டு, "இவ்வளவு மோசமாக என் வாழ்நாள்லேயே நான் ஏமாற்றப்பட்டதில்லை. மிஸ்டர் ப்ரூடி. இது கன்னத்தில் உமிழ்கிற அவமானம்! நடுத்தெருவில் செருப்பில் அடிக்கிற அவமானம்! ஊர் கூட்டி நிர்வாணப்படுத்துகிற அவமானம்! மிகப் பெரிய ஸ்தாபனத்தில் தயாரானவன் என்று இனி சொல்லிக் கொள்ளவே என்னிடம் முகம் இல்லை. என்ன செய்யப்போகிறேன்! என்ன செய்யப் போகிறேன்"

அவர் தோளை ஆறுதலாகத் தட்டினார் ப்ரூடி ஜேம்ஸ்.

"ரிலாக்ஸ் எஜண்டில் மேன், உடனுக்குடன் உணர்ச்சிவசப்பட்டு விடுகிறீர்கள். பதற்றம் குறைந்ததும் யோசியுங்கள். உங்கள் வேலைக்காரனை எங்களைவிட உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். எங்கே போவான், யார் தூண்டுதலில் செயல் பட்டிருப்பான் என்று நிதானமாகச் சிந்தியுங்கள். உங்களுக்குச் சகல உதவிகள் செய்து தர ஜோ அண்ட் ஜோ தயாராய் இருக்கிறது. போலீசுக்குத் தெரிவிக்காமல்தான் அவனைக் கண்டு பிடித்தாக வேண்டும். எவ்வளவோ மெனக்கட்டு இந்தியாவில் இருந்து அந்தப் பையனைக் கொண்டு வந்து கடைசியில்... வெல்! நாங்கள் புறப்படுகிறோம்"

"ஒரு நிமிடம்." என்று பார்க்கர் ஸ்மித் தன் கோட் பாக்கெட்டில் இருந்து ஐம்பதாயிரம் டாலருக்கான செக் கொண்ட கவரை எடுத்து, "பெற்றுக் கொள்ளுங்கள். காரியம் முடிக்காமல் கூலி பெற்றுக் கொள்வது அநியாயம். நான் சரவணகுமாரை மீட்பேன். உங்களிடம் ஒப்படைப்பேன். அதன் பிறகு பெற்றுக் கொள்கிறேன். அதுதான் முறை."

"பரவாயில்லை மிஸ்டர் பார்க்கர். நீங்கள் மீட்டுவிடுவீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது."


"மறுக்காமல் பெற்றுக் கொள்ளுங்கள், ப்ளீஸ்"

பெற்றுக் கொண்டு அவர்கள் புறப்பட இருந்த போது, டெலிபோன் ஒலிக்க... தயங்கி நின்றார்கள். பார்க்கர் ஸ்மித் எடுத்துச் சோர்வாக, "ஹலோ, ஸ்மித் ஹியர்"

"வணக்கம் முதலாளி அவர்களே" என்றது வெஸ்லியின் குரல்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: என். சிவயோகராஜா
வயது: 25
முகவரி: 31 1/7, அம்பகமுவ வீதி, கம்பளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, புத்தகம், டி.வி.



பெயர்: எம். அம்ஹர்
வயது: 21
முகவரி: 395, புதிய தெரு, வெலிகம.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம்.



பெயர்: ரி. ரவிக்குமார்
வயது: 28
முகவரி: P.O.BOX-5038, RIYADH-11422, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை, புத்தகம், டி.வி.



பெயர்: எச். நலிர்தீன்
வயது: 25
முகவரி: P.O.BOX-47420, CODE NO-64025, FAHANHEE, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிசை, தொலைக்காட்சி.



பெயர்: பி. விஜிதா
வயது: 26
முகவரி: மாவிலங்கத்துறை, ஆரையம்பதி.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, புத்தகம், டி.வி.



பெயர்: என். நபீலா
வயது: 18
முகவரி: 66/11, புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: வானொலி, புத்தகம், முத்திரை சேகரித்தல்.

பெயர்: ரி. மனோகரன்
வயது: 17
முகவரி: பாண்டிருப்பு-01, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: ஐ. மௌபீக்
வயது: 21
முகவரி: 20, றன்சீவி லேன், கொழும்பு-04.
பொழுது போக்கு: சினிமா, பாடல்கள்.

பெயர்: என். காமேஷ் மோகன்
வயது: 26
முகவரி: 73, KESTON ROAD, CROYDON, CR7-6BL, ENGLAND
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள், உதைபந்து.

பெயர்: எம். முஸம்மில்
வயது: 19
முகவரி: இலாஹியா வீதி, அறக்கியால, கெகுணகொல்ல.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, கதைப்புத்தகம், டி.வி.

பெயர்: எஸ். பிரதாப்
வயது: 17
முகவரி: 173/2, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். நவ்பர்
வயது: 27
முகவரி: 12, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை.
பொழுது போக்கு: வழமையானவை.

# மக்சீம் கார்க்கி

# தாய்

## 55

"நீ அதையெல்லாம் ஏன் சொல்கிறாய்?" என்று வேதனையோடு கூறினாள் தாய்.

"சொல்லத்தான் வேண்டும்" என்று கரகரத்துக் கூறினான் ரீபின். "உன்னுடைய மகனுக்கு இந்த மாதிரிக் கொடுமையை இழைப்பதன் மூலம் அவர்கள் அவனை கொன்று தீர்க்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? சரி, ஏதாவது புத்தகங்கள், பிரசுரங்கள் கொண்டு வந்தாயா, நீலவ்னா?"

தாய் அவனை லேசாகப் பார்த்தாள். "ஆம்..." என்று ஒரு கணம் கழித்துச் சொன்னாள். "பார்த்தாயா?"என்று மேஜை மீது தன் முஷ்டியைக் குத்திக் கொண்டே சொன்னான் ரீபின். "உன்னைப் பார்த்தவுடனேயே நான் தெரிந்து கொண்டேன். வேறு எதற்காக நீ இங்கு வரப்போகிறாய்? எப்படி? அவர்கள் பிள்ளையைத் தான் பறித்துக் கொண்டு சென்றார்கள்- ஆனால் இன்று அதே ஸ்தானத்தில் தாயே வந்து நின்று விட்டாள்!"

அவன் தன் முஷ்டியை ஆட்டியவாறே ஏக வசனத்தில் திட்டினான்.

அவனது கூச்சலினால் பயந்துபோன தாய் அவன் முகத்தைப் பார்த்தாள்; அவன் முகமே மாறிப்போய் விட்டதாக அவளுக்குத் தோன்றியது, அது மெலிந்து போயிருந்தது; தாடி ஒழுங்கற்றுக் குலைந்து போயிருந்தது. அந்த தாடிக்குக் கீழாக அவனது கன்ன எலும்புகள் துருத்திக் கொண்டு நிற்பது கூடத் தெரிந்தன. அவனது வெளிறிய நீலக் கண்களில், அவன் ஏதோ ரொம்ப நேரமாய்த் தூங்காது விழித்திருந்தவன் மாதிரி, மெல்லிய ரத்த ரேகைகள் ஓடிப் பரந்திருந்தன. அவனது மூக்கு உள்ளடங்கிக் கொக்கி போல் வளைந்து ஒரு மாமிச பட்சிணிப் பறவையின் அலகைப்போல் இருந்தது. தனது பழைய சிவப்பு நிறத்தை இழந்து கரி படிந்து போன அவனது திறந்த சட்டைக்காலர், அவனது தோள் பட்டை எலும்புகளையும், மார்பில் மண்டி வளர்ந்திருந்த தடித்த கருமயிர்ச் சுருள்களையும் திறந்து காட்டிக் கொண்டிருந்தது. மொத்தத்தில் அவனது தோற்றத்தில் என்னவோ ஒரு சவக்களை படிந்து போயிருப்பது போல் தோன்றியது. கொதித்துச் சிவந்த கண்கள் அவனது கரிய முகத்தில் கோபாக்கினி ஒளி வீசக் கனன்று கொண்டிருந்தது. சோபியா முகம் வெளுத்துப் போய் பேசாது உட்கார்ந்திருந்தாள். தன் கண்களை அந்த முஜீக்குகளிடமிருந்து அகற்ற முடியாமல் அப்படியே இருந்தாள். இக்நாத் தலையை அசைத்தான், கண்களை நெரித்துச் சுருக்கிப்பார்த்தான்; யாகவ் மீண்டும் இந்தக் குடிசைக் கால்களின் மரப்பட்டைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உரித்துக் கொண்டு நின்றான். எபீம் அந்த மேஜையருகே செல்வதும் வருவதுமாக, தாய்க்குப் பின்னால் மெதுவாக உலாவினான். ரீபின் மேலும் பேசத் தொடங்கினான்:

"கொஞ்ச நாட்களுக்கு முன்னால், இந்த ஜில்லா அதிகாரி என்னைக் கூப்பிட்டு அனுப்பி: 'டேய் அயோக்கியப் பயலே! மத குருவிடம் என்ன சொன்னாய்?' என்று கேட்டார். 'நீங்கள் என்னை எப்படி அயோக்கியப் பயலே என்று கூப்பிடலாம்? நான் என் நெற்றிவியர்வையைச் சிந்தி, உழைத்துப் பிழைக்கிறேன். நான் யாருக்கும் எந்தக் கெடுதியும் செய்வதில்லை' என்று சொன்னேன் நான். உடனே அவர் என்னை நோக்கிக் கர்ஜித்துப் பாய்ந்தார். என் தாடையில் அறைந்தார்; என்னை மூன்று நாட்களுக்குச் சிறையில் போட்டு வைத்தார். 'சரிதான், நீங்கள் ஜனங்களிடம் இப்படித்தான் பேசுவீர்கள் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டேன் நான். 'நாங்கள் இதை மறந்து விடுவோம் என்று எதிர்பாராதே, கிழட்டு ஜென்மமே! நான் இல்லாவிட்டால், வேறொருவன், உன்னிடமில்லாவிட்டால் உன் குழந்தைகளிடம் இந்த அவமானத்திற்காக வஞ்சம் தீர்த்துக் கொள்வோம்; அது மட்டும் ஞாபகமிருக்கட்டும்! நீங்கள் உங்களது இரும்பாலான கோர நகங்களால் மக்களது மார்பகங்களை உழுது பிளந்தீர்கள்; அங்கு பகைமையை விதைத்தீர்கள். எனவே பகைமைக்குப் பகைமைதான் பயிராக விளையும். எங்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள், பிசாசுகளே!' என்று நான் மனத்துக்குள் கூறிக் கொண்டேன். ஆமாம்!"

அவனது முகம் சிவந்து போயிற்று; ஆக்ரோஷம் அவனுள்ளே கொதித்துப் பொங்கியது; அவனது குரலில் தொனித்த ஏற்றஇறக்கங்கள் தாயைப் பயப்படும்படி செய்தன.

"ஆனால், நான் அந்த மத குருவிடம் சொன்ன விஷயம் என்ன தெரியுமா?" என்று மேலும் தொடர்ந்தான் ரீபின். "அவர் கிராமத்தில் கூட்டம் முடிந்து திரும்பி வந்து, ஓரிடத்தில் அமர்ந்து சில முஜீக்குகளோடு பேசிக் கொண்டிருந்தார். என்ன பேசினார்? சாதாரண மக்கௌல்லாம் ஆட்டு மந்தைகள் தாம் என்றும், அவர்களைக் கட்டி மேய்க்க ஒரு இடையன் எப்போதும் தேவையென்றும் அவர் பேசினார். ஹூம்! எனவே நானும் வேடிக்கையாகச் சொன்னேன்: 'வாஸ்தவம் தான். நரிக்கு நாட்டாண்மை கொடுத்து விட்டால், காட்டில் வெறும் இறகுகள் தான் மிஞ்சும். பறவைகள் மிஞ்சாது!' என்றேன். அவர் தம் தலையைச் சாய்த்துக் கொண்டு என்னைப் பார்த்தார். ஜனங்கள் எப்போதம் கஷ்டப்படவே வேண்டியிருக்குமென்றும், எனவே தமது வாழ்க்கையில் நேரும் துன்பங்களையும் சோதனைகளையும் சங்கடங்களையும் பொறுமையோடு தாங்கிக் கொள்வதற்குரிய சக்தியை அருளுமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். எனவே நானும் ஜனங்கள் எவ்வளவோ காலமாய்ப் பிரார்த்தித்துக் கொண்டு தானிருக்கிறார்களென்றும், ஆனால், கடவுளுக்கு ரொம்ப ரொம்ப வேலையிருப்பதால், இந்தப் பிரார்த்தனைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க இயலவில்லையென்றும் சொன்னேன். ஹூம்! அப்புறம் அவர் என்னைப் பார்த்து: 'நீ எந்த மாதிரிப்பிரார்த்திக்கிறாய்' என்று கேட்டார். நான் சொன்னேன்: 'எல்லாச் சனங்களையும் போல் நானும் ஒரே ஒரு பிரார்த்தனை யைத்தான் என் வாழ்நாள் முழுதும் சொல்லி வருகிறேன்: 'கருணையுள்ள கடவுளே! எங்களுக்குக் கல்லைத் தின்று வாழவும், கனவான்களுக்காக விறகு பிளக்கவும் செங்கல் சுமக்கவும் கற்றுக் கொடு', என்று தான் பிரார்த்திக்கிறேன் என்று சொன்னேன். ஆனால், அவரோ என் பேச்சை முடிக்க விடவில்லை." திடீரென்று ரீபின் சோபியா வின் பக்கம் திரும்பினான்: "நீங்கள் ஒரு சீமான் வீட்டுப் பிறவியா?" என்றான்.

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று வியப்போடு திடுக்கிட்டுக் கேட்டாள் சோபியா.

"ஏனா?" என்று சிணுங்கிக் கொண்டான் ரீபின். "ஏனென்றால் நீங்கள் அப்படிப்பட்ட குடும்பத்தில் தான் பிறந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். எவரெவர் எப்படியெப்படிப் பிறந்தார்களோ அப்படித் தான் அவர்கள் விதியும் இருக்கும். ஹூம், நீங்கள் தலையில் கட்டியிருக்கிறீர்களே அந்தத் துணியினால் சீமான்களின் பாபக் கறையையெல்லாம் மூடி மறைத்து விடலாம் என்று நினைக்கிறீர்களா? ஒரு சாக்குக்குள்ளே போட்டுக் கட்டியிருந்தாலும் நாங்கள் ஒரு மதகுருவை அடையாளம் கண்டு கொள்வோம். மேஜை மீது சிந்தியிருந்த எதன் மீதோ முழங்கை பட்டதுமே முகத்தைச் சிணுங்கிக் கூசி நடுங்கினீர்களே. உங்கள் ஒய்யார உடம்புக்கும் தொழிலாளன் உடலுக்கும் சம்பந்தமே இல்லை......"

தாய் குறுக்கிட்டு சொன்னாள். அவனது முரட்டுத்தனமான ஏளனப் பேச்சு சோபியாவின் மனத்தைப் புண்படுத்திவிடக் கூடாதே என அவள் அஞ்சினாள்.

"மிகயீல் இவானவிச்! அவள் என் சிநேகிதி. மேலும் அவள் நல்லவள். நமது கொள்கைக்காகப் பாடுபட்டுத்தான் அவளது தலைகூட நரைத்துப் போயிற்று. நீ ரொம்பவும் கடுமையாக வெடுக்கென்று பேசுகிறாய்......"

ரீபின் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

"ஏன், நான் மனம் புண்படும்படி யாரையாவது எதையேனும் சொல்லி விட்டேனா?"

"என்னிடம் ஏதோ சொல்ல விரும்பினீர்கள் என்று நினைக்கிறேன்" என்று வறண்ட குரலில் சொன்னாள் சோபியா.

"நானா? ஆமாம். இங்கே சமீபத்தில் தான் ஒரு ஆசாமி வந்திருக்கிறான். யாகவின் சொந்தக்காரன். அவனுக்குக் காசநோய். அவனை அழைத்துவரச் சொல்லட்டுமா?" என்றான் ரீபின்.

"அவசியமாய்!" என்றாள் சோபியா.

ரீபின் அவளைச் சுருங்கி நெரித்த கண்களோடு பார்த்தான்; பிறகு எபிமிடம் திரும்பி மெதுவாக சொன்னான்:


"போ. போய் அவனை இன்று மாலை இங்கு வரச் சொல்லிவிட்டு வா."

எபீம் தன் தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டு ஒன்றுமே பேசாமல், எவரையுமே பார்க்காமல், அந்தக் காட்டு வழியில் சென்று மறைந்தான். அவன் செல்வதைப் பார்த்துத் தலையை ஆட்டிக் கொண்டே ரீபின் சொன்னான்:

"இவனுக்கு இப்போது கஷ்டகாலம். சீக்கிரமே, இவனும் யாகவும் பட்டாளத்தில் சேர்ந்து விடுவார்கள். யாகவுக்கு அதற்குத் தைரியம் கிடையாது. 'நான் போகமாட்டேன்' என்கிறான். இவனுக்கும் திராணி இல்லை. இருந்தாலும் இவன் சேர்ந்து விடுவான். பட்டாளத்தில் சேர்ந்து அங்குள்ள சிப்பாய்களைத் தூண்டி விட்டுவிட முடியும் என்று இவன் நினைக்கிறான். தலையைக் கொண்டு மோதி, சுவரைத் தகர்த்து விட முடியுமா? அவர்கள் கையிலும் துப்பாக்கி ஏறிவிட்டால், அப்புறம் அவர்களும் மற்ற சிப்பாய்கள் செல்லும் பாதையில் தான் செல்வார்கள். இக்நாத் என்னவோ அதைப் பற்றியே அவனிடம் பேசிக் கொண்டிருக்கிறான். அவன் பேச்சில் அர்த்தமே கிடையாது."

"இல்லையில்லை" என்று மறுத்துக் கூறிக் கொண்டே ரீபினைப் பார்த்தான் இக்நாத்; "இதையெல்லாம் சொல்ல வில்லை என்றால், இவனுக்கு அவர்கள் கொடுக்கிற பயிற்சியில் இவனும் அவர்களைப் போலவே சுட்டுத் தள்ளத் தொடங்குவான்."

"எனக்கு அதில் நம்பிக்கையில்லை" என்று சிந்தித்தவாறே பதிலுரைத்தான் ரீபின்; "அவன் பட்டாளத்தில் சேராமல் ஓடிவிடுவதே ரொம்ப நல்லது. ருஷியா ரொம்பப் பெரிய தேசம். ஓடிப் போய் விட்டால் அவர்கள் அவனை எங்கேயென்று கண்டு பிடிப்பார்கள்? ஒரு கள்ளப் பாஸ்போர்ட் வாங்கி விட்டால், அவன் ஊர் ஊராய்த் திரியலாம்."



"....நீங்கள் உங்களது இரும்பாலான கோர நகங்களால் மக்களது மார்பகங்களை உழுது பிளந்தீர்கள்; அங்கு பகைமையை விதைத்தீர்கள். எனவே பகைமைக்குப் பகைமைதான் பயிராக விளையும். எங்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள்....." ரீபின்.

"அப்படித்தான் நான் செய்யப் போகிறேன்" என்று தன் காலை ஒரு கழியால் அடித்துக் கொண்டே சொன்னான் இக்நாத் "விரோதமாகப் போவதென்று தீர்மானித்து விட்டால், அப்புறம் தயக்கமே இருக்கக் கூடாது; நேராகப் போக வேண்டியதுதான்."

அவர்கள் பேச்சு நின்றது. தேனீக்களும் குளவிகளும் மொய்த்துப் பறந்து, ரீங்காரித்து இரைந்தன. பறவைகள் கூவின; வயல் வெளியிலிருந்து ஒரு பாட்டுக் குரல் மிதந்து வந்தது. ஒரு கணம் கழித்து ரீபின் பேசத் தொடங்கினான்:

"நல்லது. நாங்கள் வேலைக்குப் போக நேரமாகி விட்டது. உங்களுக்கும் கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கத் தோன்றும். இல்லையா? இந்தக் குடிசைப் புறத்தில் சிறு குடில்கள் இருக்கின்றன. யாகவ், நீ போய்க் கொஞ்சம் காய்ந்த சருகுகளைக் கொண்டுவா. சரி, அம்மா, நீ அந்தப் பிரசுரங்களை எடுத்துக் கொடு."

தாயும் சோபியாவும் தங்கள் மூட்டைகளை அவிழ்க்க ஆரம்பித்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

# 'இன்னும் கடிதம் வரவில்லை....'

## கிண்ணியா அமீரலி

*மீண்டும் உம்மாவின் வாப்பா*
*எழுந்து வந்து*
*எலக்ஷனில் வெற்றி பெற்றால்தான்*
*எனக்கொரு*
*'வோச்சர்' வேலையாவது*
*கிடைக்கும்....*



'துண்டச் சோறு' அப்பன் சொன்னா 'டேக் இற் ஈஸி' யாம்.... மண்ணாங்கட்டி.

வேலை வெட்டி இல்லாம சும்மா ஊர்சுற்றித் திரிந்த என்னைப் பார்த்து அழுத காதலி அண்ணான்னு சொன்னா! வேலை....தேடி அலைவதே வேலையாகிப் போனது. "அடடடடடட..... ஒருத்தன் கிட்ட கைகட்டி நிற்கிறது; அது ஒரு வேலையா....?"

என்று 'கல்யாணப் பரிசு'-தங்கவேலு மாதிரி மார்தட்டிக் கொண்டாலும்.. ஓ. எல்..ல கணக்கில்லாத எனக்கு யார்தான் வேலைதரப் போறா....?

உம்மாக்கும் வாப்பாக்கும் நான்நல்ல மகனில்லை!

உடன் பிறப்புக்கள்கூட என்னோடு உறவில்லை!

நண்பர்களுக்கும் என்மீது நிஜமான நட்பில்லை!

நான்போன பாதையிது...யார் மீதும் தப்பில்லை....

இப்போது புரிகிறது ஒழுங்கான 'ஜொப்' இல்லை!

'தேமா புளிமா கூவிளம் கருவிளம்' என்று கவிதை கற்ற நேரம் தேங்கா' மாங்கா... என்று ஏதாவது கூவி விற்றிருக்கலாம்....

புஹாரியடியில் கூட்டாளிமாரோட கூடி..... 'தம்' மடித்த நேரம் அன்ஸார் டெயிலரிடம் தையல் பழகியிருக்கலாம்....

'சைட்' டடித்த நேரம் 'வெள்ளையன்' சைக்கிள் கடையிலே சேர்ந்திருக்கலாம்....

மாஞ்சோலைச் சேனையிலேயிருந்து பெரியாற்று முனைவரைக்கும் ஒவ்வொரு ஒழுங்கை யோரமா...சைக்கிள் ஓடித் திரிஞ்ச நேரம்.. டியூசனுக்குப் போயாவது கணக்கும் பாஸ் பண்ணியிருக்கலாம்.....

ஊர்ல... 'காதல் விவகார அமைச்சரா....' அலைஞ்சது தான் மிச்சம்... இன்றும் கூட-

'பேச்சு பல்லக்கு! தம்பி கால் நடை.'

என்ன செய்வது.. வாப்பா பொலீஸ். உம்மா டீச்சர். கடையிலே டீ அடிக்க முடியாது. மீன் விற்க முடியாது. ஐஸ்பழம் விற்க முடியாது. மேசன்வேலை- ஓடாவி வேலைக்குப் போக முடியாது. குடும்ப கௌரவம் என்னாகிறது?

இப்போது எனக்கு இருபத்தொன்பது வயதாகிறது. இன்னும் ஒழுங்கான ஒரு தொழிலில்லை.

மீண்டும் உம்மாவின் வாப்பா எழுந்து வந்து எலக்ஷனில் வெற்றி பெற்றால்தான் எனக்கொரு 'வோச்சர்' வேலையாவது கிடைக்கும்.

திறமைக்கு எங்கே மதிப்பு?

சிறிது காலம் 'கிக்குருட்டி'யாக இருந்தேன். நித்திரை வந்து விட்டது.

வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

இந்தக் காலத்தில் இஞ்சினியர்மாருக்கே நல்ல தொரு இடத்தில் வேலை கிடைப்பதே பெரும் கஷ்டமாக இருக்கும் போது... எனக்கா கிடைக்கும்?

'பாட்டா' கம்பனி ஒன்றில் 'கெடுபிடி' யாய்ச் சேர்ந்தேன்- சாப்பிட விடாத நஸ்லிக்கு செருப்பாலடித்து விட்டு விலகி வந்த விட்டேன்.

என்ன செய்வது..? வெகுசன விரோதியாகிக் கொண்டேவருகிறேன்.

நல்லதுக்குக் காலமில்லை.

தனியார் நிறுவனச் சம்பளம் சாப்பாட்டுக்கே போதாது..

'இது சரி வராது... ஏதாவது அரசாங்க வேலையில் சேருங்க... பென்ஷனாவது கிடைக்கும்...'

என்று ஆறுமாதமா என்னாசைக் காதல் மனைவி பானு நச்சரிக்க ஆரம்பித்ததும் தான்-

நான்-

தபாற்கந்தோரில்....

பியோன் வேலைக்கு விண்ணப்பித்தேன்.

இன்னும் கடிதம் வரவில்லை.

---

# அவசர புத்தி!

## சத்துருக்கொண்டான் கே. வின்சன்ட்

மாலை மணி ஆறு. சுஜான் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். வீட்டை அணுகும் போதே அவனுக்கு ஒரே அதிர்ச்சி! வீட்டினுள் மனைவி மனோஜாவின் குரலும், யாரோ ஒரு ஆணின் குரலும் கேட்டன. சுவர் ஓரம் சாய்ந்து நின்று சற்று நிதானித்தான்.

"என்னமோ தெரியல்ல மனோ. ஒரு மாசத்துக்கு ஒரு தடவையாவது வந்து உங்களைப் பார்துட்டுப்போகாவிட்டால் மனதுக்கு நிம்மதியே இல்லை. அதுதான் இண்ணைக்கு 'லீவு' எடுத்துக்கொண்டு இங்கே வந்தேன். வரும் வழியில் உங்களுக்கு ஏதாவது ஒன்று வாங்கி வரவேணும் போல இருந்திச்சு... உங்களுக்குப் பிடிச்ச கலர்ல உங்களுக்காக ஒரு சாரி வாங்கி வந்திருக்கேன்." இந்தக் குரலைக் கேட்டதும் சுஜானின் முகம் கொவ்வைப்பழம் போல மெதுவாகச் சிவந்து, மாலைப்பொழுது என்றும் பாராமல் வியர்த்துக் கொட்டியது.

தன் மனைவி மீது அளப்பரிய அன்பையும், மரியாதையையும் நெஞ்சுக்குள் புதைத்து வைத்திருந்த சுஜானின் எண்ணங்கள், எதிர் காலக்கனவுகள் எல்லாம் ஒரு சில நிமிடங்களிலேயே பளிங்கு மாளிகையைப் போல உடைந்து கொட்டத் தொடங்கியது.

'நான் இவளுக்கு எதுல குறைவைச்சேன்? அவள் கேட்காமலேயே டிவி, டெக், பிரிஜ், ரேடியோ...ஏன் அவளுக்குப்பிடித்த கலர்ல விதம் விதமான சாரிகள்-அவள் விருப்பப்படி



நிறையவே வாங்கிக் கொடுத்திருக்கேன்.... இப்படி இருக்க எவனோ ஒருவனின் சாரிக்கு இவள் ஏன் ஆசைப்பட வேணும்...? அதுவும் இவளுக்குப்பிடிச்ச கலரை அவனுக்கு எப்படித் தெரியும்? இவள் சொல்லித்தானே அவன் அறிஞ்சிருக்க வேணும்? இல்லாவிட்டால் இவனுக்கு எப்பிடித்தெரியும்...? பாழாய்ப் போன இவளுக்கு என்ன கொழுப்பு... நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எவனோ ஒருவனை வீட்டுக்குள் கூட்டி வைத்து தைரியமாக பேசிக் கொண்டிருக்கின்றாளே...இவள் வேஷக் காரி, இவளை நான் நம்பியிருந்தது என்னோட தப்பாகப் போச்சுது. இனிமேல் இவளை நான் நம்பவே போறதில்லை...' சுஜான் தன் மனதிலே மனோஜாவை திட்டிக்கொண்டே சுற்றும் முற்றும் முற்றத்தை நோட்டமிட்டான்.

இரும்புக் கம்பி ஒன்றுதான் அவன் கண்ணில் தென்பட்டது. அதைக் கையிலெடுத்துக் கொண்டு படிகளில் ஏறினான். வீட்டின் உள்ளே மனைவியின் பலத்த சிரிப்பொலி...

சுஜானன் இரத்தம் கோபத்தால் கொதித்து எழுந்தது. ஆத்திரம் மேலிட பகாசூரனாகி விட்டான். இனியும் அவனால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. தன் பலம் முழுவதையும் வர வழைத்துக் கொண்டு "டே..ய்" என ஓலமிட்டபடி ஓங்கி ஒரு அடி விட்டான் தலையில்.

"அம்...மா" தலையைப் பொத்தியபடி கதிரையிலிருந்து தரையில் சரிந்தான் அவன்.

"என்னங்க...என்ன காரியம் பண்ணிட்டீங்க...?" அந்த அறையே அதிரும்படி கத்தினாள் மனோஜா.

கையிலிருந்த இரும்புக்கம்பியை 'சட்டென' தரையில் போட்டு விட்டு வந்தவன் யாரென்று அறிந்து கொள் வதற்கு- விழுந்தவன் முகத்தை ஆவலோடு நிமிர்த்திப் பார்த்த சுஜான் அதிர்ந்தான்.

தனக்கென இருந்த ஒரே அண்ணன் சுமண் இரத்த வெள்ளத்தில் மிதந்தான். "அண்ணா" என்ற அவனது கூக்குரல் திசையெங்கும் கேட்டது.

# வறுமைக்கு வழி இதுவா?

**ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்**



குளிர் தாங்காது முடக்கிக்கொண்டு சாக்கில் படுத்திருந்த கந்தசாமி கண் விழித்துப்பார்த்தபோது கிழக்கு வெளுத்திருந்தது.

லயத்தில் அடுத்தடுத்த வீடுகளில் கதவுகள் திறக்கும் சத்தம் லேசாய்க் கேட்க எழுந்து சாக்கை மடித்து வைத்துவிட்டு மனைவியைப் பார்க்கிறான். அவளும் அந்த அறையின் ஓரத்தில் மகள் சுந்தரியுடன் ஒட்டியபடி முடக்கிப் படுத்திருக்கிறாள்.

லயக் கூரையின் ஓட்டையினூடாக வந்த சூரிய ஒளி அறை எங்கும் பரவ ஆரம்பித்திருந்தது.

"மாரியாயி எழும்பு புள்ள: பொழுது விடிஞ்சிடிச்சி எழும்பு;" மனைவியை தட்டி எழுப்பிவிட்டு அவன் கதவைத் திறந்து விடவும் மாரியாயி எழும்பவும் சரியாக இருந்தது.

பாவம் அவளுக்கு இரவு பசியோடு உறங்கிவிட்ட களைப்பு இன்னும் முகமெங்கும் ஒட்டியிருந்தது. இருந்த கொஞ்சம் மாவில் தான் ரொட்டி சுட்டு இரண்டு வயிறுகளையும் அரைவாசியாவது நிரப்பி விட்டு தான் மட்டும் சிறிதளவு பச்சைத் தண்ணீர் குடித்து விட்டு நித்திரையாகிப் போயிருந்தாள். இப்போதுகூட பசியால் லேசாக தலை சுற்றச் செய்தது. மகள் சுந்தரியும் எழும்பி சோம்பல் முறித்துக் கொண்டிருந்தாள்.

"மாரியாயி! மகள பள்ளிக்கூடத்துக்கு போகச் சொல்லு; இன்னைக்கு சம்பளம் போடுவாங்க; ராத்திரிக்கு சரி சோறு சமைச்சி குடுக்கலாம்."

அவனுக்கு மகளைப் பற்றி நினைக்கையில் லேசாக குரலில் ஒரு கரகரப்பு ஏற்படத்தான் செய்தது. அவனுடைய குடும்பத்துக்கு மட்டுமா இந்த நிலை? அன்றாடம் மலையகத் தோட்டங்களில் மாதக் கடைசியில் இருந்து பத்தாம் திகதி வரை 'எப்போது சம்பளம் கிடைக்கும்?' என்று ஏங்கும் குடும்பங்கள் தான் அதிகம். அதில் இன்று கந்தசாமியின் குடும்பமும் அடங்கியிருந்தது.

என்ன தான் வறுமை அவனுக்கு வந்திருந்தாலும் மகளை படிப்பிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அவனை விட்டுப் போவதாயில்லை. மகள் சுந்தரி கூட படிப்பில் கெட்டிக்காரிதான்.

கிழிந்ததற்கு தையல்கள் போடப்பட்டிருந்த வெள்ளை கவுணை உடுத்தியபடி லயத்துப் படியை விட்டு இறங்கிப்போன மகளைப் பார்த்து லேசாக கண்ணீர் விட்டாள் மாரியாயி.

அதே போல அவர்கள் இருவரும் கூட பட்டினியாகவே வேலைக்குப் போக ஆயத்தமாகியிருந்தார்கள். சம்பள நாள் என்பதால் இரண்டு மணிக்கு வேலை விடப்படும். ஆகையால் இன்றாவது வயிறு நிறம்பச் சாப்பிடலாமென்ற எண்ணம் அவர்களுக்கு மகிழ்ச்சியை கூட்டியிருந்தது. கந்தசாமி மண்வெட்டியை தோளில் சுமந்தபடி நடக்கத் தொடங்கியிருந்தான்.

18ம் நம்பர் மலையில் மாரியாயியின் கொழுந்துக் கூடை நிறம்பியிருந்தது. பட்டினி என்றாலும் கொழுந்து பறிப்பதில் அவள் தோற்றுப் போவதில்லை. காலை 9 மணிக்கு கொழுந்தை கணக்கப்பிள்ளை வந்து நிறுத்து விட்டுப் போயிருந்தார். அதுவும் 12 கிலோ என்பதில் மனதில் ஏகப்பட்ட சந்தோசம்.

நேரம் பதினொரு மணியாகியிருக்கவேண்டும். கொழுந்தெடுத்துக் கொண்டிருந்த மத்த பெண்களெல்லாம் கீழே இறங்கிப் போவதைக் கண்ட மாரியாயி குழம்பிப் போனாள்.

"ராசாத்தி அக்கா...ஏன் எல்லோருமா நெரய விட்டு கீழ எறங்கிறாங்க?" பக்கத்து நிரையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவளிடம் கேட்க,

"இது தெரியாதா மாரியாயி ஒனக்கு? நேத்து நம்ப தோட்டத்துல கமிட்டி கூட்டம் நடந்திச்சில்லையா...? அதுல நம்ப சுப்பிரமணியத்துட்டு கமிட்டி ஆட்கள; நம்ப செல்லையாவுட்டு கமிட்டி ஆளுக அடிச்சிப் புட்டாங்களாம்... அதுதான் அவுங்க டவுன்ல இருக்கிற தொழிற்சங்க ஒப்பீசுல போய் சொல்ல, அவுங்க ஸ்டரய்க் அடிங்கனு சொல்லிபுட்டாங்களாம். அது தான் தங்கச்சி ஆளுக எல்லாம் வேலை செய்யாம ரோட்டுக்கு ஏறங்கிட்டாங்க;....." அவள் கூறிவிட்டு கூடையோடு பாதைக்கு இறங்குகிறாள்.

மாரியாயிக்கு மனம் லேசாக வலித்தது. இன்று தோட்டம் வேலை நிறுத்தம் என்றால் அநேகமாக தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுபடாது. அப்படியென்றால்.... மகள்... கணவன்.... தன் வயிற்றுப் பசி...... நீண்டதோர் பெருமூச்சு அவளையறியாமலே வந்து போனது.

ஏழைகள் பட்டினியால் வாடும்போது தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்து என்ன பயன்?

முதலில் அவர்களின் வறுமையைத் தீர்க்க அல்லவா வழி செய்ய வேண்டும்? அவளுக்கு அது புரிந்ததோ என்னவோ வாயில் வந்த எச்சிலை காறித் துப்பினாள்.

பசி....பசி.... பின்பு லேசாய் தலை சுற்ற மகளினதும், கணவனினதும் ஞாபகம் வர வடிந்து கொண்டிருந்த கண்ணீரோடு கூடையின் சுமையைத் தாங்கியபடி நிரையை விட்டு கீழே இறங்க தொடங்கியிருந்தாள். மாரியாயி.

# தெரி(யாத)ந்த முகம்

**கனகசபை தேவகடாட்சம்**

தலைவர் சுப்பிரமணியம் அமரத்துவம் அடைந்ததன் நினைவாக கட்டப்பட்ட அந்த பஸ் தரிப்பு நிலையத்தில் கொழும்பு பஸ்சிற்காக காத்து நிற்கிறேன். வழக்கத்திற்கு மாறாகப் பயணிகள் தொகை குறைவாக இருந்தது. கைக் கடிகாரத்தை பார்க்கிறேன். இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் செல்லும், கொழும்பு பஸ் வருவதற்கு! மனதுக்குள் அலுத்துக்கொள்கிறேன்.

சற்று மெதுவாக நிமிர்ந்து நோக்குகிறேன்- தலைவர் சுப்பிரமணியத்தின் நினைவாக கட்டிய பஸ்தரிப்பு நிலையத்தை. அக்காலங்களில் அரசியல் மேடைகளில் கலக்கியவர் அவர்! தனக்கென்று எதுவுமே சேமிக்காது, சுய நலமிக்க அரசியல்வாதிகளுக்காக அயாராது உழைத்த அப்பாவி மனிதர்! சத்தியாக்கிரக காலம் தொடங்கி இன்றுவரை அரச அடிமைத்தனங்களுக்கு எதிராக முகம் கொடுத்து நோய் வாய்ப் பட்டு அமரத்துவம் அடைந்தவர்! அந்த துணிச்சல் மிக்க தியாகியை எண்ணியவாறு திரும்புகின்றேன்.

தெரு அல்லோல கல்லோலப் படுகிறது. 'இளசு', 'கிழடு' என்று பேதமின்றி பரபரக்க ஓடுகிறார்கள். முன்னால் ஒரு வெள்ளை வேன். அதன் பின்னால் இரண்டு வாகனங்கள். அதனுள் ஒரு முக்காடு இட்ட முகமூடி மனித உருவம், ஆள் பிடிக்கும் படலம் நடந்துகொண்டிருக்கிறது.

முக மூடியின் ஆணையின் படி தெருவில் நின்றவர்கள் பிடிக்கப்பட்டு கதறக் கதற வாகனத்தில் பலவந்தமாக ஏற்றப்படுகிறார்கள். எனக்கு இது அச்சத்தை தந்தாலும், கொழும்பு செல்லும் பயணி என்று சொல்லி தப்பி விடலாம் என்ற தென்பு இருந்தது.

இப்போது நான் நிற்கும் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் முகமூடி வாகனம் வருகிறது. இதயம் திக்- திக்- என அடிக்கும் ஒலி என் காதுகளுக்கு கேட்கிறது. என் அருகில் வாகனம்,..... முகமூடி உருவம் என்னைக் கண்டு' தலையை ஆட்டி ஆணையிட்டது. மறுகணம் என்னைச் சுற்றி பலர்- பலவந்தமாக ஏற்றுகிறார்கள். கொழும்பு



செல்லும் பயணத்தைப் பற்றிக் கூற அவகாசமில்லை. அநியாயம் சொல்லக் கூடாது- வஞ்சகம் இல்லாத அடி, உதையுடன் கூடிய மரியாதைகளுடன் ஏற்றப்பட்டேன்.

அடுத்ததாக பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற ஏனையவர்களை முகமூடி நோக்குகிறது. ஆகா... இன்னுமொரு கொழும்பு பயணியை காட்டியது. அதே மரியாதையுடன்! வாய் திறந்து எதுவும் கூற அவகாச மின்றி வாகனத்தில் ஏற்றி தள்ளப்படுகிறார். வாகனம் நகர்கிறது.

இப்போது பேசுவதற்கு ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இறுதியாக ஏற்றப் பட்ட- அந்த கொழும்பு பயணி சகோதர மொழியில் காரசாரமாக மொழிந்தவாறு தனது அடையாள அட்டையை விரித்து நீட்டுகிறார். சிவப்பு இலச்சினையிட்ட அடையாள அட்டை. புரிந்து கொன்டேன். அவரும் ஒரு பாதுகாப்பு படையை சேர்ந்தவர். விடுமுறையில் வீடு செல்வதற்கு 'சிவில்' உடுப்பில் நின்றிருந்திருக்கிறார். வாகனத்தில் இருந்தவர்களும், முக மூடியும் மனனிப்புக் கோரி அவரை இறக்கி விடுகிறார்கள். ஆனாலும் அந்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு ஆத்திரம் தீரவில்லை என்பது நன்றாக விளங்கியது.

இப்போது வாகனம் மீண்டும் தேடல் பயணத்தை ஆரம்பித்தது. ஒரு மணித்தியாலம் சென்றிருக்கும். நான் அடைக்கப்பட்டிருந்த முகமூடி வாகனத்தை முன்னால் மறித்து நின்றது இன்னொரு வாகனம். நன்றாக உற்று நோக்குகிறேன். என்னோடு ஏற்றப் பட்டு விடுதலை செய்யப்பட்ட அந்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் தலைமையில் பத்துப் பதினைந்து பேர் நான் இருந்த வாகனத்திற்குள் ஏறினார்கள்.

அவர்களும் ஒரு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது சொல்லாமல் விளங்கியது. மறு கதை இல்லை. கைது செய்தவர்களுக்கும் அந்த முகமூடிக்கும் தூள் கிளம்பியது. குரக்கன் அரைக்கும் சத்தம் போல் கேட்டது எனக்கு. பலமான அடிகள். "எங்கள் கப்டனுக்கா நீ தலையை ஆட்டினாய்?" என்று சகோதர மொழியில் பேசிய ஒருவர் அந்த முகமூடியின் திரைச் சிலையை கிழித்து அடித்தார். எனக்கு ஒரே அதிர்ச்சி! அந்த முகமூடி நன்கு தெரிந்த முகம்! தெரியாத முகம் போல் காட்டிக் கொண்டேன்- தொடர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசையில்.

# மாறியது நெஞ்சம்

**வத்தேகம - ஜெப்றிமா**

"டொக்டொக்"...... ஸ்டவ்வை அணைத்து விட்டு கதவைத்திறந்தேன். மாமியார் நின்றிருந்தார். "வாங்க...வாங்க மாமி...இரிங்க. இதோ டீ போட்டுக் கொண்டு வாரேன்........." வீட்டிற்குள் காலடி வைக்குமுன்னே மாமிக்கு டீ வேண்டும். உபசரிப்புகளெல்லாம் அப்புறந்தான். டீ,பிஸ்கட், பழம் வீட்டிலிருந்தவைகள்தான். சாப்பிட்டாயிற்று.

"ஆமாம்...என்ன செஞ்சிகிட்டிருந்தீங்க? வாசமடிக்குதே...?" "பகலைக்கு மீன் கறி சமைச்சிக் கிட்டிருந்தேன். அதில் கொஞ்சம் எடுத்து பொரிச்சேன் மாமி. அதுதான் உங்க பேரன்களுக்கு பொரிச்ச மீன் ரொம்பப்பிடிக்குமே" என்றேன்.

"எங்கே... அவர்கள்....? கேட்கவே மறந்துட்டேன்." என்று கண்ணால் பேரப்பிள்ளைகளைத் தேடினார். "அதோ அந்த ரூமில இருக்காங்க மாமி..." எனது மகன்மார் மூவரும் கடலையைக் கொறித்துக்கொண்டு டிவியில் மெட்ச் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மூவரும் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள். "என்ன பார்க்குறீங்க? இப்ப என்னமோ வெளயாட்டு சிரிக்கட்டோ, கிரிக்கட்டோ வெளயாடுறாங்களே.... அதானா......?" என்றார். மகன்மார் சிரிசிரி என்று விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு "ஆமாம்.. பாட்டி அதே சிரிக்கட் தான். வாங்க பாப்போம்" என்றார்கள்.

"என்னமா வேர்க்குது! என்னா புழுக்கம் மகள், அந்த விசிறியப்போடுங்க... மூச்சே எடுக்க ஏலாம உஷ்ணமா காத்து...." சோபாவுக்கு அருகிலே ;டேபிள் பேனை வைத்து சுழலவிட்டேன். வசதியாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டு "மகள்..நா சொல்றத நல்லா கேட்டுக்கிங்க....ஏன்டமகன் வெளிநாடு போனது ஒரு சொந்தவீடு வாங்கவேனுமின்னுதானே? நீங்க இப்படி கட்டுசெட்டு



இல்லாம சாப்பாட்டு[...] செலவழிக்கிறது, டிவி-ரேடியோக்கு கரண்ட் செலவழியிறது எல்லாம் வீண் விரயம் தானே? இப்படி இருந்தா வரவுக்கும் செலவுக்கும் சரியா இருக்கும்.....!"

எனக்கு "திக்" கென்றது; யோசித்தேன். எங்கே? எப்படி வீண்விரயம்? "பிள்ளைகளுக்கு பால்-முட்டை, பழங்கள், மீன்-இறைச்சி இப்படி சாப்பிடக்கொடுக்காம எப்படி மாமி? இந்த வயதில போஷாக்கான சத்துள்ள உணவுகள் அவசிந்தானே மாமி. சும்மா வெறும் சோறு, ஏதோ கறி என்று வயிறு முட்ட சாப்பிட்டா போதுமா?" என்று கொஞ்சம் சூடாகவே கேட்டேன்.

வாரங்கள் மாதங்களாயின. கணவரிடமிருந்து கடிதம் வந்தது. பணம் வரவில்லை- கடிதமும் உறைப்பாகவே.... "வீண் செலவுகளை குறைத்து சிக்கனமாக இருக்கவும்!"

கடிதத்தின் சாராம்சம்....இது மாமியாரின் கைங்கரியம் தான். ஏதேதோ எழுதிவிட்டார். கணவரும் சிந்திக்காமல் பணமும் அனுப்பாமல் இப்படி எழுதிவிட்டார். மௌனமாகவே இருந்தேன். யாரிடம் சொல்ல-யாரை நியாயம் கேட்க-நடப்பது நடக்கட்டும். மறுநாள் மாமியார் வாசலில் திக்விஜயம் வந்ததும் "இந்தாங்க....பணம் செலவுக்கு. இனி மகன் எனக்குத்தான் பணம் அனுப்புவார் - நா தர்ரேன் ஒங்க செலவுக்கு......"

•••

அடிக்கடி பிள்ளைகளுக்கும் எனக்கும் திடீர்திடீர் என சுகயீனங்கள் ஏற்பட்டன. வைத்தியர் கூறினார்- மாமியாரும் பக்கத்தில...... "மருந்துகளுடன் இந்த விட்டமின்கள், டொனிக்குகள் வாங்கிக் கொடுங்கள். வளரும் பிள்ளைகளுக்கு போதிய போஷாக்கின்மையால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது. ஆரோக்கியமான எதிர்காலம் அவசியம் என்றால் பால், முட்டை, மீன்-பழங்கள் உணவுடன் கலந்திருத்தல் வேண்டும். தொடர்ந்து இவைகளை பாவியுங்கள். நோய் வந்தபின் வைத்தியம் செய்வதைவிட வருமுன் காப்பது மேலல்லவா?" என்று என்னவெல்லாமோ கூறினார். அமைதியாக காதில் வாங்கிக் கொண்ட மாமி "அப்படியே செய்யிறோம் டொக்டர்" என்று கூறி என் முகத்தை ஆழ்ந்து நோக்கினார்.

நான் மௌனமாக எழுந்து "தெங்யூ டாக்டர்" என்றவாறு கண்களில் கசிந்த நீரை மறைக்க முயன்று தோற்று திரும்பி மௌனமாக நடந்தேன். அடுத்தநாள் வைத்தியரின் வார்த்தைகள் காதிற்குள் ஒலித்துக் கொண்டிருக்க மாமி மீது எரிச்சல் எரிச்சலாக வந்தது. சமைத்து வைத்து விட்டு சாப்பிடமனமின்றி சோர்வுடன் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தேன். வாசலில் ஏதோ நிழலாடியது. காலடிச்சத்தம் வேறு. நிச்சயம் மாமிதான் கண்களை இறுகமூடிக் கொண்டேன்.

நெற்றியில் ஏதோ ஊர்வது போலிருக்க திடுக்கிட்டு விழித்தேன். ஆமாம் மாமிதான்-நடித்தேன்.

"மாமி.."

"என்னா, மகள் உடம்புக்கு முடியல்லியா?" பேசாதிருந்தேன்... "சரி...சரி... டாக்டர் சொன்ன- எழுதித்தந்த டொனிக், மருந்துகள் எல்லாம் வாங்கி வந்திருக்கேன். இனி பிள்ளைகளுக்கு நேரத்துக்கு டோனிக் கொடுத்து போஷாக்கான சாப்பாடும் சமைத்துக் கொடு. நான் ஒரு முட்டாள்... இன்னமும் அந்தக் காலத்திலே இருக்கேன். இந்தக் கால பிள்ளைகளுக்கும் நாம சின்னதில இருந்ததுக்கும் எவ்வளவோ வித்தியாசம்....ம். ஆமா எங்க வாண்டு பசங்க...? இன்னைக்கு இந்தியாவும் ஸ்ரீலங்காவும் சிரிக் கட்டோ.. கிரிக்கட்டோ வெளயாடுதாமே... எந்த பட்டனை தட்டினா டிவி போடலாம்......?"

நான் மலைத்துப் போய் நின்று கொண்டிருந்தேன்.

# அடையாள அட்டை

**ஜன்ஸி கபூர்- அநுராதபுரம்**

அன்று சனிக்கிழமை. பாடசாலை விடுமுறை தினம். மருத்துவ சான்றிதமுக்காக இறுதி மருத்துவ பரிசோதனையை மேற்கொள்வதற்காக- வைத்தியசாலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம். தந்போதைய சூழ்நிலையில் ஆஸ்பத்திரி வளவுக்குள் நுழைவதற்குள், 'நீலச் சட்டைக்காரர்களின்' விசாரணைக்கு முகங் கொணடுக்க வேண்டி வரும் 'பாஸ்' இல்லாவிட்டால் படு பயங்கரம். அதிலும் பிரச்சனைக்குரிய பகுதியிலிருந்து வந்த புதியவர்களென்றால் அப்பப்பா...!

பல சிந்தனைகள் மனதைக் கிழிக்க, மதிய வெயிலோ தேகத்தைத் தாக்க, வியர்வையில் குளித்தவாறு ஆஸ்பத்திரி வாசலை அடைகிறோம். கைக்கடிகார முட்கள் பன்னிரெண்டரைக்குள் தம்மை இனம் காட்டிக் கொண்டிருந்தன. ஏனோ வைத்திய பரிசோதனையை விட நீலச் சட்டைக்காரர்களின் தரிசனம்தான் மனதில் கிலியை விதைத்தது. 'மடியில் கனமில்லாவிட்டால் வழியில் பயமேது?' என்பார்கள். மடியில் கனமில்லைதான்- ஆனாலும் பயம்தான் கிலோக்கணக்கில் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண விலாசமிடப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டை கைக்குள் அப்பாவித்தனமாக விழித்தது.



"கோ ஐடென்ரீ கார்ட்?" அந்த நீலச் சட்டை விசாரித்தபோது ஐ.சி. என்கையிலிருந்து அவர் கைக்கு இடம் மாறியது. அடையாள அட்டையைப் பார்த்தபோது அவன் விழிகள் பிரகாசமடைந்தன. தன் சகாக்களுடன் ஏதோ கிசுகிசுத்து விட்டு மீண்டும் பார்த்தான். பார்வையில் சந்தேகம் இழையோடியபோது, உதறலெடுத்தது எனக்குள். கூடவே எரிச்சலும்தான். ஒரு மணிக்கு டாக்டரைச் சந்திக்க வேண்டும் அது புரியாமல் நேரம் வீண்டிக்கப்படுகிறதே எனும் ஆதங்கத்தில் வாட்ச்சைப் பார்த்தேன். அதன் முட்கள் சுதந்திரமாக ஒரு மணியை தொட்டு கொண்டிருந்தன.

தந்தையும் துணைக்கு வந்ததால் நிலைமையை புரிய வைத்தார். அரை மனதுடன் உள்ளே போக அனுமதி கிடைத்த போது கால்கள் சுதந்திரப் பறவையானது. விரைந்து உள்ளே நடந்த போது,

"சேர்.....சேர்"

எனும் குரல் நடையின் வேகத்தை கட்டுப்படுத்தியது. திரும்பியபோது மீண்டும் ஷொக். அந்த நீலச்சட்டை, "பெரியவர் உங்களை அழைத்து வரட்டாம்!" சிங்களத்தில் கூறியபோது மீண்டும் திரும்பினோம் வாசலை நோக்கி. 'சே.... இந்த அலைச்சல் மாதிரி என்ர வாழ்க்கையில் நான் அனுபவிக்கலையே' மனம் அலுத்தது. யாரை குற்றம் சொல்வது-விதியையா? யுத்தத்தையா? மனிதாபிமானம் மரத்துப் போன மனிதர்களையா? புரிய வில்லை.

மருத்துவ சான்றிதழ் படிவத்தை காட்டி நிலைமையை மீண்டும் புரிய வைத்த போது உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. கூடவே அவரின் மனிதாபிமான வார்த்தைகளும் வெளிவந்தன.

"சொறீ, உங்களுக்கு கரைச்சல் தந்திட்டம்." வேதனைப்பட்ட அம் மனிதருக்கு நன்றி கூறிவிட்டு, ஆஸ்பத்திரி அறைக்குள் நுழைந்தோம் நேரம் 1.15. மருத்துவ சான்றிதழைப் பெற என்னைப் போல பல இளம் அரசாங்க ஊழியர்கள் நிரம்பி வழிந்தார்கள். அவர்களிலிருந்து நான் தனிமைப்பட்டுப்போன உணர்வு- பிறப்பிடத்தால், பாஷையால்....

என் பெயரை அழைத்தார்களாம்- நான் போகவில்லையாம். அங்கிருந்த எனக்கறிமுகமான நட்புக் குயில் கிசுகிசுத்தது. அப்படியானால் கடைசியாகத்தான் எனக்கு டாக்டரின் தரிசனம் கிடைக்கும். மனம் விறைத்தது.

வீட்டுக்குச் சென்றதும் இந்த அடையாள அட்டைக்கு விடுமுறை கொடுத்துவிட்டு, தற்போதைய இருப்பிட அட்ரஸுக்கு 'ஒபிஸ் ஐடென்ரீ கார்ட்', ஒன்றை உடனடியாக எடுக்க வேணும்' மனதுக்குள் தீர்மானம் ஆணி அடித்தது. கூடவே, யுத்தத்தின் அகோரப் பிடியினால் அன்றாடம் அல்லல்படுகின்ற அப்பாவி நெஞ்சங்களுக்காக மனமும் கசிந்தது.

தருவது ரசிகன்

# உள்ளே ஒரு படை



நிலவு வெளிச்சம் நிறுத்தப்பட்டால் மதுரா மகிழ்வாள்.

நிலவு வெளிச்சம் மேலும் அதிகப் பட்டால் மாறன் மகிழ்வான்.

இருவரும் இருந்தது ஒரே இடத்தில், பட்டு மஞ்சத்தில்.

நினைப்பு மட்டும் வேறு வேறாக இருந்தது இருவரதும் சித்தத்தில்.

பட்டு மஞ்சம், அருகில் ஒரு அஞ்சுகம். மொத்த அழகையும் முழுதாகப் பார்த்துவிடத் துடித்தது காளையின் மனம்.

தொட்டிழுத்தான், மயில் தோகை சற்றே சரிய அஞ்சுகத்தின் நெஞ்சகத்தில் விழி தொலைத்தான்.

படையிலிட சம்மதம்தான். பாழாய் போன பால் நிலா இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கிறதே என்று பாவை நினைத்தாள்.

அந்திப் பொழுதோடு வானில் இருந்து நழுவிய செந்நிறம் இப்போது மதுராவின் வதனத்தில் வந்தமர்ந்து கொண்டது.

தோகையைத் தொட்டு சரிப்படுத்திக் கொண்டது கான மயில்.

இப்போது மாறனின் வதனம் சற்றே சுருங்கியது. விழிகளுக்கு வேதனை. உண்ணக் கிடைத்தது உடனேயே போனதே! வேதனை வரத்தானே செய்யும்.

நிலாவுக்கு தூக்கம் வந்து தொலைக் காதோ என்று மதுரா மனதுக்குள் தவித்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரம் சமாளித்துத்தான் பார்ப் போமே, நிலவு ஒய்வெடுக்கிறதா பார்க்கலாம்.

அதுவரை இவரை எப்படி சமாளித் துக் கொள்வது.

கரும்பு தோட்டத்திற்குள் புகுந்த மத யானையை கட்டிப்போட்டு வைத்திருப்பது எப்படி?

இருக்கவே இருக்கிறது ஊடல். பொழுதை நீடிக்க அதுதானே பொருத் தம்.

எங்கிருந்து தொடங்குவது?

மாற னுக்கு அந்த மாங்குயிலின் மன ஓட்டம் தெரியவில்லை.

"உண்ண அமுதுண்டு. உண்டு தீர்க்க ஒரு யுகப் பசியுமுண்டு. தேனுண்டு, திகட்டாத கள்ளுமுண்டு. தித்திக்கும் சுவையூட்டும் கனியுமுண்டு. எத்திக்கு சென்றாலும் காணக்கிடைக்காத களிப்பூட்டும் கான மயிலுமுண்டு. ஆனாலும், வாயிருந்தும் பசியோடு, கண் இருந்தும் கவலையோடு, கையிருந்தும் வாரியணைக்க வளம் கிடைக்காத வருதத்தோடு வாடியிருக்கிறேன் நான்."

என்றான் மாறன்.

கவனமாய் செவி கொடுத்து ஊட லுக்கு ஒரு காரணத்தைப் பிடித்துக் கொண்டாள் மதுரா.

"எப்படி.. எப்படி, எத்திக்கும் சென்றாலும் காணக்கிடைக்காத ...ஒஹோ புரிகிறது, புரிகிறது."

"என்ன புரிகிறது?"

"போகும் திக்கெல்லாம் போகம் தேடுகிறது உங்கள் பொல்லாத மனம் என்று."

எதிர்பாராமல் தேர் தடம் மாறியது. வடம் பிடித்தவன் வருந்திப் போனான்.

வெள்ளோட்டமாய் விட்டுப் பார்த்த புகழார வார்த்தைகள் பொறியில் அல்லவா சிக்கிக் கொண் டன. மனதுக்குள் புலம்பிக் கொண்டான்.

"நிலாப் பெண் நீ இருக்க, உலாப் போகும் இடமெல்லாம் எனக்குப் பெண் எதற்கு? ஆனால் ஒன்று, உலாப் போகும் இடமெங்கும் நான் கனாக் காண்பதுண்டு."

"வழியில் விழியில் பட்டவர்களெல்லாம் கனவில் தென்பட்டுக் கொண்டிருப் பார்களாக்கும்!!

"சொல்லி முடிக்க முன் னர் இந்த செம்பருத்தி ஏன் சினக்கிறது. கனவில் அழ காய் வந்து புன்னகைப் பூவை நீ வீசியெறிவாய்; நான் தூங் கிப் போவேன்."

"தூங்கவைக்குமளவுக்கு என் புன்னகை வெறுப்பா யிருக்கிறதோ உங்களுக்கு?"



"எந்தத் திசையில் இழுத்தாலும் தேர் நகராது போல் இருக்கிறதே!! மெல்ல முணு முணுத்தான்.

"என்ன முணுமுணுப்பு?"

"சுந்தரப் புன்னகை வெறுப்பேற்றுமே? விருப்பேற்றும். சுகமூட்டும். அந்த சுகமே நிம்மதியான தூக்கத்திற்கு நீர் வார்க்கும்."

"தூக்கம் என்ன மரமோ நீர் வார்க்க?"

"பட்டுவிட்டால்தான் மரம் படுத்துக் கொள்கிறது. மனிதனோ படுத்து விட்டால் மரமாகிவிடுகிறான்."

"அய்யய்யோ.. அய்யய்யோ..."

"என்ன.. என்ன..?"

பதறும் சாக்கில் தோள் தொட்டு அணைத்து பதம் பார்த்தான்.

"விடுங்கள்"

"நீதானே பதறினாய்."

"பதறவில்லை, சிலிர்த்துப் போனேன்!"

"இன்னமும் ஆரம்பிக்கவே இல்லயே!"

"பேச்சைப் பார்; நான் சிலிர்த்தது அகில உலக அறிவுக் கடலைப் பார்த்து."

"அப்படியென்கிறாய்!"

"ம்..ம்."

"கடலில் நதி கலப்பதுதானே முறை. நதியே வா, கடல் உன்னைக் குடிப்பதற்காக குதூகலித்திருக்கிறது."

"குடிப்பதற்கு முன்னரே குதூகலமா?"

"அறு சுவை உணவைக் கண்டால் நாவூறுவதில்லையா, அது மாதிரி என்று வைத்துக் கொள்ளேன்."

பேசிக் கொண்டே அவன் விழிகள் பாய்ந்த இடங்களில் எல்லாம் மதுராவுக்கு ஆசை அம்பெனத் தைத்துக் கொண்டிருந்தது.

பேசும் சாக்கில் மாறன் தொட்டமிட மெல்லாம், மறுபடி தொடப்படும் வரம் கேட்டுக் கொண்டிருந்தன.

"நதிக்கு சம்மதமா?" என்று கேட்டு இடையிலே கிள்ளினான் மாறன்.

"வலிக்கிறது" என்று சொல்லி பொய்க் கோபம் காட்டியதில் உதடும், முகமும் ஒத்துழைப்புக் கொடுத்தாலும், உள்ளமோ 'கிள்ளிய விரல்களை திருப்பி அள்ளிக் கொண்டாரே, அங்கேயே இருக்க விட்டால் என்னவாம்' என்று கேட்டுப் பார்த்துக் கொண்டது.

வெளிச்சம் இருக்கிறதே என்று முன் பிருந்த வெட்கத்தை ஊடல் நாடகம் விரட்டிக் கொண்டிருந்தது.

ஊடல் நாடகத்தால் மதயானையை கட்டிப் போட நினைத்தேன், இப்போது மதன யானையன்றோ என் மனதுக்குள் புகுந்து விட்டது.

வெண்ணிலா வெளிச்சம் கண்டு முதலில் வெட்கிநின்ற உள்ளத்தை உள்ளிருந்தே ஒரு படை வெற்றி கொள்கிறதே!

ஆசையைப் பூட்டிவைத்த கோட்டைக் கதவுகள் தெறித்து விழ, உள்ளிருந்து முன்னேறும் படை என் உள்ளத்தையும் உடைக்கத் தொடங்கிவிட்டதே.

அது என்ன படை?

ஊடல் அதிகமாக, அதிகமாக உள்ளே ஆசைக் கடல் பெருகத் தொடங்கி விடுகிறதே.

தழுவாமல் அவர் இருப்பார் என்று ஊடலை அரணாக்கி நான் தடுத்துக் கொண்டிருக்க, அந்த ஊடலுக்குள் ஒரு படை உருவாகி விடுகிறதே.

அதுதான் ஆசையென்னும் படையோ?!

மதுரா உலையானாள். தன்னை மறந்து மெல்ல அசைந்து, வெட்கம் உடைத்து மாறனின் தோளில் முகம் சரித்தாள்.

மார்பு துடித்ததும், மேனி நெருப்பாய் சுடுவதும், மூச்சுக் காற்று அனலாய் தோளில் பட்டுச் செல்வதும், முதுகை வருடிய அவளின் விரல்கள் படபடப் பதும், கொத்து மலர் சரம் தன்னை சூடிக்கொள்ள விடுக்கும் அழைப்பென்று புரிந்தது மாறனுக்கு.

என்றுமில்லாத வேகம் இன்று எப்படி? வழக்கமாய் தடுக்கும் வெட்கம் ஒரு ஓரமாய் ஒதுங்கியது எப்படி?

வியப்புத்தான் மாறனுக்கு. வியந்து கொண்டேயிருந்தால் விடிந்து விடுமே!.

மாறன் விபரம் தெரிந்தவன். அதனால் நாம் இப்போது அவர்களை விட்டு ஒதுங்கிக் கொள்வதே நாகரீகம். ஊடலுக்குள் உள்ள படையை திருவள்ளுவரும் நமக்கு அடையாளம் காட்டி யிருக்கிறார். நாம் இப்போது திருவள்ளு வரிடம் செல்லலாம்.

**"புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென் உள்ளம் உடைக்கும் படை."**

அதிகாரம் - 133, குறள்; 1324

## குறுக்கெழுத்துப் போட்டி இல—131

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | 4 | |
| | ■ | 5 | | | | ■ |
| 6 | | | | ■ | | ■ |
| | ■ | 7 | | | | |
| | 8 | ■ | ■ | 9 | | ■ |
| ■ | 10 | | | | ■ | 11 |
| 12 | | | ■ | 13 | | |

### இடமிருந்து வலம்

01. இது குளிர் காலமாதலால் இதனை அணுகி ஆனந்தமடைய எவரும் விரும்ப மாட்டார்கள்.
03. நம் நாட்டில் நடைபெறும் இன மோதல் களினால் விளைந்ததெல்லாம் இதுதான்.
05. எத்துறையிலும் திறமையைக் காட்டு வோர் நிச்சயம் இதனை எதிர்பாாக்கலாம்.
06. எக்காரியத்தையும் இத்துடன் முடித்தால் வெற்றி பெறலாம்.
07. சுத்தம் செய்ய உதவும்.
10. ......முடிவதற்குச் சில நாட்களே உள்ளன.
12. நமது அங்கங்களில் இது விழும் இடத்திற்கு உரிய பலன் கணிப் பார்கள்.
13. ஒவ்வொரு வருடமும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு மக்களைப் பயமுறுத்துகிறது.

### மேலிருந்து கீழ்

01. சிலருக்கு இது இன்றும் ஒரு பொழுது போக்கு.
02. நெடுஞ்சாலைகளில் இப்பொழுது மலிந்து விட்டது.
04. இளசுகள் சேர்ந்தால் இதற்கு அளவே இருக்காது.
08. திருடர் பயமிருந்தால் இதற்காக நாய் வளர்ப்பார்கள்.
09. பெயர் கேட்டாலே படையும் நடுங்கும்.
11. இந்த ஆயுதத்தை வணங்குவர் சைவர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 23.12.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-131
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-129ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மு | ள் | ■ | 2 ம | ச் | 3 சா | ன் |
| 4 கூ | ந் | த | ல் | ■ | த | ■ |
| ர் | ■ | 6 க | லி | யு | க | ம் |
| த் | ■ | வ | கை | ■ | ம் | ■ |
| 7 த | 8 வி' | ல் | ■ | 9 ர | ■ | 10 தீ |
| ம் | த | ■ | 11 வா | ச | க | ர் |
| ■ | 12 வை | ய | க | ம் | ■ | வு |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 129இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. பி. உதயசங்கர், மட்டக்களப்பு.
2. செல்வி. சசிந்தா சதாசிவம், எல்கடுவ.
3. சி. ஸக்காரியா, அநுராதபுரம்.
4. எம். மதியழகன், கொழும்பு-06.
5. திருமதி. ஜெஸ்மின் பைசர், காரைதீவு.
6. எம். லாபீர், புத்தளம்.
7. எஸ். வில்லியம், கலஹா.
8. திருமதி. டி. மகாலக்ஷ்மி, வவுனியா.
9. ஆர். நுஸ்ரத் பேகம், அக்குறணை.
10. கே.சிவரூபன், உடப்புசல்லாவ.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! பணம் வந்துவிட்டால் சிலருக்கு இருப்பே கொள்வதில்லையே. அவர்களைப் பற்றி ஒரு நாலு வார்த்தை சொல்லுங்கள்?**

சி. மனோன்மணி, களுவாஞ்சிக்குடி.

*நான் என்ன சொல்வது, கவியரசு கண்ணதாசனே சொல்லியிருக்கிறார் கேளுங்கள: குளிக்கும் அறைக்குள் மெதுவாகச் செல்லவில்லையானால் வழுக்கி விழுந்து சாவாய். வசதியாக இருக்கும்போது ஜாக்கிரதையாக வாழவில்லையானால் கடனில் மூழ்கி அழிவாய்."*

□□

**★ வாழ்க்கை என்றால் ஆயிரமிருக்கும் என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றைச் சொல்லுங்களேன்..?**

எம். ஜெயமோகன், கண்டி

*'வாழ்க்கை என்ற புத்தகம் ஒரு தோட்டத்தில் உள்ள ஒரு ஆண் ஒரு பெண்ணிடமிருந்து ஆரம்பமாகிறது.' இதைச் சொன்னது ஒஸ்கார் வையில்ட் என்னும் அறிஞர்.*

□□

**★ சமீபத்தில் வெளியாகியுள்ள திரைப் படங்களில் உமக்கு திருப்தி தந்த படம் எது?**

எல். முகமட், அக்குறணை.

*திருப்தி தந்ததோ இல்லையோ, வயிறு வலிக்கச் சிரிக்கவைத்தது 'மாமன் மகள்'.*

□□

**★ வடபுலப் போரில் அரசாங்கம் பெற்றுள்ள வெற்றியைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

சா. அல்போன்ஸ், கொழும்பு-06.

*இருபக்கமும் கூர் உள்ள கத்தி.*

□□

**★ ஒரு பெண்ணை மனப்பூர்வமாக காதலிக்கும் காதலன் அப் பெண்ணிடம் எதிர்பார்க்கும் விடயங்களைக் கூற முடியுமா?**

எஸ். சசிகுமார், திருக்கோவில்.

*தனது காதலியின் வசதி வாய்புக்கேற்ப எதிர்பார்க்கும் சமாச்சாரமுங்கோ அதெல்லாம். சொல்ல வெட்கமாயிருக்குதுங்களே!*

□□

**★ டியர் சிந்தியா! நான் அரசியலுக்கு செல்ல விரும்புகிறேன். அதற்கான தகுதிகள் என்னவென்று கூறுவீர்களா?**

செல்வி-சு. துளசிமணி, அப்புத்தளை.

*இந்தக் காலத்திலும் அரசியலுக்கு செல்ல தகுதி தேடும் ஒரே ஆள் நீர்தான். செல்வி, நீர் என்ன புரட்சித் தலைவியா?*

□□

**★ சிந்தியா! உங்களுக்குப் பிடித்த திருக் குறள் எது?**

கிண்ணியா-கவிராசன்.

*அப்பா கவிராசா! (நீரே வைத்துக் கொண்ட முடியோ?) என் சிற்றறிவுக்கு எட்டியவரை திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் மட்டும்தான் இருக்கிறது. அதிலே காலத்திற்கு ஒவ்வாதவை தவிர அனைத்தும் பிடிக்குமப்பா.*

□□

**★ மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாத விஷயம் எது?**

ஏ.சி.எம். முஸம்பில், குளியாப்பிட்டிய.

*அதன் பெயர்தான் அந்தரங்கம்.*

□□

**★ தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய நிலை?**

எம்.ஜே.ஷாஹீன்நிஷா, எருக்கலம்பிட்டி.

*வடபுலப் போரில் எற்பட்ட பின்னடைவை எப்படிச் சரிக்கட்டலாம் என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். கிழக்கில் ஒன்றரைக் கண்.*

□□

**★ தமிழ் கட்சிகள் போர் நிறுத்தம் கேட்டிருக்கிறார்கள். அரசு மறுத்தால் என்ன செய்யப் போகிறார்கள்?**

ஏ.சிறீதரன், கல்முனை.


*மறுத்தாச்! ஒன்றும் பண்ணமுடியாது என்று கேட்டவர்களுக்கும் தெரியும். கேட்கப்பட்டவர்களுக்கும் தெரியும். முடியாது என்று தெரிந்தும் கேட்பது, கேட்டோம் என்று உங்களுக்கு சொல்லிக்கொண்டிருக் கத்தானே.*

□□

**★ என் காதலி என் கண்முன்னால் வருவதற்கு தயங்குகிறாள், என்ன செய்வது?**

இ. திலீப்குமார், அக்கரைப்பற்று -07

*எதற்கும் உமது முகத்தை ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளவும்.*



**★ பாராளுமன்றத்தில் கூட்டணி பா. உக்கள் துணிச்சலாக எதிர்த்து வாக் களித்திருக்கிறார்களே. பாராட்டக் கூடாதா?**

ஆ. உருத்திரகுமார், மட்டக்களப்பு.

*மெய் சிலிர்த்துவிட்டது. அமைச்சர் ரத்வத்தை தனது பதிலுரையில் கூட்டணி பா. உக்களுக்கு புத்தி சொன்ன போது, ஒரு புன்னகையாடு கேட்டுக் கொண்டிருந்த பொறுமைக்கு ஈடுண்டோ.... இணைதான் உண்டோ?*

□□

**★ மரியாதைக் குறைவாக நடப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

வி.சக்தியேசன், நீர்கொழும்பு

*மரியாதைக்கு விலை இல்லை. ஆனால் அது எல்லாவற்றையும் விலைக்கு வாங்கி விடும் என்று திருமதி மெண்டேகு என்னும் அறிஞி சொல்லியிருக்கிறார். அதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல் லுங்கள்.*

# இராமாயணம் அங்கம் 11

## மணவிழாக் கோலம் பூண்ட மிதிலை மாநகரம்

இராம பிரானின் பாராக்கிரமத்தால் ஒடிந்து வீழ்ந்த சிவதனுசு என்ற பெயருடைய வில்லானது மிகப் பூர்வீகமானது. தேவ தச்சனாகிய விஸ்வகர்மாவினால் இருவில்கள் முன்பு அமைக்கப்பட்டன. அதில் ஒன்று சிவபெருமானிடமும் மற்றொன்று மகா விஷ்ணுவிடமும் போய்ச்சேர்ந்தன.

விரிசடைக் கடவுளான சிவபெருமான் திரிபுரத்தை அழிப்பதற்காக தன்னிடமிருந்த வில்லினைப் பயன்படுத்தினார். அப்பணி முடிந்ததும் சனக மன்னனின் மூதாதையரில் ஒருவரான தேவராதனிடம் அந்த வில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மிதிலை மாநகரில் உள்ள தனிச்சிறப்பு வாய்ந்ததோர் மாளிகையில் அச் சிவதனுசு ஓர் இரும்புப் பேழையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தது. சனகன் மிதிலாபுரி மன்னனானதும் அந்த வில்லினைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரிடம் வந்து சேர்ந்தது.

வேள்விக்காக நிலத்தை உழும்போது கிடைத்த ஒரு பெண் குழந்தையை தன்சொந்த மகள் போல வளர்த்துவந்தார் சனக மன்னன். தேவாம்சம் பொருந்திய அக் குழந்தை உரிய பருவம் அடைந்ததும், சிவதனுசான அந்தத் தெய்வீக வில்லினை வளைத்து நாணேற்றும் சக்தி படைத்த ஒருவனுக்கே தன் மகளான சீதையை மணம் முடித்து வைப்பதேன அறிவித்திருந்தார். ஈடிணையற்ற அழகியான சீதையை அடையவும் மிதிலை மாநகரின் சிம்மாசனத்தில் அமர்ந்து அந்நாட்டின் அரசுரிமையை அபகரிக்கவும் பல நாட்டு மன்னர்களும் வந்து அந்த மாபெரும் வில்லினைத் தீண்டக் கூடத் திராணியற்றுத் திரும்பிவிட்டார்கள். தான் எடுத்த தவறான முடிவினால் தன் புதல்வி வாழ்நாள் முழுவதும் கன்னியாகக் காலங் கழிக்க நேர்ந்துவிடுமோ என்ற ஏக்கம் சனக மன்னனிடம் ஏற்பட்டுவிட்டது. கலங்கி னார்; தன்னையே நொந்து கொண்டார்.

சனகர் இவ்வாறு மனமுடைந்து போயிருந்த காலகட்டத்தில் தான் விசுவாமித்திர மாமுனிவருடன் இராமனும் இலக்குவனும் வந்து சேர்ந்தார்கள், அவர்கள் மிதிலை நகரை வந்தடைந்ததும் இராமனை முதன் முதலில் கண்ட சனகருடைய உள்ளம் இனம் தெரியாததோர் உணர்வினைப் பெற்றது. அத்துடன் சகல அம்சங்களும் பொருந்திய அந்த இளைஞன், தன்னுடைய பால்ய நண்பரான தசரதச் சக்கரவர்த்தியின் குமாரன் என்பதனை அறிந்ததும், பன்மடங்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் பெற்றார். அதுமட்டுமல்லாமல் 'இந்த இளைஞன் மட்டும் சிவதனுசுவை வெற்றிகரமாக நாணேற்றிவிடுவானானால் அதைவிட எனக்கு மகிழ்ச்சிதரக் கூடியது வேறு எதுவுமேயில்லை. என் மகள் சீதைக்கு ஏற்ற கணவன் இந்த இராமனே' என்று அவருடைய உள்ளத்தில் எண்ண அலைகள் எழுந்தன.

**இராஜகுமாரன்**

### மன்னரும் மகிழ்ந்தார் முனிவரும் மகிழ்ந்தார்

அரசவையில் இராமன் வில்லினை எடுத்து நாணேற்றும்போது அவ்வில் ஒடிந்து வீழ்ந்ததைக் கண்ட சனகர் மனம் பூரித்து, தனது வேண்டுதல்கள் யாவும் உரிய பலனைத் தந்து விட்டதனை உணர்ந்தார். உவகை மேலீட்டால், விசுவாமித்திர மாமுனிவரை நோக்கி கண்களால் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

முனிவரும் தன்னுடைய கடமைகளில் மிக முக்கியமானதொரு கட்டம் நிறைவேறுகிறதே என்று எண்ணி மகிழ்ந்தார். இராமனைத் தன்னருகே அழைத்து அரவணைத்துஉச்சி மோந்தார்.

இராமர் சிவதனுசினை வளைத்ததைக் காண சீதை அவைக்கு வந்திருக்கவில்லை. இராமனை மிதிலையின் இராஜபாட்டையில் கண்டது முதல் அவள் தன்வசமிழந்திருந்தாள். தன்னுடைய அன்றாடக் கடமைகளையே மறந்திருந்தாள். ஊன் உறக்கம் மறந்து, உற்சாகமிழந்து தனிமையில் வாடினாள். தோழியரின் ஆடல் பாடல்களிலோ, வேடிக்கை விநோதங்களிலோ சீதைக்கு நாட்டம் செல்ல வில்லை. மலர்களைப் பரப்பியிருந்த படுக்கையே முள் படுக்கையாக அவளைக் குத்தி வதைத்தது.

சீதை அவைக்குச் செல்லாவிட்டாலும் வில் வளைப்பதை வேடிக்கை பார்க்க அவளுடைய தோழிகள் பலர் சென்றிருந்தனர். அவர்களில் ஒருத்தி நீலமாலை. இரு நாட்களுக்கு முன்னர் அந்தப்புரத்து உப்பரிகையில் சீதையுடன் நின்று, இராமபிரான் முனிவரோடும் தம்பி இலக்குவனோடும் இராஜபாட்டையில் வருவதை நீலமாலையும் கண்டவள். தன் தலைவியாகிய சீதையின் கண்வழி புகுந்து கருத்தினைக் கலக்கி காதெலனும் துன்பக் கடலில் ஆழ்த்திவிட்ட அதே இளைஞனே வில்லை முறித்தெறிந்தான் என்ற சேதியை சீதைக்குச் சொல்ல பாய்ந்தோடினாள்.

தன்னுள்ளத்துள் குடிபுகுந்து விட்டவனே வில்லினை உடைத் தெறிந்தான் என்பதை தன்தோழி நீலமாலையின் வாயிலாகக் கேட்டறிந்த சீதையின் உள்ளத்தில் விபரிக்க முடியாத புத்துணர்ச்சி பாய்ந்தது. படுக்கையை விட்டுப்பாய்ந் தெழுந்தாள். "சிவதனுசினை உடைத்தது யார்....யார்...?" எனப் பல முறை கேட்டு ஐயம் நீங்கப் பெற்றாள்.

### வில்லினை ஒடித்த வீரன் அவனே!

அன்று தான் கண்ட அதே இளைஞன் தான் வில்லினை உடைத்தான் என்பதனை உணர்ந்து கொண்டாள்.

இதனால் சீதையின் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தினை கம்ப நாட்டாழ்வார் வர்ணிக்கும் முறையினைப் பார்ப்போம்:

**இல்லையே நுசும்பு என்பார்,**
**உண்டு, உண்டு என்னவும்**
**மெல்லியல் முலைகளும்**
**விம்ம விம்முவாள்;**
**'சொல்லிய குறியின், அத்**
**தோன்றலே அவன்,**
**அல்லனேல் இறப்பென்' என்று**
**அகத்துள் உன்னினாள்.**

(பாலகாண்டம்- 728)

பொருள்:

*தோழி ஓடோடி வந்து – வில்லினை உடைத்தவன் தான், நேரில் கண்டு காமத் தீயினை மூட்டியவன் என்பதனைக் கூறக் கேட்ட சீதையின் உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் பெரு மாற்றங்கள் தோன்றுகின்றன.*

*அழகிய பெண்களுக்கு இடை மிகவும் சிறுத்திருக்கும். சீதைக்கு இடையே (நுசும்பு) இல்லையே என்று கூறுவார்கள். ஆனால் இன்று இடை இருக்கிறது என்று கூறுவதற்கேற்றாற்போல் தெரிகிறது. அவளுடைய மார்பகங்களும் விம்மிப் பெருக்கின்றன. உடலின் ஏனைய அங்கங்களும் பூரிக்கின்றன. தோழி குறிப்பிட்டது போல "வில்லினை ஒடித்தவீரன் தன்னுடைய உள்ளத்தில் குடிபுகுந்திருப்பவன் அல்லவென்றால் இறந்து விடுவேன்" என்று உறுதி பூணுகிறாள்.*

***

இராமனுக்கு சீதையே மணமகள் என்பது நிச்சயமாகிவிட்டது. எல்லோருடைய உள்ளங்களும் பூரித்துவிட்டன. எவரும் எக்குறையும் காணமுடியாது. இதில் மாறுபட்ட கருத்தினைக் கூற எவருமே இல்லை.

விசுவாமித்திரரை அணுகிய சனக மாமன்னன் இராம-சீதை திருமணத் துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய ஆலோசனைகளைக் கேட்டார். மணமகனின் தந்தையான தசரதச்சக்கரவர்த்தியையும் பரிவாரங்களையும் அழைத்துவர மிக வேகமாகச் செல்லக் கூடிய ஒரு குழுவினரை ஏற்பாடு செய்து முறையான வரிசைகளுடன் சனக மன்னன் அனுப்பி வைத்தார். தனது சீடர்களில் சிலரையும் விசுவாமித்திரர் அத்தூதுக் குழுவில் இணைத்து, தனது தனிப்பட்ட அழைப்பினையும் தசரதருக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் மிதிலை மாநகரமே விழாக் கோலம் பூணலாயிற்று.

மூன்று தினங்களில் மிதிலைமன்னரின் தூதுவர்கள் தசரத மாமன்னர் முன் நின்றனர். மிதிலையில் நடைபெற்ற சகல சம்பவங்களையும் எடுத்துரைத்து மன்னர் அனுப்பிய பரிசுப் பொருட்களையும் அழைப் போலையையும் தசரதரிடம் கொடுத்தனர்.

'அசுரர்களை அழிக்கவென்று அரசிளங் குமாரர்களை மாமுனிவர் அழைத்தச் சென்றார். நாம் பயந்து பயந்துதான் புத்திரர்களை அனுப்பி வைத்தோம். ஆனால் மங்களகரமான செய்தியல்லாவா வந்திருக்கிறது!' என்று தசரத மன்னர் பூரித்தார். மகனின் மணவினைகாண மிதிலை செல்வதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்யுமாறு அமைச்சர்களுக்கு கட்டளையிட்டார்.



### உபேந்திரன் மகன் லலிதகுமாரன்

தன்னருகிலே நின்றிருந்த தன் மெய்காப்பாளனான உபேந்திரனை மன்னர் உற்றுப் பார்த்தார். "உபேந்திரா! இராமனை நான் இன்னும் சிறுவனாகவே எண்ணியிருக்கிறேன். அவன் திருமண வயதை எட்டியிருப்பான் என்று எண்ணவேயில்லை. என் பால்ய நண்பரான சனக மாமன்னனின் மகளை என் இராமனுக்கு மணம் முடித்து வைக்க ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். இத்தகவலை வசிட்ட மாமுனிவரிடம் கூறிவிட்டு நீயும் பயணத்துக்கு ஆயத்தம் செய். ஆமாம்! உன் மகன் லலிதகுமாரனையும் உன்னுடன் அழைத்து வர மறந்து விடாதே!" என்றார்.

தசரத குமாரர்கள் பிறந்து பன்னிரண்டாவது நாளன்று மன்னரின் மெய்காப்பாளனாகிய உபேந்திரனுக்கும் புத்திரன் பிறந்ததை முன்னர் அறிந்திருந்தோம். அவனுக்கு லலிதகுமாரன் என்று பெயரிட்டு, தன்னைப் போல் சிறந்த வீரனாக வளர்த்து வந்தான் உபேந்திரன், நற்கலைகளிலும் அவன் சிறந்து விளங்கினான். தனது தந்தை- மன்னருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததுபோல், லலிதகுமாரனுக்கும் இளவரசர்கள் நால்வருடனும் நட்புரிமையுடன் பழகும் வாய்ப்புக்கிடைத்திருந்தது. சிறப்பாக, பரதனுடன் தான் லலிதகுமாரனுக்கு நெருக்கம் அதிகமாக விருந்தது. இதனை மன்னரும் அவ்வப்போது அவதானித்திருந்தார். மிதிலை செல்லும் குழுவினருடன் லலிதகுமாரனையும் அழைத்துக் கொண்டு வரும்படி கூறியதிலும் ஒரு காரணம் இருப்பதாக உபேந்திரன் கணித்துக்கொண்டான்.

தசரதச் சக்கரவர்த்தி சகல மந்திரி பிரதானிகளுடன் நால்வகைச் சேனைகளும் புடைசூழ மிதிலை நோக்கிப் புறப்பட்டார். மிதிலை மன்னர் சனகனுக்கும், தன் மருமகளாக வரப் போகும் சீதைக்கும் எண்ணிறந்த- விலைமதிப்புக்கு அப்பாற்பட்ட வெகுமதிகளையும் தன்னுடன் கொண்டு சென்றார்.

***

*தசரச் சக்கரவர்த்தி தனது பரிவாரங்களுடன் மிதிலை நோக்கிச் செல்கின்ற காட்சியினை கவிச்சக்கரவர்த்தி கம்பன் மொத்தம் எண்பத்திரண்டு பாடல்களின் மூலம் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இப்படலம் 'எழுச்சிப் படலம்' எனப் பெயர் பெறுகிறது. அயோத்தியை விட்டு நீங்கிய சக்கரவர்த்தியும் குழுவினரும் மிதிலை சென்றடைவதற்குள் உள்ள இடைவெளியினை ஏறத்தாழ 300 பாக்களில் கம்பநாட்டாழ்வார் விரிவு படுத்தியுள்ளார். இதற்காக ஏழு தனிப்படலங்களை கவிஞர் ஒதுக்கியிருக்கிறார். இயற்கை வனப்பு, இள உள்ளங்களின் இன்பக் கிளர்ச்சிகள், நால் வகைச் சேனைகளின் நடவடிக்கைகள், படையினர் உண்டு மகிழ்தல் போன்ற காட்சிகளை இவ்வளவு தெளிவாக வேறு எக்கவிஞரும் வர்ணித்திருப்பார்களோ என்று எண்ண முடியாதிருக்கிறது.*

*மன்னருடன் சென்ற இளம் உள்ளங்களின் இன்ப உணர்வினை கம்பர் எடுத்துக் காட்டும் அழகினை நமது வாசகர்களுக்கு உணர்த்தும் பொருட்டு உபேந்திரனின் மகனான லலிதகுமாரனை இங்கு அழைத்து வருகிறோம்.*

***

இளமையிலிருந்தே தன் தந்தை உபேந்திரனிடமிருந்து உடற்பயிற்சியுடன் சகல வீரவிளையாட்டுக்களையும் லலிதகுமாரன் கற்றறிந்தான். உருக்கினாலானதோ என்று ஐயுறும் வண்ணம் அவனுடைய அங்கங்கள் முறுக்கேறியிருந்தன. கட்டிளங் காளையான அவன் மிதிலை செல்லும் குழுவில் ஒரு பிரிவின் காவலனாகச் சென்று கொண்டிருந்தான்.

அவன் முன்னே தாமரைக்குளம் ஒன்று நகர்ந்து செல்வது போல் ஒரு வண்டியில் அழகிய- தாமரைபோன்ற முகங்களை உடைய பெண்கள் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தியின் கண்களுடன் லலிதகுமாரனின் கண்களும் முட்டி மோதிக் கொண்டன.

***

**பாண்டிலின் வைத்த ஓர் பாவைதன்னொடும்**
**ஈண்டிய அன்பினொடு ஏகுவான், இடைக்**
**காண்டலும், நோக்கிய கடைக்கண் அஞ்சனம்,**
**ஆண்தகைக்கு இனியது ஓர் அமுதம் ஆயதே!**

(பாலகாண்டம்-756)

பொருள்:

***வண்டியில் சென்று கொண்டிருந்த அழகிய பெண்களில் ஒருத்தி, வண்டியை ஓட்டி வந்து கொண்டிருந்த ஒரு வீரனை, தன்னுடைய அஞ்சன மை பூசிய கடைக் கண்ணால் பார்க்கிறாள்.***

***அக்கண் மையானது அந்த வீரனுக்கு இனிமையான அமுதமாகியது.***

***

லலிதகுமாரன், அவன் முன் சென்ற வண்டியிலிருந்த பூமாலை என்ற அழகிய இளங்குமரியின் விழிகளுள் புகுந்து அவள் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டாள். அதே போல் தாமரை ஒத்த முகத்தை உடைய அத் தையலாள் லலிதகுமாரனின் உள்ளத்தில் கொலுவேறிக் கொண்டாள்.

### மிதிலையில் தசரதர்.

பல நாட்கள் பயணம் செய்து இடையில் சில இடங்களில் தங்கி இறுதியில் மிதிலையை வந்தடைந்த தசரதச் சக்கரவர்த்திக்கும் பரிவாரங்களுக்கும் மிதிலை மாநகர் எல்லையிலேயே மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. மன்னர் குழுவில் பரதனும் சத்துருக்கனும் கூடவே சென்றனர். வருபவர்களை வரவேற்க சனக மன்னனும் தனது பரிவாரங்களுடன் வந்திருந்தார். கூடவே இராமனும் இலக்குவனும் தமது தந்தையை வரவேற்க வந்தனர். தசரத மன்னரும் சனக மன்னரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் ஆலிங்கனம் செய்து கொண்டனர். இராமரும் இலக்குவனும் தந்தையின் அடியில் அட்டாங்கமாக விழுந்து எழுந்தனர். வசிட்ட மாமுனிவரும் தனியான பொற்சிவிகையில் வந்திறங்கினார். அவருடைய பாதகமலங்களுக்கும் அரச குமாரர்கள் அஞ்சலி செலுத்தி ஆசி பெற்றனர். சகோதரர்கள் நால்வரும் நீண்ட இடைவெளிக்குப் பின் ஒன்று கூடினர்.

***

இராமன் சிவதனுசினை வளைத்து ஒடித்த அன்றிலிருந்தே மிதிலை விழாக் கோலம் பூண்டு விட்டது. தசரதச்சக்கரவர்த்தியும் பரிவாரங்களும் மிதிலை மாநகர் வந்து சேர்ந்ததும் அந்நகரின் கோலம் மேலும் சிறப்புற்று விளங்கியது.

அடுத்த நாட் காலையில் அரசவையில் தசரத மாமன்னருக்கும் பரிவாரங்களுக்கும் அரச முறையிலான வரவேற்புபசாரம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அரண்மனையிலுள்ள சிறப்பானதொரு மண்டபத்தில் மன்னர்கள், மந்திரிகள் முதலானோருடன் இரு அரச குடும்பத்தினரும் விசுவாமித்திர மகரிஷி, வசிட்டமாமுனிவர் மற்றும் சதானந்த முனிவர் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். முறைப்படி சீதா-இராம திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாயின. நிச்சயதார்த்தம் போன்ற வைதீகச் சடங்குகளும் இடம் பெற்றன. இராமனையும் சீதையையும் அழைத்து ஒருவரை ஒருவர் பார்த்து தங்கள் சம்மதத்தையும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

### ஒரே மேடையில் நான்கு திருமணங்கள்

சனகரின் தம்பி குசத்துவசன் இட்சுமதி நதிபாயும் சாங்காசியம் என்ற நாட்டின் அரசனாக இருந்தார் அவரும் தனது மகாராணியுடனும் இருமகள்களுடனும் மிதிலை வந்திருந்தார். சனக மன்னனும் தசரதரும் விசுவமித்திர மாமுனிவரையும் தத்தமது குலகுருக்களான சதானந்த முனிவர், வசிட்ட மாமுனிவர் ஆகியோரையும் கலந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

சனகமாமன்னனுக்கு தெய்வப் பிரசாதமாகக் கிடைத்தவளே சீதை. தவிர ஊர்மிளை என்றொரு சொந்த மகளும் அவருக்கிருக்கிறாள். இளையவனான இலக்குவனுக்கு ஊர்மிளையை மணம் முடிப்பதென்றும் முடிவானது. விசுவாமித்திரரும் வசிட்டரும் சதானந்தருடன் கலந்தாலோசித்து சனகரின் தம்பி குசத்துவசன் புத்திரிகளான மாண்டவியை பரதனுக்கும் சுருதகீர்த்தியை சத்துருக்கனுக்கும் மணம் முடித்துவைக்க முடிவு செய்தனர். தசரதகுமாரர்களான நால்வருக்கும் ஒரே நாளில் ஒரே திதியில் திருமணம் நடத்துவதற்கு முடிவாயிற்று.

மூன்று முனிசிரேட்டர்களும் அவர் தம் சீடர்களும் மணமேடையை முறைப்படி அமைத்தனர். வேத விதிப்படி சகல கருமங்களும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாயின. மக நடசத்திரத்தில் திருமணத்துக்கான நிச்சயதார்த்தம் நடைபெற்று மூன்றாவது நாளான பங்குனி உத்திர நடசத்திரத்தன்று திருமணம் நடைபெற ஆயத்தங்கள் நடைபெற்றன.

இராமன்,இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோர் சர்வ அலங்காரங்களுடன் மண மேடைக்கு வந்து சேர்ந்தனர். இதே போல் சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி ஆகியோர் பட்டாடைகளை உடுத்தி நவரத்தினங்கள் பதித்த ஆபரணங்களைப் பூண்டவர்களாக மேடை மீது வந்தமர்ந்தனர். வேத மந்திரங்களின் ஒலியுடன் ஓமகுண்டங்களிலிருந்து எழும் புகையும் ஒன்றிணைந்து விண்ணிலும் மண்ணிலும் பரவ-முதலில் இராமன் மணமாலையை சிதாபிராட்டியின் கழத்திலே சூடினான். தொடர்ந்து ஏனைய மூன்று அரச குமாரர்களும் அரசிளம் குமரிகளின் கழுத்தில் மாலைகளைச் சூடினர்.

பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனும் திருமகளும் இடையில் சிலகாலம் பிரிந்திருந்து, பூமியில் மீண்டும் ஒன்றாகி நின்ற காட்சி கண்டு தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

**(தொடர்ந்து வரும்)**

---

## இராமாயணப் போட்டி இல—09

### பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** *கவுதம மாமுனிவர்*

1. **செல்வன். சே.மணிசேகரன்.** சப்ளி ஜனபத்தய, பாரதெக்க.
2. **ந. ரஜித்தா.** ஹமிஸ் பிளேஸ், குடாப்பாடு, நீர் கொழும்பு.
3. **எம்.கே.குமாரவேல் இலங்கேஸ்வரி.** பிளக் போறட், புசல்லாவ.
4. **செல்வன்.ஆர்.சேகர்.** மாவிலை எஸ்டேட், உலப்பனை.
5. **சிஹ்னாஸ் இஸ்மத்.** இல. 228 கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளம்.

---

## இராமாயணப் போட்டி 11

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனு ப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- *சனக மன்னனின் மற்றொரு மகளின் பெயர் என்ன?***

டிசம்பர் 23ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

*இராமாயணப் போட்டி இல:11.*
*தினமுரசு வாரமலர்*
*த.பெ. இல— 1772*
*கொழும்பு.*

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
433631
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

## நலவிசாரிப்பு



இது மனிதம் பாதி மிருகம் பாதிக் காதல். (முழு மனிதக் காதலல்ல) காதல் என்பது நேசித்தல் என்றும் அர்த்தம். மனிதரை மனிதர் நேசிக்க முடியாதளவுக்கு வஞ்சகமும், சூதும் தலைவிரித் தாடும் போது, மிருகங்களை நேசிப்பதே சிறந்தது என்று மெல்லிய மனதுக்காரர் பலர் முடிவு செய்து விடுகின்றனர். குறிப்பாக வெளிநாடுகளில் மிருகாபிமானம் பெருகிவருகிறது.

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

## திருவது. வீயோடெ

## மனைவி சொல்லே மந்திரம்

அமெரிக்காவில் வாரிசுகள் அரசியலுக்குள் வந்து ஆட்சியைப் பிடிப்பது நடக்காமல் இருக்கலாம். ஆனால், அதிபர்களின் மனைவிகளுக்கு என்று ஒரு தனிமரியாதை கிடைக்கத்தான் செய்கிறது.

கென்னடியின் மனைவி ஜாக்குலினுக்குப் பின்னர், அமெரிக்க ஜனாதிபதிகளின் மனைவிகள் பட்டியலில் அதிகபிரபலம் கிளாரிதான்.


எல்லோருமே தன்னைக் கவனிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு தனது தோற்றத்திலும் துடிப்பும், கம்பீரமும் காட்டுகிறார் கிளாரி.

தலை அலங்காரம், உடை அலங்காரம் என்று கிளாரியைப் பார்த்து பின்பற்றவே அங்கு ஒரு பெண்கள் கூட்டமே இருக்கிறது.

கென்னடியின் மனைவி ஜாக்குலின் தலையீட்டதைவிட அதிகமாகவே அமெரிக்க அரசியலிலும் கிளாரி மூக்கை நுழைப்பதாக பரவலான குற்றச் சாட்டு இருக்கிறது.



## தாத்தா தங்கத்தாத்தா



[illegible] அங்குள்ள குழந்தைகளுக்கு நத்தார் [illegible]



ஜனாதிபதி கிளிண்டனின் செல்வாக்கை பாதுகாக்க கிளாரியின் வசீகரமும் உதவுகிறது என்று அரசியல் பார்வையாளர்கள் அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

உலகத் தலைவர்களோடு பரிச்சயம், பொது அரங்குகளிலும் தனது கணவரோடு தனக்குள்ள நெருக்கத்தை பளிச் சென்று புரியவைக்கும் ஸ்டைல் என்பவையெல்லாம் கிளாரியின் ஆளுமைக்கு மெருகேற்றுகின்றன.

மனைவி சொல்லே மந்திரம் என்று ஏன் நினைக்கக் கூடாது. அந்த மந்திரம் பலிக்கக் கூடிய மந்திரமாக இருக்கும் போது! என்று கேட்கிறார்கள் கிளிண்டனின் ஆதரவாளர்கள். கெட்டித்தனமான கேள்வி.



(படம் 1) சோதனை, தேடுதல் நடவடிக்கைகளில் தனிமனித கௌரவம் அடிக்கடி சேதப்படுத்தப்படுகிறது. திரும்பத் திரும்ப தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு அது.

## எங்கும் ஒரே கதை

← நிலமை தம் கட்டுப்பாட்டை மீறும்போது பாதுகாப்புப் பிரிவினர் பொறுமை இழந்து விடுகின்றனர். அது சோதனை நடவடிக்கைகளில் வெளிப்படுகிறது.

படத்தில் சோதனை நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருப்பது பெரு நாட்டில். எங்கும் ஒரே கதைதான்.

## உருக்குலைக்கும் உள்நாட்டுப்போர்



← (படம் 2) இந்தப் படத்தில் காணும் காட்சி வடக்கில் தோந்துவிடக் கூடாதே என்றுதான் நீங்களெல்லாம் நினைப்பீர்கள். ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் உற்பத்தி செய்த கொடுமைகளில் ஒன்று பட்டினி. யுத்தங்களில் ஈடுபடுவோர் எவரும் மக்களைப் பற்றி வாய் வலிக்கப் பேசிக்கொண்டாலும், ஒரு கட்டத்தில் மக்களை சுத்தமாக மறந்து போய்விடுகிறார்கள். அது ருவண்டாவுக்கும் பொருந்தும், தம் மாங்காயத் தீவுக்கும் பொருந்தும். நாடுகளுக்கிடையில் நடைபெறும் யுத்தங்களைவிட, ஒரு நாட்டுக்குள் நடைபெறும் யுத்தங்கள் நீண்டகாலம் நடைபெறுவதால் புண்கள் ஆறுவதற்குக் கூட சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. வெந்த புண்ணில் வேல்கள் பாய்ந்து கொண்டேயிருக்கும் போரில் கொடிது உள்நாட்டுப் போர்.



[illegible] தினமுரசு [illegible] 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.